7

# வேடிக்கை

பல்சுவை மாத இதழ்


டிசெம்பர் 2005

ரூ. 30.00



## தவமாய்த் தவமிருந்து ..!

சிறப்புப் பார்வை



## E-COMMERCE



## ஏன் வந்தாய் நீ ?
## எப்படி வந்தாய்...?




## இசையுலகின் புதுமை..
## இதந்தரும் இனிமை..

# இளம் பத்திரிகையாளர் பயிற்சித்திட்டம் -2006

*இளையவர்களே,*

உங்கள் திறமையை மெருகேற்றவும் அரங்கேற்றவும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

எமது பிரதேச இளைஞர்களிடையே புதைந்திருக்கும் ஆற்றல்களை பயனுள்ள வழியில் வெளிக்கொண்டு வரவும் அவர்களின் சமூக, இலக்கிய அக்கறையை பிரதிபலிக்கவும் எமது வேடிக்கை மாதஇதழ்

"இளம் பத்திரிகையாளர் பயிற்சித்திட்டம் - 2006" எனும் செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் பயிற்சியாளர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு எமது பத்திரிகையில் பயிற்சி நிருபர்களாகவும் படைப்பாளிகளாகவும் பங்குகொள்ள முடியும்.

நிபந்தனைகள்:- 25 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். பத்திரிகையில் அல்லது கலைத் துறையில் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.

உங்கள் சுயவிபரக் கோவையுடன் சுயவிலாசமிட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையுடன் உங்களின் சுய ஆக்கம் ஒன்றையும் நிழற்படம் ஒன்றையும் சேர்த்து விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: **31.01.2006**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**"இளம் பத்திரிகையாளர் பயிற்சித்திட்டம் – 2006"**

**வேடிக்கை**

**120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**

பத்திரிகையாளர்கள் - எழுதுகோல் ஏந்திய போராளிகள்..!.

# வேடிக்கை

பல்சுவை மாத இதழ்

கொண்டாட்டம் 01 கூத்து 07

## நவீன ஒலி அமைப்புக்கள்

## e ~ commerce

சினிமா விமர்சனம்

## தவமாய் தவமிருந்து...

## அப்பா ...

## தென்றல் வரும் தெரு

கவிதைத் தொடர்

## சுனாமி...

ஓர் பௌதிகவியல் கண்ணோக்கு

மானுடத்தின் வாடிக்கை - வேடிக்கை

## எங்கே செல்லும் இந்த பாதை......?

வணக்கம் வாசகர்களே ,

தமிழ்மக்கள் மீதான அடக்குமுறையும் அராஜகமும் யாழ் மண்ணில் மீண்டுமொருமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. சமூகத்தின் உயர் மட்டத்தில் இருக்கும் கல்வி மான்கள் மீதும் மாணவசமுதாயம் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவ வன்முறையானது நூலிழையில் தொங்கும் சமாதானத்தை துண்டிக்கும் கத்திரியாக மாறக்கூடும்.

பொங்கி எழும் மக்கள் படையின் தாக்குதலால் சினம் கொண்ட இராணுவம் இவ்வாறு நடந்து கொள்கிறது என சிலர் நினைக்கிறார்கள் . ஆனால் நடைபெறும் நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானிக்கையில் இது ஓர் திட்டமிட்ட செயற்பாடென உணரக்கூடியதாக உள்ளது. சாத்வீக முறையில் பல்கலை கழக மாணவர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்ட பேரணியை சடுதியாக வன்முறை மூலம் கலைத்த இராணுவத்தின் செயற்பாடானது இராணுவத்தின் தன்னிச்சையான செயற்பாடாக கொள்ளமுடியாது...

பல்கலை துணைவேந்தர் யாழ்மாவட்ட இராணுவத்தளபதியோடு தொடர்பு கொண்டு படைகளை விலக்க கோரியபோது என்னால் எதுவும் செய்யஇயலாது இது மேலிடத்து உத்தரவு, அரசியல் நடவடிக்கை என்ற சாரப்பட அவர் அழித்த பதிலானது எமது முடிவிற்கு ஆதாரமாக அமைகின்றது. அவ்வாறெனின் அரசின் நோக்கந்தான் என்ன?

விடை சுலபமானதுதான். அரசின் தேவை போர்! தமது தரப்பால் தொடங்கப் படாதிருக்க வேண்டும். மாறாக புலிகள் தரப்பால் போரை தொடங்கவைப்பதன் மூலம் சர்வதேச ஆதரவை தான்பெற்று அதன் மூலம் தமிழன் உரிமைப்போரை அடக்கலாமென கணக்கு போடுகிறது இலங்கை அரசு. இது புலிகளுக்கும் புரிந் துள்ளது. அதனால்தான் இயல்புக்கு மாறாக பொறுமையும் சகிப்புத்தன்மையும் வெளிப்படுத்துகிறது புலிகள் இயக்கம் . ஆனால் இந்த அரசியல் காய்நகர்த்தல்களில் பாதிக்கப்படுவது சாதாரண மக்களின் உயிர்கள் மட்டுமல்லது யாழ்ப்பாண சமுதாயத்தின் கல்விவளர்ச்சியும்தான்.

தொடர்ச்சியான பகிஸ்கரிப்புக்கள் ஊர்வலங்கள் கதவடைப்புக்கள் தாக்குதல் கள் போன்றவற்றால் மாணவர்களது கல்வி மீதான நாட்டம் குறைந்து கொண்டு டிருக்கிறது. விரைவில் இதற்கு தீர்வு காணப்படாதுவிடின் எதிர்காலத்தில் கல்வியற்ற ஒரு சமுதாயம் எம்மிடையே தோன்றுவது தவிர்க்கமுடியாததாகிவிடும். அரசு புலிகள் மக்கள் விரைவில் வரவேண்டும் ஒரு தீர்விற்கு.

**வேடிக்கையின் வேண்டுகை இதுவே!**



மீண்டும்...

# என்று தொலையும் இந்த கௌரவம்?

மனசுக்குள் வெறுமைதான்
நினைப்பது நடக்காதபோது!
தெரிந்து செய்த பிழைகள்
அன்று சுகமாக....!
இன்று சுமையாக...!
சூனியப்பிரதேசத்தில்
தெரிகின்ற மௌனங்களாக
என்னுள் சூழ்ந்து கொண்டது.
யார் அரவணைப்பும் இல்லாமல்
தனிமரமாய் நான் தவித்து.....
போர்க்கால அந்தரங்கங்கள்
எனக்குள்!
வாழ்க்கையின் முடிவுகளை
எண்ணிப்பார்க்க வெறுத்து
செய்வது தெரியாமல் மனசு
துடித்தது....
அனாதைகள் என்றால்
வலிக்கின்ற மனசு,
இன்று நான்
அனாதையாக பிறக்காததற்காய்
வலித்தது..!
யார் யாரிடம் தோற்பது
எனத் தெரியாமல் - நானே
என்னுள் முட்டிக் கொண்டேன்!
பெண் என்றால்
ஏலம் போடும் குடும்பம்,
அவள் மனசை அறியாமல்
கலியாணப் பந்தலில்
வியாபாரம் பேசுவதும்
ஜாதி என்ற போர்வையில்
முட்டையில் மயிர் பிடுங்குவதும்
சீதனம் என்ற போர்வையில்
சின்னத்தனம் செய்வதும்
புரியவில்லை எனக்கு...
இதில் என்ன கௌரவம்
தெரிகிறது என்று!
ஆனால்-
பணத்தோடு பெண்ணையும்
கொடுப்பதில்தான்
பெற்றோர்களின் மனசு
நிறைகிறது ஏனோ..?
மாற்ற முடியாத இந்த
சமூகத்தின் கோட்பாட்டால்
அன்று தொட்டு இன்று வரை
தொடரும் கொடுமைகள்....,
புதிது புதிதாக
தற்கொலைகளை
கண்டுபிடிக்கும் காதலர்கள்,
சொந்த இடங்களைவிட்டு
ஓடிப்போகும் ஜோடிகள்,... என்று
இதனாலும் மாற்றமடையாத
பிற்போக்கு தனங்களுடன்
இன்றும் பெற்றோர்...!

என்னுள் வாட்டும் துன்பத்தில்
ஏதேதோ நான் புலம்புவது
வாடிக்கை!
மனசுடன் நான் தினம் பார்க்கும்
வேடிக்கை
இக்கொடுமைக்கு பதில் கிட்டுமா
நாளைக்கு...
கிட்டின் இப்படைப்பே அதற்கு
காணிக்கை....!!!

ஏக்கத்துடன் காதலுக்காக,
சுகந்தம்.

# குத்துச் சண்டை 6

-வீமன்

## ஜோன் ஜாக்ஸன் (JOHN JACKSON)


இந்த ஜாக்ஸன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே கல்லூரி அளவிலான குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகளைச் சேர்த்துக் கொண்டார். அப்போதே அவரை ஒரு சாம்பியனாக மதித்தது கல்லூரி. கல்லூரிச் சாம்பியனாகக் கொடிகட்டிப்பறந்த ஜாக்சன் 1788இல் கல்லூரிக்கு வெளியேயும் சாம்பியனாக வலம் வர விரும்பினார். அந்தச் சூழலில், பர்மிங்காமைச் சேர்ந்த பில் ஏ..ஃ.பியூட்டரெஸ் என்ற வீரரைக் கோதாவில் சந்தித்தார் ஜாக்சன். அந்தப் பர்மிங்காம் வீரர், பேட்டை ரவுடி என்ற பட்டத்துடன் குத்துச் சண்டைச் சாம்பியனாகவும் பெயரெடுத்தவர். அவரை வெல்லுவது அவ்வளவு எளிதல்ல என்ற ஓர் வதந்தியும் காற்றுவாக்கில் மிதந்து கொண்டிருந்தது. அதைக் கேள்வியுற்ற ஜாக்சன், பியூட்டரெல்லுடன் மோதிப்பார்க்கத் தீர்மானித்தார். அவர்கள் இருவருக்கும் போட்டி ஏற்பாடாயிற்று. அந்தச் சமயத்தில் ஜாக்ஸன் 19 வயது இளைஞராயிருந்தார். இருப்பினும் அவர்களுக்கிடையே குத்துச்சண்டைப் போட்டி ஏற்பாடாகி, அது 1788 ஜூன் 9 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த கிராய்டன் மாநிலத்திலுள்ள ஸ்மித்தம் பாட்டம் என்ற பகுதியில் போட்டி நடந்தது. அந்தப் போட்டியைக் காண, பெரிய இடத்திலிருந்து பெரும் புள்ளிகள் ஏராளமாகக் கூடியிருந்தனர். வேல்ஸ் இளவரசரும் அவர்களுள் ஒருவராய் இருந்தார்.

அந்தப் போட்டியில் ஃபியூட்டரெல்தான் வெற்றி பெறப் போகிறார்என்றே அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்களின் கணிப்பைப் பொய்யாக்கி விடுவது போல ஓர் அதிசயம் நடந்தது. 1 மணி 47 நிமிடங்களாகக் கடுமையாக நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் இறுதியாக ஜாக்சன், எதராளியை நொக்அவுட் செய்தார். ஆஜானு பாகுவான ஃபியூட்டரெல் மலையே சாய்ந்தது போலத்



தரையில் வீழ்ந்தார். ஆக அப்போட்டியில் ஜாக்சனே வெற்றியடைந்தார்.

அந்த வெற்றியைத் தொடர்ந்து 1789 மார்ச் 12 ஆம் நாளன்று, ஜோர்ஜ் இங்கிர்ஸ்டன் என்பவருடன் மோதினார். ஆனால் அப்போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. அதற்குக் காரணம், போட்டி தொடங்கி 20 நிமிடங்களில் ஜாக்சனின் காலில் முறிவு ஏற்பட்டது. அதனால் அவர் அன்று முதலே ஓய்வு பெறும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டு ஆண்டுக்குப் பின்னர் கிளம்பிய ஒர கூப்பாடுதான் ஜாக்ஸனை கோதாவில் இறங்கும் படியாக நிர்ப்பந்தித்தது. மெண்டோஸாவை வெற்றி கொள்ளக் கூடியவர் எவருமே இங்கிலாந்தில் இல்லையா என்று கிழம்பிய அந்தக் கூப்பாட்டைக் கேட்ட ஜாக்ஸன் துள்ளியெழுந்தார். அந்த ஸ்பானிஸ் வீரனை வெல்லக் கூடியவன் இதோ இருக்கிறேன்




என்றுமார்தட்டி புறப்பட்டார் ஜாக்ஸன் .

1795 ஏப்ரல் 15 ஆம் நாளன்று எஸக்ஸ் மானிலத்தில் ஹார்ன் சர்ச் பகுதியில் அந்தப் போட்டி நடந்தது. அதை ஒரு ரோசமான குத்துச் சண்டைப் போட்டியென விளம்பரப் படுத்தியிருந்தனர்.

அதற்கேற்றவாறுதான் அந்தப் போட்டியும் இருந்தது. நான்காவது சுற்றில் ஜாக்சன் தனது நொக் அவுட் டினால் மெண்டோஸாவை வீழ்த்தி வெற்றி வாகை சூடினார். அன்று முதலே ஜாக்சன் சாம்பியன் பட்டதாரியாக உயர்ந்தார். ஆம், உலகக் குத்துச்சண்டை சாம்பியனாக விழங்கிய மெண்டோஸாவை தோற்கடித்தார். அவரது சாம்பியன் பட்டம் ஜாக்சன்முடியை அலங்கரிக்கத் தொடங்கியது. அதற்குப் பிறகு ஜாக்ஸன் குத்துச்சண்டை உலகிலிருந்து ஓய்வு பெறலானார்.

ஆயினும் அவரால் ஓய்ந்திருக்க முடியவில்லை. குத்துச்சண்

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்.)

# சுனாமி...

## ஓர் பௌதிகவியல் கண்ணோக்கு

*2004 டிசெம்பர் 26 ஆம் நாள் மக்கள் உல்லாசமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அமைதியான தொரு ஞாயிற்றுக்கிழமை. தென்னாசிய நாடுகளின் கடலோர வாழ் மக்களின் வாழ்க்கையில் மறக்கமுடியாத கரிநாள் அது. அந்த நாள் உலக வரலாற்றில் மறக்கமுடியாதவொரு சோக நாளாக மாறிய துன்ப நிகழ்வை இன்றும் பலர் எண்ணி மனம் குமுறுகின்றனர். **Tsunami** என்ற சொல்லைக் கேட்டறியாத மக்களுக்கு அச்சொல் மறக்கமுடியாதவொரு சொல்லாக மாறியது. சுனாமி பற்றி அறிந்திராத எமக்கு அன்றுதான் அதன் கொடூரம் தெரிய வந்தது.....*

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவின் அருகே கடலின் அடியில் ஏற்பட்ட பயங்கர புவிநடுக்கத்தின் காரணமாக உருவாகிய சுனாமி எனும் பேரலை தென்னாசியா நாடுகளின் கடலோரத்தில் வாழ்ந்து வந்த ஏறத்தாழ 280,000 மக்களைப் பலிகொண்டது. ரிட்சர் அளவில் 9.0 எனப் பதிவுசெய்யப்பட்ட இந்த புவி நடுக்கம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உக்கிரமானதாக இருந்தது.

மதிப்பிடமுடியாத அளவு உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்திய இச் சுனாமி முந்திய காலங்களில் ஏற்படுத்திய வரலாற்றழிவுகளை மழுங்கடிக்கச் செய்துள்ளது என்றால் மிகையாகாது. அந்த வகையில் சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள், அதன் விளைவுகள், அவற்றுடன் தொடர்புடைய பௌதிகவியல் கோட்பாடுகள் பற்றி அறிந்திருத்தல் நன்மை தருமாகையால் அவை பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

### சுனாமி (Tsunami) என்றால் என்ன ?

சுனாமி (Tsunami) எனும் ஜப்பானியச் சொல் "துறைமுக அலை" (Harbour wave) எனப் பொருள்படும். "tsu" என்பது துறைமுகத்தையும்

கு.நிருத்தன், யாழ் இந்துக் கல்லூரி.

## ஆர்ப்பரித்தாலும் எம் அன்னையவள்...

கடல் தாயே ! -நீ
எம் உணர்வில் என்றும்
கலந்திருக்கும்
'உப்பானவள்" என்றுதான்
நாம் நினைத்திருந்தோம்
ஆனால் ........ நீ
எம்மை நரபலி எடுப்பதிலும்
தயக்கமற்றிருக்கும்
'தப்பானவள்" என்று
புரிந்து கொண்டு
ஓராண்டு கடந்ததை
உள்ளம் மறுக்கிறது....
தெய்வமான பெற்றோரை,
உயிரான பிள்ளைகளை,
வாழ்வை பகிர்ந்திட்ட
துணையை,
நாளெல்லாம் நம்பின் வாழ்ந்த
தோழனை, தோழியை,- இந்த
அன்பின் அஸ்திவாரங்களை
யெல்லாம்
உரிமை சொல்ல நாதியற்று
அநாதைப் பிணங்களாக
அடுக்கி அர்ப்பணித்து
பன்னிரு திங்கள் பறந்ததை
உள்ளம் மறுக்கிறது....
'சிறு நண்டு மணல் மீது

"nami"என்பது அலையையும் குறிக்கும். முன்னைய காலங்களில் சாதாரண மக்களால் இவ்வலைகள் சந்திர, சூரியர்களின் ஈர்ப்பு சக்தியினால் ஏற்படும் வற்றுப்பெருக்கவலைகள் (Tidal waves) எனவும், விஞ்ஞானிகளால் புவிநடுக்கக் கடலலைகள் (Sesimic sea waves) எனவும் அழைக்கப்பட்டது. சுனாமி யின் தாக்கத்தின் அளவில் சூரியன், சந்திரனின் ஈர்ப்புச்சக்தி ஓரளவு செல்வாக்கு செலுத்துமா யினும் சுனாமி ஏற்படுவதற்கு இதில் நேரடித் தொடர்பில்லை. மேலும் முன்னைய காலங்களில் விஞ்ஞானிகளால் உபயோகப் படுத்தப்பட்ட "புவி நடுக்க கடலலைகள்" (Sesimic sea waves) என்ற சொற்பிரயோகமும் தவறான கருத்தைத் தருவது. ஏனெனில் சுனாமி ஏற்படுவதற்கு புவி நடுக்கம் மட்டும் காரணமாக அமைவதில்லை.

சுனாமி என்பதற்கு - நீரில் (பொதுவாகச் சமுத்திரத்தில்) ஏற்படும் கணத்தாக்கக் குழப்பம் (Impulisive disturbance) காரணமாக நீர் நிரல் தொகுதியொன்று மேல் நோக்கி நகர்த்தப்படுவதால் உருவாக்கப்படும் அலைத்தொடர் அல்லது தொடர்ச்சியான அலைத் தொடர்- என வரைவிலக்கணம் கூறலாம்.

### சுனாமியை உருவாக்கக்கூடிய நிகழ்வுகள்

சுனாமி ஏற்படுவதற்கு பல இயற்கை, செயற்கை நிகழ்வுகள் காரணமாயமைகின்றன. அவையாவன:

1. புவி நடுக்கங்கள்
2. எரிமலை வெடிப்புக்கள்
3. கடல் படுக்கையில் ஏற்படும் நிலச்சரிவுகள்
4. கடலடியில் ஏற்படும் எரிமலை வெடிப்புகள்

5. விண்கற் தாக்கங்கள்

6. அணுகுண்டுப் பரிசோதனைகள்.

பெரும் புவி நடுக்கங்களுடன் 2வது,3வது, 4வது இயற்கை நிகழ்வுகளும் பெரும்பாலும் சேர்ந்து ஏற்படுவதால் அவை சுனாமியின் வலுவை அதிகரிக்கவும் மேலதிக சுனாமிகள் உருவாகவும் காரணமாகின்றன.

சுனாமியின் உருவாக்கம் ஒரு புவிநடுக்க செயற்பாடு. ஆனால் அலைகளின் செலுத்துகையும் நடத்தையையும் அலைக்கொள்கையின் மூலமே விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே சுனாமியை விளங்கிக் கொள்வதற்கு முதலில் புவியின் கட்டமைப்பு, நிலநடுக்கம், எரிமலை போன்றன எவ்வாறு ஏற்படுகின்றன என்பது பற்றியும் அலைகளின் நடத்தைகள் பற்றிய பௌதிகவியல் விளக்கங்களையும் அறிவது அவசியமாகிறது.

## புவியின் அடுக்குக் கட்டமைப்பு

புவியின் மத்திய பகுதி உள்ளகம் (Inner Core) எனப்படும். இப்பகுதி 13gcm$^3$ அடர்த்தியும், 1300km தடிப்பும் (ஆரையும்) உடைய திண்மம். புவி மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 6370km ஆழத்தில் உள்ள இவ்வுள்ளகத்தின் வெப்பநிலை 4000$^0$C. அழுத்தமோ ஏறத்தாழ நான்கு மில்லியன் வளிமண்டல அமுக்கம்.

உள்ளகத்தைச் சுற்றி உருகிய நிலையில் காணப்படுவது வெளியகம் (Outer Core). இதன் தடிப்பு 2080km.

வெளியகத்தைச் சூழ நடுவுறை (Mantle) எனும் 2900km தடிப்புடைய பகுதி காணப்படுகின்றது. இது மக்னீசியம், இரும்பு போன்ற உலோகங்கள் செறிந்த சிலிக்கேட்

படமொன்று கீறும்
சில வேளை அலை வந்து
அதைக் கொண்டு போகும்"
மகாகவி கண்ட நண்டுகளின்
கீறலாகிக் கலைவடிந்து,
கடற்கரை மணல் வெறுத்து,
இதமான தென்றலை மறந்து,
துடிப்புடன் துடிப்பையும் இழந்து
வருடமொன்று கடந்ததை
உள்ளம் மறுக்கிறது...
'அலை வந்து தாலாட்டும்
சிறுதீவை" அபகரிக்க
வீறுகொண்டு நீயெழுந்தாய்...
சொந்தங்களை நீ
சுருட்டிக் கொண்டதால்
எம்மை அந்நியமாக்கி
அடங்கி போனாய்.
உன் தாலாட்டின்றி
உறங்க மறுக்கும் விழிகளை,
உன் 'சுனாமி" அலைகள்
விரட்டத் தொடங்கி
ஈராறு மாதங்கள்



தொலைந்ததை
உள்ளம் மறுக்கிறது...
கனவுபோல் கரைகடந்த
அலை பதிந்த சுவடுகள்,
உலகையே உலுக்கிய
சுனாமி தந்த தடயங்கள்,
'மனிதம்" வாழ்வதை
வானளவு எழுப்பிய
நிதர்சனங்கள்- இவை
பலியான உயிர்களுக்கு
பதிலாகிய உண்மைகள்
எனினும்......
உன்னால் அன்று
உருப்பெற்று- இன்று
உளசலனகின்ற
உயிரும் உளமும்
இவற்றை
ஏங்க மறுக்கிறதே!
இதுதான்
செஞ்சோற்றுக் கடனோ???
அன்னையே ! உன்
ஆக்ரோஷம் தணிந்ததால்
மீண்டும் பிறந்திருக்கிறோம்!
பிஞ்சுப் பாதங்களை
வஞ்சிப்பதை மறந்து!
வளர்த்தெடுத்தமை உயர்த்தி விடு

அ. இராஜரூபினி
யாழ் பல்கலைக் கழகம்

கனிமங்களாலான செஞ்சூடான கோளவோடு. நடுவுறையின் சுமார் 250km தடிப்புள்ள மேற்பகுதி இளகியபாகுக்கோளம் (Asthenosphere) எனப்படும்.

இக்கோளத்தில் பாறைகள் ஓரளவு உருகி திரவப்படை பதார்த்தத் துகள்களிடையே பரந்திருக்கும்.

செஞ்சூடான நடுவுறையின் உட்பகுதியும், ஓரளவு உருகிய நிலையிலுள்ள இளகிய பாகுக்கோளமும் நடுவுறையை இளகுகின்ற பிளாஸ்ரிக் தன்மை உடையதாக்குகின்றது. நடுவுறையின் மேலே புவியின் புறணி (Crust) எனப்படும் புறமேற்பகுதி அமைந்துள்ளது. புறணி பாறை மண்டலம் (Lithosphere) எனவுமழைக்கப்படும். இது கண்டங்கள், சமுத்திரங்கள், கடற்படுக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

புறணியின் தடிப்பு ஏறத்தாழ 12km முதல் (ஆழ் சமுத்திரம்) 60km வரை (மலைகள்) வேறுபடும். புறணியானது குறைந்த வெப்பநிலையிலமைந்திருப்பதால் விறைப்புடையதாயமைந்து இளகிய பாகுக்கோளத்திலிருந்து வேறுபடுகிறது.

## பாறை மண்டலத் தட்டுகள்

பாறைமண்டலமானது உடைவற்ற கருங்கற்பாறை கோளவோடாகவன்றி 12 அல்லது அதற்கு மேற்பட்ட பல துண்டுகளின் (தட்டுகளின்) சேர்க்கையாக அமைந்துள்ளது. இத் தட்டுகள் பூமியின் புறணியை மட்டுமன்றி நடுவுறையின் ஓரளவு மேற்பகுதியையும் உள்ளடக்கியிருக்கும். அதாவது பாகுக்கோளத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியிருக்கும். இத்தட்டுகள் 50-100km

தடிப்பானவை. இவை பாகுக்கோளத்தில் ஒரு வருடத்தில் 1-12cm என்ற வீச்சத்தில் அமைந்த வேகத்தில் நகர்ந்த வண்ணம் உள்ளன.

இத்தட்டுகள் கண்டங்களையும் சமுத்திரங்களையும் சமுத்திரப் படுக்கைகளையும் சுமந்து கொண்டு பாகுகோளத்தில் மிதக்கும் தெப்பம் போல் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் நகர்ந்த வண்ணம் உள்ளன. இத்தட்டுக்கள் சிலவிடங்களில் ஒன்றையொன்று நோக்கியும், வேறு சிலவிடங்களில் விலகியும் நகர்கின்றன. மேலும் ஏனைய மிதக்கும் பொருட்கள் போலவே இத்தட்டுகளின் பாரம் கூடிய பகுதிகள் அமிழ்ந்தும், பாரம் குறைந்த பகுதிகள் மேலெழுந்தும் செல்லும்.

இரு தட்டுக்கள் ஒன்றோடொன்று பொருந்தும் வளைவான பகுதி தட்டு எல்லை (Plate Boundary) எனப்படும். இரு தட்டுகள் தொடுகையுறும் போது பாரம் குறைந்த தட்டிற்கு மேலாக பாரம் கூடிய தட்டு வழுக்கிச் செல்ல முடியும்.

சில இடங்களில் இத்தட்டுகள் ஒன்றையொன்று மோதும் போது ஒரு தட்டு மற்றையதை மேல்நோக்கித் தள்ளும். இவ்வாறான மோதுகையின் விசையால் பாறைகள் மேற்தள்ளப்பட்டு மலைகள் உருப்பெறுகின்றன. உதாரணமாக இந்திய உபகண்டத் தட்டும் ஆசியத் தட்டும் ஒன்றையொன்று மோதியதால் இமாலய மலைகள் தோன்றின. இத்தட்டுகள் இன்னும் ஒன்றையொன்று நோக்கி நகர்வதால் இமயமலை இன்னும் வளர்ந்த வண்ணம் உள்ளது.

## புவி நடுக்கங்கள் (Earthquakes)

சில புவிச்சரித முறைகளால் ஏற்படும் மிகை அழுத்தம் காரணமாக, பூமியின் மிகவும் ஆழமான உட்பகுதியில் அமைந்த பாறைகள் அமுக்கப்படுவதால் பாரிய சக்தி வெளிப்பாட்டுடன் அவற்றில் வெடிப்புகள் ஏற்படுகின்றன. இவ்வாறு வெளிவிடப்படும் சக்தியானது பல அணுகுண்டுகள் வெடிக்கும்போது வெளிவிடப்படும் சக்தியின் அளவிற்கு சமமானது!. இச்சக்தியால் புவி மிகவும் உக்கிரமாகவும்






சில சமயம் மூர்க்கமாகவும் அதிரும் தோற்றப்பாடே புவிநடுக்கமாகும்.

இதுவன்றி புவித் தட்டுக்களின் மேற்பொருந்துகை அல்லது உராய்வு, எரிமலை வெடிப்பு, விண்கல் மோதுகை, அணுகுண்டு வெடிப்பு போன்றவற்றின் போதும் பெருமளவு சத்தி வெளிவிடப்பட்டு நிலநடுக்கம் ஏற்படலாம்.

பெரும்பாலான புவிநடுக்கங்கள் புவித்தட்டெல்லைகளிலேயே ஏற்படுகின்றன.

முன்னர் குறிப்பிட்டது போன்று ஒன்றையொன்று நோக்கி நகரும் இரு புவித்தட்டுகள் மோதுகையுறுவதன் காரணமாக அவை விகாரமுற்று ஒன்றிலொன்று வழுக்கும். அல்லது ஒன்றுக்கொன்று சார்பாக கிடையாக அல்லது நிலைக்குத்தாக நகரும். இந்நிகழ்வுகளால் புவியின் புறணியில் வெடிப்பேற்படுகிறது. நகர்வு சிறிதாயமைந்தாலும் வெளிவிடப்படும் விகார சக்தி மிகப்பாரியது. இச்சக்தி அதிர்ச்சி அலைகளாக மாற்றமுறுகிறது.

எங்கு வெடிப்பு ஏற்பட்டு பாறைகள் உடைந்து புவி அதிர்ச்சி அலைகள் தோற்றுவிக்கப்படுகின்றதோ அப்புள்ளி புவிநடுக்கத்தின் மையப்புள்ளி (Focus) எனப்படும்.

## புவி நடுக்க அலைகள் (Seismic Waves)

புவிநடுக்கத்தின் காரணமாக இருவகை அதிர்வுகள் - புவிநடுக்க அலைகள் - உருவாகின்றன:

1) மேற்பரப்பலைகள் (Surface waves) - இவை புவிமேற்பரப்பில் நகரும்.

2) உடல் அலைகள் (Body waves) - இவை புவியின் ஆழமான உடற் பகுதியூடாக நகரும்.

இப் புவி நடுக்க அலைகள் 15000km/மணிக்கு மேற்பட்ட வேகத்தில் செலுத்தப்படுவதால் அவை கட்டடங்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தும் அளவிற்கு சக்தி வாய்ந்தவையாகக் காண ப்படும்.

## புவி நடுக்கத்தை அளவிடுதல்

புவிநடுக்க அலைகளை உணரவும் பதிவு செய்யவும் அளவிடவும் Seismometer எனும் கருவி உபயோகப்படுத்தப்படுகிறது. Seismogram எனும் கருவி புவிந டுக்க அதிர்வுகளைத் தொடர்ச் சியாக பதிவு செய்யப் பயன்ப டுத்தப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்யப்படும் Seismogram ஆனது புவிநடுக்கத்தின் வலிமை, மையப் புள்ளி, வெளிவிடப்பட்ட சக்தியின ளவு என்பவற்றை அறிய உதவு கின்றது.

## ரிச்டர் அளவு

ரிச்டர் எனப்படும் அளவீடா னது 1935 ஆம் ஆண்டு கலிபோர் னியா தொழில்நுட்ப நிறுவகத்தை சேர்ந்த Dr சார்ளஸ் F.ரிச்டர் (Dr Charles F.Ritchder of California Institute of Technology) என்பவரால் உருவாக்கப்பட்டது.

ரிச்டர் அளவீடானது உயர் அல்லது இழிவுப் பெறுமானங் களைக் கொண்டிருப்பதில்லை. இற்றைவரை கணிப்பிடப்பட்ட உயர் ரிச்டர் பெறுமானம் 9 ஐ விட உயர்வானது. இது புவிநடுக்கத்தின் வலிமையை கணிதரீதியாக ஒப்பி டுவதற்கு உதவும் அளவீடாகும்.

ரிச்டர் அளவீட்டில், புவிய திர்வின் பருமன் M ஆனது பின்வரும் சமன்பாட்டின் அடிப்படை யில் எடுத்துரைக்கப்படுகிறது:

$$M=\log(A/T)$$

**A**- நில இயக்கத்தின் உச்சவீச்சம் (மைக்கிரன்களில்)

**T**- ஆதிக்கம் செலுத்தும் அதிர் வலையின் அலைவுகாலம் (செக்கன்களில்)

இதைப் போன்று புவிநடுக் கத்தின் அளவை நுட்பமாக அளவிடுவதற்கு மேலும் பல சமன் பாடுகள் உள்ளன.

## நிலநடுக்கம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ள நாடுகள்

நிலத்தட்டு எல்லைகட்கு அண்மையாக இருக்கும் நாடுகள், நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியக்கூறு உயர்வாக உள்ள நாடுகளாக காணப்படுகின்றன. உதாரணமாக யப்பானிய தீவுகள், பிலிப்பைன்ஸ்,

சுமாத்திரா போன்றவற்றை குறிப் பிடலாம்.

இலங்கையானது இந்திய - அவுஸ்திரேலியா நிலத்தட்டு எல்லைகளில் இருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளது. இதனால் எம்மில் பலர் இலங்கை யில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை எனக் கருதுகின்றனர். எனினும் தற்கால புவியியல் ஆய்வு களின்படி இந்திய- அவுஸ்திரேலிய நிலத்தட்டானது பிளவுறுவதாக நம்பப்படுகின்றது. இப்பிளவானது இலங்கையின் தென்மேற்கு கரையிலிருந்து 300km தொலை வில் அமையக் காணப்படுகின்றது. அளவில் மிகப்பெரியதான இந்திய அவுஸ்திரேலியா நிலத்தட்டானது ஆசிய நிலத்தட்டுடன் மோதும் போது உருவாகும் உயர் விகாரத் தினாலேயே இத்தட்டு பிளவடைவ தாகக் கருதப்படுகின்றது. எனவே இலங்கையில் நிலநடுக்கம் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகளை இலகு வில் நிராகரித்துவிட முடியாது.

## எரிமலைகள்

பொதுவாக உயிர்ப்புள்ள எரிம லைகள் பின்வரும் பிரதேசங்களில் காணப்படும்:

(1) சமுத்திரப் படுக்கைகளில் புவியின் ஆழமான பகுதிகளிருந்து அமுக்கிப் பலவந்தமாகப் புறந்தள்ளப்படும் புறணிப்பகுதிகள். (உதாரணம் : அயர்லாந்தில்)

(2) கண்டங்களின் சில புறணிப் பகுதிகள் புவியினுள் மறையும் இடங்கள்.
(உதாரணமாக தென் அமெரிக்க ஆண்டெஸ் மலைகள்)

எரிமலையென்பது புவியின் புறணியில் காணப்படுமொரு துவா ரம். இத்துவாரத்தினூடாக, புவியின் ஆழமான பகுதியில் காணப்படும் உருகிய வெப்பப் பாறைகள் வெளி த்தள்ளப்படும். எனவே எரிமலை கள் பூமியினுள்ளே உருவாகும் அமுக்கத்தை வெளிவிடும் பாது காப்பு வால்வுகள் போன்று செயற்ப டுகின்றன.

புவியினுள்ளே உருகிய நிலையில் காணப்படும் வெப்பமான பாறைகள் மக்மா (Magma) எனப் படும். எரிமலை வெடித்து மக்மா வெளியேறும்போது அது லாவா என அழைக்கப்படுகிறது. உருகிய நிலையில் லாவா ஏறத்தாழ 1200°C வெப்பநிலையு டையதாகக் காணப்படும். இது புவிமேற்பரப்பில் குளிர்வடைந்து இறுக்கமடைகிறது.

உலகத்தில் உள்ள அனேகமான (500-600) எரிமலைகள் நிலத்தட்டுக்களின் எல்லைகளி லேயே காணப்படுகின்றன. மேலும் பல சமுத்திரங்களின் அடியில் அமைந்துள்ளதால் நமது கவன த்தை ஈர்ப்பதில்லை.

(மிகுதி அடுத்த இதழில்.)

# வாசகர் முகங்கள்

கடந்த வேடிக்கை இதழில் இடம்பெற்ற கறைகளை போக்க எனும் ஆக்கம் புதுமையாகவும் நகைச்சுவையாகவும் இருந்தாலும் அதை ரசிக்க முடியவில்லை. காரணம், ஒரு பெரிய இழப்பைக்கண்ட ஒரு பெண்ணின் வேதனையை வேடிக்கையாக்கிவிட்டதால்.....?

A.P.சிந்துஜா, யாழ்ப்பாணம்

எனது கவிதை 'தென்றல் வரும் தெரு" தொடராக பிரசுரிக்க முன்னறிவிப்பு செய்துள்ளது அறிந்தேன். உங்கள் இதழில் இவ்வாறு படைப்பதில் மிக மகிழ்ச்சி. அனைத்து அம்சங்களுடனும் கொழிக்கிறது வேடிக்கை. என்றும் அன்பு வேடிக்கைக்கு என் நல்வாழ்த்துக்கள்.

தீபச்செல்வன், கிளிநொச்சி.

நான் எதிர்பார்த்ததிற்கு மேலாகவே தரமாக அமைந்திருக்கிறது வேடிக்கை. அதிலும் மாத இதழாக மாற்றம் பெற்றபின் அதன் கனமும் கூடியிருக்கிறது. தொடருங்கள் உங்கள் பணியை. அதிகமாக அறிவியல் ஆக்கங்களிற்கு இடமளிப்பதோடு போட்டிகளையும் நடத்துங்கள். என்றும் எனது ஆதரவு உங்களுக்கு இருக்கும்.

ஜே. ராஜகோபால், கோண்டாவில்

அண்மையில்தான் வேடிக்கையின் அனைத்து இதழ்களையும் நான் பார்த்தேன். நல்ல முயற்சி . பத்திரிகைதுறையில் சிலகாலம் நானும் இருந்தவள் என்ற முறையில் இதிலுள்ள சிரமங்கள் எனக்கும் தெரியும். ஆயினும் சிரமத்தை பாராது சிரத்தையாக மேலும் பொலிவோடு வேடிக்கை வெளிவர எனது வாழ்த்துக்கள். விமர்சனத்தோடு மட்டுமல்லாது இனிவருங்காலங்களில் என் பங்களிப்பையும் நல்குகிறேன்.

பசீனா, கண்டி

தரம் மட்டும் இருந்தால் போதுமா..? நேரகாலத்துக்கு வெளிவிடவேண்டுமென்ற எண்ணம் இல்லையா..? இப்பிடியே போனால் வேடிக்கையின் நிலமை வேடிக்கையாகிவிடும்..யூ

கு.இராஜரஞ்சினி, கிளிநொச்சி.



# மந்திரமா...? தந்திரமா...? 7

-லட்டு

வணக்கம் அன்பர்களே,

இதுவரை நாம் கற்று வந்த மந்திர வித்தைகளுக்கு வலுசேர்க்கும் வகையிலான மேலும் சில முக்கிய வித்தைகளை இவ்விதழ் முதல் பார்க்கவிருக்கிறோம். சாதரணமாக இவற்றை செய்து பார்ப்பது ஆபத்தாக முடியலாம். தகுந்த அறிவுள்ள பெரியவர்களின் துணை யுடன் இவற்றை செய்து பார்க்க வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற பின் சக்தி வாய்ந்த சாமியார்களாக நீங்களும் மாறிவிடலாம் ஹி..ஹி...

சில வித்தைகளுக்கான அடிப் படை தந்திரங்களை மட்டுமே நான் சொல்லித் தருகிறேன். அவற்றை உங்கள் மச்திரவித்தைகளுக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதும் சந்தர்ப்பங்களை உருவாக்கி கொள்ளுவதும் உங்கள் சாமர்த் தியத்தை பொறுத்ததே ....யூ

சரி, இனி இன்றைய வித்தை என்னவெனப் பார்ப்போம் .

## வெடிக்கும் தேங்காய் .....! வடிக்கும் இரத்தம்.......!

தேவைப்படும் பொருட்கள் சிறிதளவு சோடியம் (Na), சிவப்பு மை, தேங்காய், நீர் மற்றும் மல்லிகைப் பு'க்கள் சில மட்டுமே.

முதலில் தேங்காய் எடுத்து அதன் முடியை சேதமுறாமல் கழற்ற வேண்டும். அதன் போது தென்படும் தேங்காயின் கண் ஒன்றை துளையிட்டு அதன் வழியே சில மல்லிகை பு'க்களையும் சிவப்பு மையையும் உட்செலுத்த வேண்டும். அதன் பின் அந்த துவாரத்தை அடைத்து விட வேண்டும்.

நிகழ்ச்சி தொடங்கும் சற்று நேரத்திற்கு முன்பாக தேங்காயின் முடிப்பகுதியில் சோடியத்தை தகுந்தவாறு மறைத்து வைத்துவிட வேண்டும். சரி, இனி மந்திர வித்தையை தொடங்கலாம்,..

பக்த கே(ா)டிகளிடம் இது மந்திரம் செய்யப்பட்ட தேங்காய் என்று வாய்க்குவந்தபடி பில்டப் பண்ணி விடுங்கள்....... பின்னர் நீரினை எடுத்து சிறிது அருந்தி விட்டு (அது நீர்தான் என பார்ப்போர் நம்புவதற்காக... ) அதை

தேங்காயின் மீது (முடியின் மீது..) விடுங்கள்..

நீர் பட்டதும் தேங்காய் வெடிக்கும்.... (நீங்கள் பயந்துவிடாதீர்கள்...) வெடித்த தோங்காயிலிருந்து மல்லிகைப் பு'க்கள் குருதி வடிந்த படி சிதறி விழும் (சிவப்பு மையின் உதவியினால்...) தேங்காயிலும் மைவடிந்து இரத்தம் வடிவது போல் தெரியும். பார்க்கும் பக்தர்கள் வியப்பில் மட்டுமில்லாமல் பயப்படவும் செய்வார்கள்.

சரி, இதற்கான காரணம் என்ன வெனப் பார்ப்போம்யூ

நீர் விடப்படும் போது முடியினுள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சோடியம் நீருடன் இரசாயனவியல் தாக்கத்திற்கு உட்படும். இதன் போது சோடிய மானது வெடிக்கும்.

$$Na + H_2O \longrightarrow N_2OH + H_2$$

இதன் காரணம் சோடியத்துடன் சேர்த்திருக்கும் தேங்காயும் வெடிப்புக்கு உட்படும்.

சோடியம், நீர் தாக்கமானது சக்தி வாய்ந்ததும் அபாயகரமானது மாகும். எனவே இதை பயன்படுத்துகையில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

இனியென்ன, இது போன்று பலவித பொருட்களில் வெடிப்புக் களை ஏற்படுத்தி பார்ப்பவர்களை மிரளவையுங்கள்.......யூ

(அதற்காக வெடிகுண்டு தயாரிக்கும் அளவுக்கு போய்விடாதிர்கள் .. மூலகாரணம் நானென்று என்னை பிடித்துவிடுவார்கள்.யூ)

## Tips

**உதவியாளர்**

நாம் வித்தை காட்டுவதற்கு நமக்கு மிகத்திறமையான சில உதவியாளர்கள் தேவை. அடுத்துதடுத்து நாம் என்ன செய்யப் போகின்றோமென குறிப்புணர்ந்து எம் கண்யாடைகளை புரிந்து செயற்படும் திறமையுடைய உதவியாளர்கள் கிடைத்தால் எமது வித்தைகள் சிறப்பாக அமையும். வெகுவிரைவாக திட்டமிடப்பட்டு நிகழ்ச்சிகளை சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஏற்பாடுசெய்யும் தகமையுடையவர்களாக இவர்கள் இருக்கவேண்டும்.

நாம் செய்யும் அத்தனை வித்தைகளின் இரகசியங்களும் இவர்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். சிரித்த முகத்துடன் இவர்களும் எம்முடன் சேர்த்திருப்பதுடன் நாம் பார்வையாளர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் நம் உதவியாளர்கள் பல இரகசியமான வேலைகளை நுட்பமாக செய்து முடிந்து விட வேண்டும். இவ்வாறான உதவியாளர்களை தாயாரிப்பது மிக அவசியம்.

# செல்லும் இடமெல்லாம்

**-குகபல்ஸ்**

**7**

**த**ன்னிதயம் முன்னே சென்று கண்மறையும் வரை சயிற் ஸ்ராண்டிலே நிற்பது கூடத் தெரியாமல் வைத்த கண் வாங்காமற் பார்க்கத் தொடங்கியவன் அவள் அழகுருவம் ரியூட்டரிக்குள் நுழைந்து மறைந்ததும் சுதாகரித்தான். வீதியில் செல்லும் மற்றவர்களின் வினோதப் பார்வை வேறு வெட்கச் செய்தது. ஹெல்மட்டின் வைசரை மூடிக் கொண்டவன் கியரை மாற்றிக் கொண்டு ஆர்முடுகலானான்.

'என்னை உயிரோடு பார்க்க வேணுமெண்டா நில்லுங்க'' என்ற திவ்யாவின் குரல் உள்ளத்துள்ளே எதிரொலிகளாகிக் கொண்டிருந்தது. சற்றுமுன் நடந்தவை யாவும் கனவுலோகக் காட்சிகளாயே இன்னும் இருந்தது. உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. வாகனத்தின் வேகத்தில் அது பெரிதும் செல்வாக்குச் செலுத்திற்று. என்னதான் பல்கலை மாணவனாயினும் தென்னிந்திய சினிமாவின் நிஜத்துக்கு முரணான 'ஹீரோத்தனம்'' அவனையும் கூடப் பாதித்திருக்கின்றது என்னும் வேதனையான உண்மையைச் சித்தரிக்குமாப்போல் பறக்கத் தொடங்கினான். காதல் வசப்பட்டவர்கள் முன்னேறுவதற்கு அதுவே உந்துதலாகியிருக்கும் என்னும் உண்மையெல்லாம் பொய்யாகி இன்று காதலால் கவிழ்வது ஒன்றே நிஜம் என்று நிதர்சனமாக்கியது அவன் செயல்.

இவனது வாகனத்தின் வேகத்தைக் குறித்து ஏனைய தெருப்பாவனையாளர்கள் விசனமுற்றமையோ இவனை ஏசியவாறு சென்றமையோ இவன் கவனத்தை ஈர்ப்பதாகத் தெரியவில்லை. போனபோக்கில் பலாலி வீதியின் நெரிசலான போக்குவரத்தினூடே இவன் விபத்துக்குள்ளாகாது செல்வதே வியக்கக் கூடிய செயலாயிருந்தது.

றூமுக்குச் செல்வதற்காக சமிக்ஞை விளக்கைப் போட்டவன் இயந்திரம்போல் வண்டியைத் திருப்பினான். பக்கப் பார்வைக் கண்ணாடி என்ற ஒன்று இருப்பதனையே மறந்தவனாய் தன்பாட்டிற்கு திருப்பியவனை 'பீய்ங்'' என்ற ஒலி திடுக்குறச் செய்தது.

சில நொடியில் தன்நிலை உணர்ந்தவனைப் பின்பார்வைக் கண்ணாடியில் தெரிந்த காட்சி நிலைகுலைய செய்தது. விரைந்து வந்து கொண்டிருந்த இராணுவ அம்பியூலன்ஸ் வண்டியின் அசுரத்த னமான வேகம் சிந்திக்க இடம் கொடுக்கவில்லை. நினைவுச் சுழல் களில் சிக்கியே வந்தவனுக்கு முன்புற நிலை பார்த்து வண்டி ஓட்டும் திறன்தானேது? முன்னேயும் செல்ல வழியில்லை. வருவது வரட்டும் என்று வேகத்தை அதிக ரித்தவன் ஒழுங்கையின் திசையில் சடுதியாய் ஆர்முடுகினான்.

எகிறிற்று நாலைந்து 'கிறிக்" ஒலிகள். ஏகத்துக்கு எழுந்தன 'ஏனடா வீட்டிலை செல்லிப்போட்டு வந்தனியே?" 'வெறியிலயாடா வாறியள்.." 'கண்ணென்ன குறுடா தடியா" என்ற வாழ்த்துச் சொற் கள். அதைக் கேட்க அவன் நின் றால்தானே. தான் அடிபடவில்லை என்ப தை நம்பமுடியாதவ னாக ஒழுங்கை வழியே விரைந்து கொண்டிருந்தான். தனது செயற்பாட்டை எண்ண அவனுக்கு வெட்கமாக இருந்தது. சாதாரணமானவனாக



சாதாரண மாணவனாக தன்னை ஒருபோதும் எண்ணுவதில்லை. தன் செயற்பாடுகள் ஒரு இலட்சியத்திற் குட்பட்ட வட்டத்துள் அமைய வேண்டும் என எண்ணுவது அவன் இயல்பு.

இன்று தனது சிந்தனையற்ற செயற்பாடு எத்தனை பேருக்கு இடையூறாகியது. ஏன் ஆபத்தாகக் கூட ஆகி விட்டிருக்கலாம் என்ற நிஜம் அவனை நிலை குலையச் செய்தது. தங்கள் றூமை அடைந்தவன் மோட்டார் சைக்கிளை ஸ்ராண்ட் பண்ணி விட்டு, முன்புறம் இருந்த கதிரையில் தன் வழமையான பாணியில் அமர்ந்து கொண்டான். நேரம் 7.30 ஐத் தாண்டிக் கொண்டிருந்தது. மற்றவர்கள் அனைவரும் ஆங்கில வகுப்புக்குச்

சென்றிருந்தனர். திவ்யாத் தியானத்தில் இரண்டு தினங்களாக இவனது வகுப்புக்கள் யாவும் மட்டம் போட்டாகி விட்டது. வயிறு என்பதை இரண்டு தினங்கள் மறந்தே விட்டது. நினைவுச் சுழல்களில் சிக்குண்டு கிடப்பதும், திவ்யா வரும் பாதை பார்த்து தவம் கிடப்பதும் தொழிலாய் ஆனது.

இதுவரை அவன் வாழ்வில் இப்படி உணர்ச்சிகளை உ'ணர்ந்தறியான். ஏனையவர்கள் காதல் என்று பொழுதை வீணடிப்பதனைப் பார்த்து இது என்ன பைத்தியக்காரத்தனம் இப்படிப் பொழுதைப் போக்கி விடுகிறார்களே, இப்படி வீணாகிப் போகிறார்களே என்று விசனப்பட்டவன் இன்று அந்தச் சூழலிலே தானும் சிக்கிக் கொண்டு விட்டோமே என்று எண்ணியதும் ஒரு நிமிடம் செயலற்றுப் போனான். விழிகள் இலக்கற்று வெறித்தன. ஆனால் பார்வைப் புலன் செயலிழந்து விட்டிருந்தது. நான் வந்த நோக்கம் என்ன? எனது குடும்ப நிலை என்ன? ஏனைய மாணவர்க

## வாய்மையே வெல்லும்

எஸ். அனூராஜ்
வண்ணார் பண்ணை

சமாதான
பறவைகள் சிறகு
விரித்த வான வெளியில்
யுத்த மேகம் சூழ்கின்றனயூ
தூங்கியிருந்த
துப்பாக்கிகள்
துயில் எழுப்பப்
படுகின்றனயூ
சாம்பல் பு'த்த
தீயின் மீது
சமாதான நீர்
வார்ப்பவர்கள்
யாரும் இல்லையூ
எரிதலில்
இனவாதம்
எண்ணெய் வார்க்கின்றதுயூ
எரியப்போவதென்னவோ
அமைதி அல்லவாயூ
சாமாதான யாத்திரை
சென்று சேரும் இடம்
சுடுகாடாய்
இருப்பதில் இன்பம்
இல்லையூ
மலர் காடாய் இருந்தால்
பாதங்கள் கொஞ்சம் ஆறும்யூ
குண்டு துப்பும்
துப்பாக்கிகள்
வென்று தரப் போவது
வேதனைகளை மட்டுமேயூ
கொட்டப் போவது
போர் முரசாய் இல்லாமல்
நாளைய விடியலின்
பு'பாளமாய் இருக்கட்டும்யூ
அதி பயங்கர
ஆயுதம் வாய்மையே (நா)
பேசுங்கள்...
வாய்மை வெல்லட்டும்...யூ

ளுடன் மனோரீதியாகத் தாழ்ந்து விடக்கூடாதே என்று தன்னை ஒறுத்து, பல்சர் வாங்கித் தந்த தந்தை, மத்தியவர்க்கத்தின் எத்தனையோ பிரச்சனைகளின் மத்தியில் தங்கள் பிள்ளை முன் னுக்கு வருவான், என்று அதனைக் காணும் மகிழ்ச்சிக்காக வேதனை களைத் தாங்கிக் கொண்டிருக்கும் தாய் என்று அத்தனை விடயங் களும் அடையாள அணிவகுப்புப் போல முன்னே அணிவகுத்தன.

'பாதை மாறிவிட்டேனோ" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண் டான். உள்ளத்தே அவன் மனச் சாட்சி அவனைக் குற்றவாளிக் கூண்டில் கிரிமினல் குற்றவாளி யைத் குடைந்து கேட்கும் லாயரைப் போல் குறுக்கு மறுக்காகக் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தது. முதற் தடவை தவறு செய்தவன் மன்றில் ஏறியது போல் இவன் பக்கச் சாட்சி தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது.

நாடிநரம்பெங்கும் ரத்தம் ஓடியது. தொய்ந்து இருந்தவன் உடலில் மெல்ல நிமிர்வு ஏற்படத் தொடங்கிற்று. 'நான் என்ன தவறு செய்து விட்டேன்" 'யாரை நான் பாதித்து விட்டேன்" 'எதற்குக் கல ங்க வேண்டும்", 'முதல்ல எனக்கு என்ன தடுமாறுகிற வயசா அல்லது இது என்ன பருவக்கவர்ச்சியா பாதை மாற வைக்க? உண்மையான காதல். இது வழிகாட்டுமேயல்லாது வழிதவறவைக்காதே?", நானும் முன்னேறுவேன். அவளையும் முன் னேற வைப்பேன். என் முன்னேற்றத் துக்குப் பின்னணியாகத் திவ்யா இருப்பாள். இவ்வளவுதான். இதில் கலங்க என்ன இருக்கிறது? இந்த 2 நாள் முதல் நிகழ்வு என்பதனால் வந்த தடுமாற்றம். அவ்வளவு தான். இனி வாழ்க்கை ஒழுங்கைக் குலைய விடுவதில்லை. அதில் புதிய ஒரு நிகழ்வாக இதையும் சேர்த்துச் செயற்பட வேண்டியது தான், என்று வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட நிமிர்வோடு செயற்கை வேகத்தோடும் எழுந்து கொண்டவன் விரைந்து செயலாற்றத் தொடங்கினான்.

'சாப்பிடவேண்டும்" என்பது அப்போதுதான் நினைவுக்கு வந்தது. சாப்பிட்டுவிட்டு **GYM** ற்குப் போக வேண்டும். போனால் தான் கொஞ்சம் **Fresh** ஆக இருக்கும். என்று எண்ணியவாறு உள்ளே சென்றான். கண்ணாடியில் முகத் தைப் பார்த்து கொண்டவன் இரண்டு நாள் 'ஷேவ்" செய்யாது தாடைப் பகுதி கருமை பூசி கொண்டிருப் பதைக் கண்டு முதலில் 'ஷேவ்" எடுக்க வேண்டும் என்று எண்ணிய வாறு குளியல றைக்குச் சென் றான்.



*(செல்வோம்....)*

சுடுவோனின்

# நெத்தியடி

'ஏன்டா தம்பி, உவன் சின்னவன் நெடுக கொம்பியுட்டர் வேண்டி தா கொம்பியுட்டர் வேண்டி தா எண்டுகொண்டு நிற்கிறான்..... இன்டைக்கு பேப்பரில் பார்த்தன். 12000 கு ஒரு கொம்பியுட்டர் கிடக்குவெண்டு............ எனக்கென்ன தெரியும்.....நீ தான் போய் பார்த்து வேண்டி தாவண்டா...."

'ஓமன்ரி, நான் நாளைக்கு போய் பாத்து வேண்டித்தாறன்"

'இல்லையப்பு, இண்டைக்கு மட்டும் தான் அப்படி கிடைக்குமெண்டு போட்டிருக்காங்கள்"

'எங்கயன்ரி, எந்தக் கடையில்?"

'.................."

'அவயளின்ர விளம்பரமோ..... அப்ப ஆறுதலா போய் பார்க்கலாம்...........கொஞ்ச நாளைக்கு இன்று மட்டும் அல்லது இன்றும் நாளையுமெண்டு தான் போட்டு கொண்டிருப்பார்கள் ..... அப்படியே போனாலும் நீங்கள் நினைக்கிற மாதிரி உடன் எதுவும் கிடைக்காது...."

* * * * * * * *

'ஏன் தம்பி, இவ்வளவு காலமா நீங்களும் கொம்பியுட்டர், கொம்பியுட்டரெண்டு திரியிறியள் .... ஆனா என்னத்த சாதிச்சியள்.... அந்தப்பையனை மாதிரி ஏதாவது செய்திருக்கலாம் தானே..."

'என்னத்தையண்ண சொல்லவாறியள்"

அது அண்டையான் பேப்பரில வந்திச்சே 'யாழ் மண்ணில் முதல் முறையாக தயாரித்து வெளியிடப் படும் மென் பொருள் எண்டு ....அப்படி உங்களால ஏன் இவ்வளவு காலமுமா முடியேல்ல

'அட, போங்கண்ணா, யாழ்ப்பாணத்தில் இதுவரைக்கும் ஏராளமான மென் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வெளிவந்திருக்கு ..... சும்மா ஒரு விளம்பரத்துக்காக அவர்கள் 'முதல் முதலாய்" எண்டு போட்டா அதை அப்படியே நம்பிடறதா... இப்பவெல்லாம் முதன் முதலாய் எண்ட சொல்லுக்கே அர்த்தமில்லாமல் போச்சு..... உந்த விளம்பரங்களால...

* * * * * * * *

'O/L எடுத்து போட்டு என்ர மகள் கொம்பியுட்டர் படிக்க வேணுமெண்டு ஆசைப்படுகிறாள்..... இப்பதான் ஊருப்பட்ட கொம்பியுட்டர் சென்ரருகள் இருக்கே எதிலாவது நல்லதா பார்த்து சேர்த்து விடு தம்பி "

'நல்லதா பார்த்தெண்டா கொஞ்சம் கஷ்டம் தான்"

'ஏண்டாப்பு அப்படி சொல்கிறாய்"

'இல்லையக்கா, இப்ப எல்லா சென்ரர்களிலையும் போன வருஷம் படிச்சவைதான் இந்த வருஷம் படிப்பிப்பினம்பூ நிரந்தர Lectures எண்டு இருக்க மாட்டினம். அனுபவம் குறைந்தவர்கள் தான் இருப்பினம். அடுத்து எப்ப இழுத்து மூடுவினமெண்டு தெரியாது. உப்படிதான், எல்லா பள்ளிக்கூடங்களிலேயும் GIT Class எண்டு பிள்ளைகளிட்ட காசு வேண்டி தொடங்கின ஒரு நிறுவனம் Class களை இடையிலேயே விட்டுவிட்டு ஒரு அறிவிப்புமில்லாமல் மூடி போட்டினம். அந்தந்தப் பள்ளிக்கூட Principalகள்தான் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் பதில் சொல்ல தெரியாம தவிச்சுக் கொண்டிருக்கினம்"

'அப்ப ஒண்டையும் நம்பேலாதோ"

'சீ சீ அப்படி சொல்லவேலாது .. ஒண்டுரண்டு நல்ல இடங்களும் இருக்கத்தான் செய்யுது.. அதை இனம் காண்றதுதான் கஷ்டம்.

## நெத்தியடி

கணினி தொழில் நுட்பத்துறையில் யாழ் மக்கள் ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்களிற்கு மேற்கூறப்பட்ட 3 உதாரணங்களும் போதுமானதாகும். யுத்த நெருக்கடிகளிலும் அமைதியற்ற சூழலினாலும் நொந்து போயிருந்த எமது தேசம், உலகம் கணினியை கண்டு பிடித்து அதன் வளர்ச்சியின் கணிசமான பகுதி கழிந்த பிற்பாடுதான் அதனுடன் அறிமுகம் செய்து கொண்டது. இதன் காரணமாக பழைய தலைமுறை மக்களுக்கு கணினியுடனான பரிச்சயம் இல்லாமல் இருந்தது. இதனை சாதகமாக பயன்படுத்தி கொள்ளும் வர்த்தகப் புள்ளிகள் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் எமது மக்களை மோசடி செய்கிறார்கள் என்றே கூற வேண்டும்.

அண்மையில் யாழ் நகரிலிருந்து வெளியாகும் பிரபலப பத்திரிகை ஒன்றில் பெரியளவில் தொடர்ச்சியாக வெளிவரும் ஒரு நிறுவனத்தின் விளம்பரத்தைப் பார்க்கையில் அதன் நம்பகத்தன்மையில் சந்தேகமேற்பட்டது. இதை உறுதி செய்யும் பொருட்டு சில பொதுமக்கள் மூலமாக மேற்படி நிறுவனத்துடன் தொடர்பை மேற் கொண்டு தகவல்களை பெற்றுக் கொண்டோம். அந்த விளம்பரம் இதுதான்.




மேற்படி கணினியை உடனடியாக கொள்வனவு செய்யச் சென்ற எமது தொடர்பாளர்களிற்கு அவர்கள் கூறிய பதில், 'பணத்தை முழுமையாக செலுத்தி பதிவு செய்யுங்கள் 2 மாதமளவில் கணினியை நாம் உங்களுக்கு

தருவோம்" என்பதாகும். 'எந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாம் பணத்தை தருவது, வேண்டுமானால் திகதியிடப்பட்ட காசோலையை தருகின்றோம்" என்றபோது 'காசோலையை நம்பமுடியாது, பெருமளவு காசோலைகள் பணமின்றி எமக்கு திரும்பியிருக்கின்றன" என்றனர். (காசோலை பணமின்றி திரும்புதல் ஒரு கிரிமினல் குற்றமோசடி. இதை வழக்கு பதிவு செய்து பணத்தை பெற்றுக் கொள்ள முடியும். அப்படியிருக்கையில் காசோலையை ஏற்றுக் கொள்ள முடியாதென சொல்வதும் கூட இவர்கள் மீதான நம்பத்தன்மையை கேள்விக்குரியதாக்குகிறது)

'சரி, விளம்பரத்தில் 'இன்றும் நாளையும்" என குறிப்பிட்டு குறித்த கணினி 12000/= என போட்டிருக்கிறீர்கள், நேரில் வந்தால் 2 மாதம் பின்னர்தான் கணினியைத் தருவோம், உடனே வேண்டுமானால் 18000/= செலுத்துங்கள் என்கிறீர்களே இதுவே மோசடிதானே என்றபோது விளம்பரத்தில் விலைக்கு மேல் சேர்க்கப்பட்டிருந்த **'Upto"** எனும் சொல்லை சுட்டிக்காட்டி 12000 லிருந்து என்றே அர்த்தப்படும் என்றனர்.

ஆயினும் சாதாரணமாக இவ்வாறான விளம்பரங்களில் **'Upto"** எனக் குறிப்பிடப்படுவது கணினியின் தரத்தைத்தான் குறிப்பிடும். கணினி விநியோகிக்கப்படும் காலத்தையல்ல .. குறித்த கணினியொன்றின் தரத்தை பட்டியலிட்டு அருகில் 12000/= மும் குறிப்பிட்டு **'Upto"** இடப்பட்டிருப்பின் அதன் கருத்து குறித்த கணினி 12000 மும் அதற்கு மேற்பட்ட தர கணினி 12000 க்கு மேற்படவும் அமையும் என்பதாகும். இங்கு கணினி விநியோகிக்கப்படும் காலம் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறாயின் கணினி உடனே கொள்வனவு செய்யப்பட முடியுமென்றே கொள்ளமுடியும். மாறாக விநியோகத்தில் தாமதமேற்படுமெனில் கட்டாயம் அதனை குறிப்பிட்டிருக்க வேண்டும்.

18000/= செலுத்தி உடன் கொள்வனவு செய்யமுடியுமென சொல்லப்பட்ட கணினியும்கூட கொள்வனவு செய்ய கேட்டபோது இன்று மட்டும் என்ற அவர்கள் விளம்பரம் தொடர்ந்து வருவதை போல 'நாளைக்கு வரும்" என்று தொடர்ந்து இரு நாட்களாக எங்கள் தொடர்பாளர்களிற்கு தெரிவிக்கப்பட்டது.

இருமாதங்களின் பின் தரப்படும் கணினிகளுக்கு இப்போதே ஏன் 12000 செலுத்தவேண்டுமென கேட்டதற்கு 'சிலர் பதிந்து விட்டு வாங்காமல் விட்டுவிடுவார்கள், ஆனால் இம்முறையில் எத்தனை கணினிகள் தேவைப்படும் என்பதை நாம் சரியாக கணக்கிட முடியும்" என்றனர். மேலும் 'இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் முற்கூட்டியே கணினிப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்து எந்த கடையும் விற்பதில்லை... ஏதாவது கணினி வேண்டுமானால் பதிவு செய்து பணம் செலுத்தி சில நாட்களின் பின்பு தான் பெறமுடியும். நாட்டு நிலைமைதான் இதற்கு காரணம்..." என தங்கள்

செயற்பாட்டுக்கு வலுச்சேர்ப்பதற்காக தவறான தகவல்களை எமக்கு தந்த னர். (பிற்பாடு நகரில் பல கணினி விற்பனை நிலையங்களில் விசாரித்த போது அந்த தகவல் உண்மையற்றது. உடனடியாக கணினியை பெற்றுக் கொள்ள முடியும். என்பது எம்மால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.)

நாட்டு நிலமையை காரணம் காட்டி, மக்களிடம் முழுப்பணத்தை யும் வாங்குபவர்கள் அதே நாட்டு நில மைதான் மக்களுக்கும் இருக்கும், நில மை மோசமானால் அவர்கள் செலுத் திய பணத்திற்கு என்ன வழி என்பத ற்கு பதில் கூற மறுத்து விட்டார்கள்.

(எமது தொடர்பாளர்களின் சந்திப் பின் பிற்பாடு மறுதின விளம்பரத்தில் குறித்த காலப் பகுதிகள் குறிப்பிடப்ப ட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது)

இதேபோல், அண்மையில் யாழ் மண்ணில் வெளியிடப்பட்ட மென்பொ ருள் ஒன்றிற்கு விளம்பரம் செய்யப்பட்டி ருந்தது. மென்பொருட்துறையில் சாதிக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலில் நாம் பாராட்டு தெரிவித்தே ஆகவேண்டும். பிரச்சனை அதுவல்ல... அந்த விளம்பரத்தில் யாழ் மண்ணில் முதன்முதல் வெளியிடப்படும் ..என பெரியளவில் குறிப்பிடப்பட்டிருந்தது. சமகால வரலாற்றை பதிவு செய்கையில் இத்தகைய விளம்ப ரங்கள் தவறான தரவுகளை அத்த கைய பதிவுகளில் ஏற்படுத்திவிடக் கூடும். ஏனெனில் இதற்கு முன்பாகவே பலவித மென்பொருட்கள் யாழ் மண்ணில் வெளியாகியிருக்கின்றன. ஆர்ப்பாட்டமான விளம்பரமில்லாத மையால் அவை பலரிடம் அறிமுகமற் றிருக்க கூடும். அதற்காக அப்படி எதுவுமே வந்ததில்லை எனக் கூறுவது இதுவரை காலமாக யாழ் மண்ணில் வாழும் கணினி வல்லுனர்களை அவமானப்படுத்துவது போன்றதாகும்.

சுயகற்றலுக்கான மென்பொருட்கள், சிறுவர் தொகுப்புக்கள், பாடசாலை நிர்வாக கட்டமைப்பிற்கான மென்பொ ருட்கள், திருக்குறள் மென்பொருள் என பலவித மென் பொருட்கள் ஏற்கனவே யாழ்மண்ணில் இருந்து வெளிவந்து விட்டன. யார் செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல.. யாவருக்கும் பயன்பட வேண்டுமென்பதே முக்கியம்.

பல கணினி கல்வி நிலையங்களும் விளம்பரங்களில் போலியான மயக்க நிலை தோற்றுவிக்கும் தகவலை வழங்கி மக்களை குழப்புகின்றன. குறித்த கற்கை நெறிக்கான கட்டண மாக எந்த வித் அடிப்படை விலை நிர்ணயமுமின்றி தான்தோன்றித்தன மாக நிர்ணயித்துவிட்டு அடிக்கடி சலுகைகள் என்ற போர்வையில் 20%, 50%, 80%, OFF என விளம்பரப்ப டுத்துகிறார்கள். சிலர் புலமைப்பரிசில் திட்டம் என்று அறிவித்து பதிவுக்கட்ட ணத்தை உயர்த்தி விடுகிறார்கள்.

இவற்றுக்கு மத்தியில் கற்கைநெறி யில் இணையும் மாணவர்களுக்கு அது சரியான முறையில் போதிக்கப்படு கின்றதென்பதற்கும் உத்தரவாத மில்லை. சில வேளை கற்கைநெறி யின் காலம் முடியுமுன்னே கல்வி நிலையத்தின் காலம் முடிந்து விடும்.

காசையும் கட்டிவிட்டு பாதியில் மாணவர்கள் அலைக்களிக்கப்படுவார்கள்.

இவ்வாறுதான் யாழ் மண்ணில் இயங்கிக் கொண்டிருந்த பிரபல்யமான ஒரு நிறுவனம் இடைநடுவில் தன் நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டு விட்டது. இந்நிறுவனத்தை நம்பி அதன் தாயாரிப்பு மென் பொருட்களை கொள்வனவு செய்தவர்களும் கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டவர்களும் அதன் ஊழியர்களும் கூட இந்த முன்னறிவிப்பின்றிய மூடுகையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றை அவர்கள் எங்கு சென்று முறையிடுவது..?

இவற்றுக்கெல்லாம் தீர்வாக அமைய கூடியது,

இவ்வாறாக கணினி, கணினிசார் நிறுவனங்களிற்கான சங்கம் அல்லது ஒன்றியம் ஒன்று அமைக்கப்படவேண்டும். அச்சங்கமானது தரமற்ற தகுதியற்ற நிறுவனங்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதிக்கப்படுபவர்களின் முறைப்பாடுகளை ஏற்று தீர்வுகாண வேண்டும். மேற்படி நிறுவனங்களுக்கு தரநிர்ணயம் வழங்க வேண்டும். போலியான விளம்பரங்களை தடை செய்யவேண்டும். பத்திரிகைகளும் கூட கண்டபடி விளம்பரங்களை பிரசுரிக்காது அதன் நம்பகத்தன்மையை மக்கள் நலன் கருதி ஆராய்ந்து பிரசுரிக்க வேண்டும்.

தீர்வுகள் இல்லையேல்..

சுடுவானின் சுட்டுவிரல் மீண்டும் நீளும்....

**-சுடுவான்**

---

குத்துச் சண்டை...(தொடர்ச்சி)

டைப் பயிற்சிக்கூடம் ஒன்றை தொடங்கினார் ஜாக்ஸன். மருத்துவராகப் பட்டம் பெற்றிருந்த ஜாக்சன் அத்தொழிலை கைகழுவிவிட்டு குத்துச்சண்டை கற்றுக்கொடுக்கும் பயிற்சியாளராய் மாறினார்.

அவரிடம் பயின்றவர்களில் ஒருவர்தான் புகழ்பெற்ற கவிஞர் பைரன். அவர் ஜாக்ஸனின் திறமையை வியந்து "கரமுஸ்டி யுத்தத்தின் பேரரசர்" என்று புகழ்ந்தார்.

குத்துச் சண்டைப் போட்டியிலிருந்த ஜாக்ஸனுக்கு அவ்வப்போது அரண்மனையிலிருந்து அன்பழைப்புக்கள் வந்து கொண்டிருந்தன. வெளிநாடுகளிலிருந்து மன்னர்கள், ராஜபிரமுகர்கள் என்று யாரேனும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யும் போது அவர்களை மகிழ்விக்கும் நோக்கத்தில் சிலர் ஜாக்சனை அழைத்து அரண்மனை அரங்கத்தில் குத்துச்சண்டைப் போட்டியில் கலந்துகொள்ளும்படி கோருவர். அந்தக் கோரிக்கைகளை தவிர்க்க முடியாதவராய் ஜாக்சஸன் ஒப்புக்கொள்வதுண்டு. ரஸ்யாவின் ஜார் மன்னர், பிரஷ்யாவின் அரசர் போன்றவர்களின் முன்னிலையில் சில சமயங்களில் ஜாக்ஸன் சண்டைசெய்து காட்டியிருக்கின்றார். இதனால் இவரை ஜெண்டில்மென் ஜாக்ஸன் என்று அழைத்தனர்.

-சண்டை தொடரும்..

# நவீன ஒலி அமைப்புக்கள்
# Modern Sound Systems

உலகில் அனைத்து ஜீவராசிகளினதும் அடி நாதமாய் விளங்குவது இசையாகும். அதிலும் மனித குலத்தின் அனைத்து வயதினராலும் விரும்பி இரசிக்கப்படுவது இசை என்றால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த இசையை ஒலிப்பதிவு செய்து பின் கேட்பது என்பது அத்தியாவசியமான ஒரு தேவையாகும்.



1877இல் முதன் முதலாக எடிசன் (Edision) அவர்களால் பன்னல் பதிகருவி (Phonograph or Gramophone) எனப்படும் ஒலிப்பதிவு கருவி கண்டுபிடிக்கப்பட்ட பின் ஒலியை பதிவு செய்யும் தொழில்நுட்பம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இத் தொழில்நுட்பம் ஆனது 1887இல் எமில் பேலினர் (Emil Berliner) என்பவரால் மேலும் மெருகூட்டப்பட்டது. இக்காலத்தில் மெழுகிலான ஓர் உருளையிலேயே ஒலிப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒலிப்பதிவு தரம் மிக மிக குறைவானது ஆகும்.

1920களில் 'Record Player' என அழைக்கப்படும் பெரிய வட்டத் தட்டில் ஒலியை பதியும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டது. ஒலிப்பதிவு துறையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது இவ் Record Player என்பதில் ஐயமில்லை. ஏனெனில் 1962இல் ஒலிநாடாக்கள் கண்டறியப்பட்ட பின்பும் திரைப்படத்துறையில் ஒலித் தட்டுக்களே கூடிய அளவில் செல்வாக்கு செலுத்தின. எனினும் ஒலித் தட்டு முறையில் பல குறைபாடுகள் (உதாரணமாக மீள இசைக்க பயன்படும் ஊசியானது ஒலித்தட்டை கீறுவதால் இவற்றின் ஆயுட்காலம் குறைவானது காரணமாக ஒலிநாடாக்கள் பிரபல்யம் அடையத்தொடங்கின. ஒலிநாடாக்களின் கையடக்கத் தன்மையும் நீண்ட பாவனையும், ஒலித்துல்லியமும் அவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளன.

ச.நடராஜசர்மா, யாழ் இந்துக் கல்லூரி.

தற்காலத்தில் கூட ஒலிநாடாக்களின் செல்வாக்கு குறைந்துவிடவில்லை எனலாம்.

1965இல் ஜேம்ஸ் ருசல் (James Russell) என்பவரால் 'Digital Recording' கண்டுபிடிக்கப்பட்டது. இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே இறுவட்டு (Compact Disk) எனப்படும் தற்கால CD களில் ஒலிப்பதிவு நடைபெறுகிறது. 'Laser' மூலம் ஒலிப்பதிவு நடைபெறும் CD க்கள் 1980 களில் முதன் முதலாக 'Philips' நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. கூடிய ஒலித்துல்லியமும் கூடிய கொள்ளளவும் உடைய CDக்களில் சாதாரணமாக 80நிமிட ஒலி ஒளிப்பதிவை மேற்கொள்ள முடியம். தற்கால CDக்களின் உயர்கொள்ளளவு 700MB ஆகும்.

1997களில் கண்டுபிடிக்கப்பட்ட DVD களின் வருகையோடு



CDகளின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. ஏனெனில் 'Digital Versatile Disk' எனப்படும் DVD களில் கிடைத்த மிகத் துல்லியமான ஒலி ஒளிப்பதிவும் அவற்றின் கூடிய கொள்ளளவும் ஆகும். சாதாரணமாக 4.7 GB கொள்ளளவு உடைய DVDயில் 133நிமிட ஒலி ஒளிப்பதிவை மேற்கொள்ள முடியும் DVD களின் வருகையின் பின்னரே Dolby, dts போன்ற நவீன ஒலிப்பதிவு தொழில்நுட்பங்கள் திரைப்பட திரையரங்குகளை விட்டு வீடு தேடி வரத் தொடங்கின.

நவீன ஒலிப்பதிவு முறைகளாக தற்போது பிரபல்யமாகியுள்ள Dolby, dts போன்றவற்றை ஆராய முன் ஒலிப்பதிவின் சில அடிப்படை அம்சங்களை அறிவது அவசியமாகும். அந்த வகையில் Mono, Stereo என்பன முக்கியமானவை.

## Mono – One Channel

இம் முறையில் ஒலியை பதிவு செய்யும் போது ஒரு மைக் மட்டும் பயன்படும். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஒலி ஒரு விரியலாக்கி (Amplifier) மூலம் விரியலாக்கப்பட்டு ஒரு ஒலிபெருக்கியின் (Speaker) மூலம் வெளிவிடப்படும்.

## Stereo – Two Channel

1950களில் கண்டுபிடிக்கப்பட்ட இம் முறையில் ஒலியை பதிவு

செய்யும் போது இடம் வலம் என இரண்டு Mic களை வைத்துத் தனித்தனியே ஒலிப்பதிவு செய்யப் பட்டு தனித்தனியே இருவேறு விரிய லாக்கிகள் மூலம் விரியலாக்கப்பட்டு இடம் வலம் என இரு ஒலிபெருக் கிகள் மூலம் வெளிவிடப்படும். இத னால் ஒலியை பதிவு செய்யும் இடத் திலேயே, கேட்பவர் நிற்பது போன்ற உணர்வு ஏற்படும். ஒலித்துல்லியம் அதிகமாகக் காணப்படும். இம் முறையில் ஒலியை நிரந்தரமான ஊடகங்களில் பதிவு செய்யும் போதும் தனித்தனி இரு பிரிவாகவே (Two track) பதிவு செய்யப்படும். மீள இசைக்கும் போதும் இரு ஒலி பெருக்கிகள் (Speaker) ஊடாக வழங்கப்படும்.

இவ்விரு முறைகளையும் விட மேலும் வளர்ச்சியடைந்த, ஒலியை முப்பரிமாணமாக தரக்கூடிய ஒலிப் பதிவு முறையே Dolby எனப்படும் ஒலி அமைப்பு முறை ஆகும்.

## Dolby

இவ் ஒலி அமைப்பு முறையானது 1970களில் 'Ray Dolby' எனப்படும் பொறியியலாளரி னால் கண்டுபிடிக்கப்பட்டது. அப் போது இது 'Dolby Surround' எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இது 'Analog signal' களாகவே பதியப்பட்டன. Digital முறைக்கு மாறும் வரை இவ் ஒலியமைப்பு



திரை அரங்குகளில் மட்டுமே பயன் படுத்தப்பட்டது.

1990களில் Digital தொழில்நுட் பத்திற்கு 'Dolby Surround' மாற்றப் பட்டது. இதனால் ஒலித்துல்லியம் மேலும் அதிகரித்ததுடன் வீடுகளில் பயன்படுத்தக்கூடிய CD களிலும் 'Dolby surround system' ஐ பதியக் கூடிய வசதி ஏற்பட்டது. இதனால் 'Home Theatre System' எனப்படும் 'Players' இன் ஆதிக்கம் அதிகரித் தது. பல போட்டி நிறுவனங்கள் மேலும் மேலும் புதுமைகளை புகு த்தி திரையரங்குகளில் கிடைக்க கூடிய வகையில் தரமான இலத் திரனியல் சாதனங்களைத் தயாரித் தன. அநேக சினிமா திரையரங்குக ளும் இம் முறைக்கு மாற்றப்பட்டன.

எடுக்கப்படும் சினிமா படங்களும் 'Dolby Digital' முறையிலேயே எடுக்கப்பட்டன. எனவே 'Dolby' ஆனது 1990 களில் ஒலியியலில் ஒரு புரட்சியையே எற்படுத்தியது எனலாம். 1997இல் இருந்து 'Dolby Digital' ஆனது DVD களில்

மட்டுமே பதியப்படுகிறது. DVDயில் பதிவதன் மூலமே இதன் முழுமை யான பயனை பெறமுடியம் ஏனெனில் DVD கள் CD களைவிட பல மடங்கு தரமானவை.

'Dolby Digital' இன் அதே தொழில்நுட்பத்திலேயே ஆனால் ஒரு 'Standard format' ஆக வெளிவந்த ஒலியமைப்பே 'Dolby Digital 5.1' ஆகும். அது 'Dolby' எனும் நிறுவனத்திற்குரியது அல்ல. 'dts 5.1' உம் உண்டு. இவை பற்றி பின்னர் ஆராயப்படும்.

## '5.1' Sound System

இது ஒரு நான்கு வழி ஒலிப் பதிவு முறையாகும். அதாவது ஒலியை பதிவு செய்யும் போது நான்கு ஒலி வாங்கிகள் வைக்கப்பட்டு Front, Left, Centre, Front Right, Rear Surround எனும் நான்கு 'Channel' களாக நான்கு 'Track' களில் பதிவு செய்யப்படும்.

மீள இசைக்கும் போது Decorders மூலம் ஒலியானது Left, Right, Front Left, Front Right, Centre, Subwoofer எனம் ஆறு Channel களாக பிரிக்கப்பட்டு ஆறு ஒலிபெருக்கிகளுக்கு (Speaker) அனுப்பப்படும்.

ஒவ்வொரு ஒலிபெருக்கி மூலமும் தனித்தன்மையான ஒலிகள் வெளிவிடப்படும். வெளிவிடப்படும் ஒலியின் தன்மைக்கு ஏற்ப ஒலி பெருக்கியின் (Speaker) அமைப்பும் வேறுபடும்.

## '5.1' என்றால் என்ன?

Centre, Front Left, Front Right, Left, Right ஆகிய ஐந்து ஒலி பெருக்கிகள் மூலம் 20 – 20000Hz வரையிலான மனிதக்காதால் செவிமடுக்க கூடிய அனைத்து ஒலிகளையும் வெளிவிட முடியும். ஆகவே அவை பூரணமானவை. எனவே அவற்றை குறிக்க '5' எனும் பதமும், 3Hz – 120Hz வரையான குறைந்த ஒலிகளை மட்டுமே வெளிவிடக்கூடிய Sub woofer பூரணமற்றது என்பதால் அதைக் குறிக்க '.1' எனும் பதமும் சேர்ந்து '5.1' என ஒரு 'Standard Mark' ஆக குறிக்கப்பட்டுள்ளது.

DIGITAL dts SOUND

Dolby நிறுவனத்திற்கு போட்டியாக உருவாகிய இன்னொரு 5.1 surrond system தான் **dts** எனப்படும் 'Digital Theatre system' ஆகும். எனினும் இதை 'Disk' களில் பதிவதற்கு 'Standard format' இல்லாமையால் இவற்றின் ஆதிக்

கம் சினிமா திரையரங்குகளிலேயே காணப்படுகிறது. இதை DVD யில் பதிய முடியும் எனினும் தரமாக பதிய முடியாது.

## dts ஐ விட Dolby யில் காணப்படும் அநுகூலங்கள்

திரையரங்குகளில் கிடைக்கும் ஒலித்துல்லியத்தை Dolby மூலம் வீட்டிலேயே பெறலாம்.

DVDயில் பதிவதற்கு Dolby யானது ஒரு 'Standard format' ஐ கொண்டுள்ளது.

Dolby முறை மூலம் 'Satellite' தொலைக்காட்சி ஒலிபரப்புகளை மேற்கொள்ள முடியும். dts இல் அவ்வாறு முடியாது.

GDTV(High Definition Television)ல் Dolby ஐ பயன்படுத்த முடியும். dtsஐ பயன்படுத்த முடியாது.

## Dolby ஐ விட dts கொண்டுள்ள அநுகூலம்

dts format இல் 'Sound track'ஐ பதிவு செய்ய குறைந்த இடம் போதும். ஆனால் Dolby ஆனது கூடிய இடத்தை பிடிக்கும். இதனால் DVD, dts முறையில் பதியும் போது தரம் குறைவாக இரப்பினும் கூடிய நேர ஒலி ஒளியை ஒரு disk இல் பதிய முடியும்.


dts இன் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பமான dts es மூலம் கேட்பவரின் பின்புறமும் ஒன்று அல் லது இரண்டு ஒலிபெருக்கிகள் வைக்கப்படும். பதிவு செய்யும் போது பின்புறம் பிரத்தியேக ஒலிவாங்கிகள் வைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். இதன் மூலம் இங்கு 5.1ஐ விட 'Back Channel' எனும் புதிய 'Channel' தோற்றுவிக்கப்படுகிறது.

பின்புறம் ஒரு ஒலி பெருக்கி (Speaker) வைக்கப்படின் அது 'dts es 6.1' எனவும் இரு ஒலி பெருக் கிகள் வைக்கப்படின் 'dts es 7.1' எனவும் அழைக்கப்படும்.

## போலியான '6.1', '7.1' கருவிகள்

தற்போது வெளிவரும் சில decorders களில் Matrix Encoding எனும் புதிய தொழில்நுட்பம் பயன் படுத்தப்படுகிறது. இத்தொழில் நுட்பத்தில் ஒலியை பதிவு செய்யும் போது '5.5format' இலேயே பதியப் படும். ஆனால் மீள ஒலிக்கும் போது 'Left, Right Channel'களில் இருந்து சிறு பகுதிகளை பிரித்தெ டுத்து Back Channel உருவாக்கப் பட்டு Back Speaker களுக்கு கொடுக்கப்படும். இம்முறையில் அமைந்த Player களில் Speaker களுக்கான இணைப்புக்கள் காணப் படும். ஆனால் இவை உண்மையில் '6.1', or '7.1' format இல்

அமைந்தவை அல்ல. ஆகவே '6.1', '7.1' இல் பதிவு செய்யப்பட்ட DVDகளை இவையால் வாசிக்க முடியாது. பொருட்களை வாங்கும் போது அவதானமாக இருத்தல் அவசியமானதாகும்.




## Home Theatre System ஒன்றை வீட்டில் பொருத்துதல்

தற்போது '5.1' format தான் கூடிய பாவனையில் உள்ளது. '6.1', or '7.1' என்பன பாவனை குறைவானது. எனவே நாம் Home theatre system ஒன்றை கொள்வனவு செய்யும் போது '5.1' format ஐ கொண்ட Home theatre system ஒன்றை கொள்வனவு செய்தல் போதுமானது. '5.1' ஐக் கொண்ட கருவிகளில் CD, VCD, DVD, MP3, SVCD, CD – 2, JPEG போன்ற அனைத்து Disk களையும் பயன் படுத்த முடியும்.

மேலும் வீடியோ (Video) வை பார்ப்பதற்கு இயன்றளவு பெரிய திரைகொண்ட தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றை கொள்வனவு செய்தல் வேண்டும். (LCD TV மிக பொருத்தமானது.)

ஒழுங்கு படுத்தும்போது தொலைக்காட்சிப் பெட்டிக்கு மேலே Centre speakerஐயும் தொலைக் காட்சிப் பெட்டிக்கு இரு மருங்கிலும் front left, front Right speaker களையும், front Right Speakerக்கு கீழே Sub woofer ஐயும் வைத்தல் வேண்டும். Left, Right speaker களை பொருத்தும் போது அறை யின் நீளத்திற்கு ஏற்ப எண்ணிக் கையை கூட்ட வேண்டும்.

அனைத்து Left speaker களையும் சமாந்தரமாக இணைக்க வேண்டும். அவ்வாறே எல்ல Right speaker களையும் சமாந்தரமாக இணைக்க வேண்டும். இதற்காக மேலதிகமாக speaker களை வாங் கும் போது Home Theatre System உடன் வழங்கப்பட்ட Speaker களுக்கு ஒத்த Speaker களையே வாங்க வேண்டும். வித்தியாசமான Speaker களைப் பொருத்தின் அனைத்து Speaker களின் ஒலித் தரமும் குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

எனவே இன்றைய நவீன ஒலிப்பதிவு மற்றும் ஒலியமைப்பு தொழில்நுட்பங்களை நாம் சரியாக புரிந்துகொண்டால் பூரணமான திருப் தியை பெறலாம் என்பதில் ஐய மேதுமில்லை.

● ஒரு பக்கத் தொடர்

# இருளின் நாயகர்கள்

## ஆக்ஷன் த்ரில்

7

-ஜேனா

நேரமும் நெருங்கிகொண்டிருந்தது. ஜீப் வடிவில் அபாயமும் நெருங்கிக் கொண்டிருந்தது. வெட்ட வெளியில் கிடந்த கார்த்திக், ராபட், மதனிற்கு எதுவுமே செய்யமுடியாத நிலை. பாதுகாப்பாய் நிலையெடுத்த ஏனையவர்களாலும்கூட எதுவும் செய்யவியலாத செயலற்ற நிலை.

ராபட் முடிவெடுத்து விட்டான். எதிரியின் பார்வையில் எப்படியும் தப்பமுடியாது. தம்மை எதிரி பிடித்தால் திட்டம் முழுதாகவே பிசுபிசுத்துவிடும். எதிரிக்கு முன்பாக தாமே முந்திக் கொண்டால் ஓரளவேனும் திட்டம் வெற்றியடைய சாத்தியமுண்டு. மனக்கணக்கை வேகமாக போட்டு முடித்த ராபட் கதிரை தொலைகருவியில் உயிர்பித்தான்.

'கதிர், வேறவழியில்லை..... தொடங்கட்டா?' கதிரின் பதில் நிதானமாக வந்தது. 'வேண்டாம், நீங்க அப்படியே படுத்துகிடங்க, எதிரி கண்டால் உடனே நாங்க தொடங்கிறோம். பிற்பாடு நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள்.'

கதிரின் திட்டம் கடைசி வரை பொறுமைகாப்பதாகவே இருந்தது. கிடைக்க கூடிய ஒரு சதவீத வாய்ப்பைக்கூட பயன்படுத்துவதென கதிர் முடிவெடுத்திருந்தான். அவன் எண்ணம் வீண் போகவில்லை.....

தங்களின் படைபலத்தில் பாதுகாப்பு முறைகளில் அதீத நம்பிக்கை கொண்டிருந்த எதிரியானவன் தங்கள் அருகில் தங்கள் மத்தியில் எதிர்குழு ஊடுருவியிருக்கும் என எதிர்பார்காத தன்மையால் அலட்சியமாக ஜீப் வண்டி இவர்களை கடந்து போனது.

ஜீப் வண்டியின் அரவம் ஓய்ந்ததும் ராபட்டும் கார்த்திக்கும் விரைவாக முன்னேறி கதிரின் இடத்தை அடைந்தனர். மதனும் விரைவில் அவர்களுடன் தன்னை இணைத்து கொண்டான்.

அடுத்த நகர்வு தான் இரகசியமானதும் இறுதியானதும் அபாயகரமானதுமாக இருந்தது. அந்த நகர்வும் வெற்றிகரமாக முடிந்து விட்டால் திட்டம் பூரண வெற்றியானதிற்கு சமன். ஆயினும் அது அவ்வளவு சுலபமானது இல்லை.

நள்ளிரவை அண்மித்த அந்த திகிலான இரவு இன்னும் சில மணி நேரங்களில் நடைபெறப்போகும் பெரும் நாசத்தை எதிர்பார்த்து நடுங்கிக் கொண்டிருந்தது.

ஊடுருவல்படை தம் இதயத்தினுள் குடிவந்துவிட்டதை உணராத எதிரிகள் வழமை போல் தம் கலகலத்த களியாட்ட நிகழ்வுகளோடு ஒன்றிப் போயிருந்தனர்.

கதிர் தமது இறுதிகட்ட நகர்வை



அமுல்படுத்த ஆரம்பித்தான். நாயகர்கள் மீது பட்ட காற்றால் நள்ளிரவுக்கும் குளிரெடுக்க தொடங்கியது.

(திரில் தொடரும்)

# கல்கியின் பார்த்திபன் கனவு.. 7

## அருள்மொழித் தேவி

பொன்னனும் வள்ளியும் உறையூர்க் கோட்டை வாசலுக்கு வந்த அதே சமயத்தில், ராணி அருள்மொழித் தேவி அரண்மனை உத்தியான வனத்துக்குள் பிரவேசித்தாள்.

பல்லவ தூதருக்கு மகாராஜா கூறிய பதிலை ஏவலாளர்கள் உடனே வந்து மகாராணிக்குத் தெரிவித்தார்கள். மன்னர் வரும் வரையில் பொழுது போக்குவதற்காக ராணி உத்தியான வனத்துக்குள் சென்றாள். அவ்வனத்தில் சண்பக மலர்கள் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மூலைக்குப் போய் அங்கே அமைதியாக பளிங்குக்கல் மேடையில் உட்கார்ந்து கொண்டாள்.

அங்கிருந்து பார்த்தபோது மேற்குத் திக்கில் சூரியன் அஸ்தமனமாய்க் கொண்டிருந்த காட்சி அடிமரங்களின் வழியாகத் தெரிந்தது. மேல் வானம் முழுவதும் பத்தரை மாற்றுத் தங்க விதானத்தைப் போல் தகதகவென்று பிரகாசித்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே தங்க நிறத்தின் சோபை மங்கிக் கொண்டு வந்தது. அடி வானத்தில் சூரியன் மறைந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் மேல் வானம் முழுவதும் ஒரே ரத்தச் சிவப்பாய் மாறிற்று. இந்தக் காட்சி அருள்மொழித் தேவிக்கு ரணகளத்தையும் அங்கே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதையும் ஞாபகப்படுத்திற்று. தேவி நடு நடுங்கிக் கண்களை மூடிக் கொண்டாள்.

மறுபடி அவள் கண்ணைத் திறந்து பார்த்தபோது, வெள்ளி நிலவின் இன்பக் கிரணங்கள் மரக் கிளைகளின் வழியாக எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்தன. ராணி உள்ளத்தில் பழைய ஞாபகங்கள், குமுறிக் கொண்டிருந்தன. பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னால் பார்த்திப மன்னனுக்கு மாலையிட்டு இந்த அரண்மனைக்கு அவள் வந்தாள். அந்த நாளிலிருந்து இம்மாதிரி வெண்ணிலவு பிரகாசித்த எத்தனையோ இரவுகளில் அவளும் பார்த்திபனும் இந்த உத்தியான வனத்தில் கைகோத்துக் கொண்டு உலாவியதுண்டு. இந்தப்

பளிங்குக்கல் மேடைமீது உட்கார்ந்து இருவரும் நேரம் போவதே தெரியாமல் இருந்ததுண்டு. அந்த நாளில் பார்த்திபன் சில சமயம் புல்லாங்குழல் கொண்டு வந்து இசைப்பான். அருள்மொழி மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பாள்.

கண்ண பெருமானே பார்த்திபனாக உருக்கொண்டு வந்து மணம் புரிந்ததாக எண்ணிப் பூரிப்படைவாள். இப்படி சில காலம் வாழ்க்கையே ஓர் இன்பக் கனவாகச் சென்று கொண்டிருந்தது.

பிறகு விக்கிரமன் பிறந்த போது இன்ப வாழ்க்கையின் சிகரத்தை அவர்கள் அடைந்தார்கள். அதே உத்தியான வனத்தில் அதே பளிங்குக் கல்லின்மீது குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சியதெல்லாம் அருள்மொழிக்கு நினைவு வந்தது.

ஆஹா! அந்த ஆனந்தமான நாட்கள் அப்படியே நீடித்திருக்கக் கூடாதா?

ஆனால் எப்படியிருக்க முடியும்?

பார்த்திபனுடைய இருதயத்தின் அடிவாரத்திலே சொல்லமுடியாத வேதனையொன்று பதுங்கிக்கிடந்து அவனுடைய நெஞ்சை அரித்துக் கொண்டிருக்கையில், அவர்களுடைய ஆனந்த வாழ்க்கை எப்படி நீடித்திருக்க முடியும்? பார்த்திபனுடைய இந்த அந்தரங்க வேதனையை வெகுகாலம் கழித்தே அருள்மொழி அறிந்தாள். அறிந்தது முதல் அந்த வேதனையில் அவளும் பங்கு கொண்டாள். அதற்குத் தானே காரணமோ என்று எண்ணி எண்ணி மனம் நொந்தாள்.

ஆமாம் அவர்களுடைய கலியாணத்தின்போதே அந்தக் காரணமும் ஏற்பட்டு விட்டது.

அருள்மொழி, சேர வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசன் மகள். அந்த நாளில் அவளைப் போல் சௌந்தரியவதியான ராஜகுமாரி இல்லையென்று தென்னாடெங்கும் பிரசித்தியாகியிருந்தது. அவளைப் பார்த்திபனுக்கு மணம் செய்விக்க ஏற்பாடுகள் நடந்த பிறகு,



காஞ்சி மகேந்திரவர்ம சக்கரவர்த்தி யிடமிருந்து சேர மன்னனுக்குத் தூதர்கள் வந்தார்கள். பட்டத்து இளவரசர் நரசிம்மவர்மருக்கு அருள் மொழியைத் திருமணம் முடிக்க விரும்புவதாகச் சக்கரவர்த்தி செய்தி அனுப்பியிருந்தார். அருள்மொழியின் உற்றார் உறவினருக்கெல்லாம் இது பெரிதும் சம்மதமாயிருந்தது. ஆனால் அருள்மொழி அதற்கு இணங்க வில்லை. பார்த்திப சோழரையே பதியாகத் தம் மனத்தில் வரித்து விட்ட தாகவும், வேறொருவரை மணக்க இசையேனென்றும் கண்டிப்பாய்ச் சொன்னாள்.


மகேந்திர சக்கரவர்த்தி மிகவும் பெருந்தன்மையுள்ளவராதலால் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. இளவரசர் நரசிம்மவர்மருக்குப் பாண்டியன் மகளை மணம் முடித்து வைத்தார்.

பார்த்திபனுக்கும் அருள்மொழிக்கும் மணம் நடந்த பிறகுதான் பார்த்தி பனுக்கு மேற்கூறிய சம்பவம் தெரிய வந்தது. அவர் சில சமயம், "நீ சாம்ராஜ்ய சக்கரவர்த்தினியாய் காஞ்சி சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டியவள் அதற்கு மாறாக, இந்த உள்ளங்கை அகல சோழ ராஜ்யத் திற்கு ராணியாயிருக்கிறாய்" என்று சொல்வதுண்டு. முதலில் இதை ஒரு விளையாட்டுப் பேச்சாகவே அருள் மொழி எண்ணியிருந்தாள். நாளாக ஆக, தன் பதியினுடைய மனத்தில் இந்த எண்ணம் மிக்க வேதனையை அளித்து வந்தது என்று தெரிந்து கொண்டாள். அதைப் போக்குவதற் காக அவள் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. விக்கிரமன் பிறந்ததிலிருந்து மகாராஜாவின் அந்தரங்க வேதனை அதிகமாகியே வந்ததாகத் தெரிந்தது. ஒரு சமயம் அவர் "உன் வயிற்றில் பிறந்த பிள்ளை ஒரு பெரிய சாம்ராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தியாயிருக்க வேண்டி யவன். என்னாலல்லவா இன்னொரு வருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசு அவனுக்கு லபிக்கிறது!" என்பார். இன்னொரு சமயம், "அருள்மொழி! உன் பிள்ளைக்கு என்னால் சாம் ராஜ்யப் பட்டாபிஷேகம் செய்து வைக்க முடியாது. ஆனால் வீரத்தந்தையின் புதல்வன் என்ற பட்டத்தை நிச்சயம் அளிப்பேன்!" என்றார்.

அவருடைய வாக்கை நிறைவேற்றும் சமயம் இப்போது வந்துவிட்டது. பழைய காலத்து வீர பத்தினிகளைப் போல் அவருடன் தானும் உயிர் விடுகிறதாயிருந்தால் பாதகமில்லை. அந்தப் பாக்கியத்தை யும் தனக்கு அளிக்க மறுக்கிறாரே? தான் வீரத்தாயாக இருந்து விக்கிர மனை வீர மகனாக வளர்க்க வேணு மாமே? ஐயோ, அவரைப் பிரிந்த பிறகு உயிரைத்தான் தாங்க முடியுமா?

இப்படி எண்ணியபோது அருள்மொழிக்கு நெஞ்சு பிளந்து விடும் போலிருந்தது. திடீரென்று

அழுகை பீறிக் கொண்டு வந்தது. "ஓ!" வென்று கதறி விட்டாள்.



"அருள்மொழி! உன்னை வீர பத்தினியென்றல்லவா நினைத்தேன்? இவ்வளவு கோழையா நீ?" என்று கழனமான குரலில் கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பார்த்திப மகாராஜா அங்கு நின்றார். உடனே அவளுடைய அழுகை நின்றது. கண்ணீரும் வறண்டு விட்டது.

"வா! அரண்மனைக்குப் போகலாம்! அழுவதற்கும் சமாதானப்படுத்துவதற்கும் இப்போது நேரமில்லை" என்றார் மகாராஜா.

இருவரும் கைகோத்துக் கொண்டு வாய் பேசாமல் அரண்மனைக்குள் போனார்கள்.

பார்த்திபனும், அருள்மொழியும் அரண்மனைக்குள் பிரவேசித்து, பூஜாக்கிரஹத்துக்கு வந்தபோது தீபாராதனை நடக்கும் சமயமாயிருந்தது. பூஜாக்கிரகத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. இடது பக்கத்தில் பார்வதி தேவியின் அற்புதச் சிலை ஒன்று இருந்தது. தேவியின் இருபுறத்திலும் விநாயகரும் முருகக் கடவுளும் வீற்றிருந்தார்கள். இன்னொரு பக்கத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேதரான மகாவிஷ்ணு தரிசனம் தந்தார். எல்லா விக்கிரகங்களும் சண்பகம், பன்னீர், பாரிஜாதம் முதலிய மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தெய்வ சந்நிதியில் இளவரசர் விக்கிரமன், கைகூப்பிய வண்ணம் நின்று ஆராதனையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அர்ச்சகர் தீபாராதனை செய்து மூவருக்கும் பிரஸாதம் கொடுத்து விட்டு வெளியே சென்றார். விக்கிரமன் மகாராஜாவைப் பார்த்து, "அப்பா! சித்திர மண்டபத்துக்குப் போகலாம் என்றீர்களே?" என்று கேட்டான். "இதோ நான் வருகிறேன் விக்கிரமா! நீ முன்னால் போ!" என்றார் மகாராஜா.

விக்கிரமன் வெளியே சென்றதும், மகாவிஷ்ணுவின் பாதத்தினடியில் வைத்திருந்த நீளவாட்டான மரப்பெட்டியை மகாராஜா சுட்டிக் காட்டிச் சொன்னார்:-

"தேவி! அந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது என்று என்னை நீ பல தடவை கேட்டிருக்கிறாய். நானும் 'காலம் வரும் போது சொல்லுகிறேன்!' என்று சொல்லி வந்திருக்கிறேன். சொல்ல வேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. சோழ வம்சத்தின் புராதன பொக்கிஷம் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கிறது. இதோ திறந்து காட்டுகிறேன் பார்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே மகாராஜா அந்த மரப்பெட்டியைத் திறந்தார். பெட்டிக்குள்ளே பளபள வென்று ஜொலித்த ஓர் உடைவாளும் ஓர் ஓலைச்சுவடியும் காணப்பட்டன. உடைவாளின் பிடி தங்கத்தினாலானது. இரத்தினங்கள் இழைத்தது. வாளும் எண்ணெய் பூசிக் கூர்மையாய்த் தீட்டி வைத்திருந்தது. ஆகவே பிடியும் வாளும் ஒன்றோடொன்று போட்டியிட்டு ஒளி வீசின. இதற்கு மாறாக, ஓலைச்சுவடியோ மிகப் பழமையானதாய்க் கருநிறமாயிருந்தது.

பார்த்திபன் சொன்னான்:- "தேவி! இந்த உடைவாள் சோழ வம்சத்திலே முற்காலத்திலே பிரசித்தி பெற்றிருந்த சக்கரவர்த்திகள் காலத்திலிருந்து வந்தது. கரிகால் வளவனும் நெடுமுடிக் கிள்ளியும் இந்த உடைவாளைத் தரித்து உலகத்தை ஆண்டார்கள். ஓலைச் சுவடியில் உள்ளது நமது தமிழகத்தின் தெய்வப் புலவர் அருளிய திருக்குறள். இந்த உடைவாளும், குறள்நூலும்தான் சோழர் குலத்தின் புராதன பொக்கிஷங்கள். இவற்றை நீ வைத்துக் காப்பாற்றி விக்கிரமனுக்கு வயது வரும்போது அவனிடம் சேர்ப்பிக்க வேண்டும். அருள்மொழி! இந்தப் புராதன உடைவாளை என் தகப்பனார் அணிந்திருந்தார் ஆனால் நான் அணியவில்லை. கப்பங் கட்டும் சிற்றரசனாயிருந்து கொண்டு கரிகால் வளவனும் நெடுமுடிக் கிள்ளியும் அணிந்த உடைவாளை அணிய நான் விரும்பவில்லை. விக்கிரமனிடம் நீ இதையும் சொல்ல வேண்டும். எப்போது அவன் ஒரு சின்னஞ்சிறு பிரதேசத்துக்காவது சுதந்தர மன்னனாகிறானோ அப்போது தான் இந்த உடைவாளைத் தரிக்கலாமென்று கூற வேண்டும். அக்காலத்தில் இந்த உடைவாளைத் தரித்து, இந்தத் தெய்வத் திருக்குறளில் சொல்லியிருக்கும் வண்ணம் இராஜ்ய பாரம் செய்யும் படியும் கூற வேண்டும். இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். அருள்மொழி! அதை நிறைவேற்றுவதாகத் தெய்வ சன்னிதானத்தில் எனக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும். விக்கிரமனை வீரமகனாக நீ வளர்க்க வேண்டும்."

இதைக் கேட்ட அருள்மொழித் தேவி கண்களில் நீர் ததும்ப,

# காதல்

அந்த இரு விழிகள்..........

வார்த்தைகள் வரவில்லை அவனுக்குயூ

அவளையே வெறித்துப் பார்த்தவன்

அலையாய் எண்ணங்கள் இதயத்தில்.....

அ.நிதர்சன்
- உசன்

அவனுக்கு மட்டும் - எல்லாம்
புரியாத புதிர்களாய்...யூ
பட்டாம் பு'ச்சியாய் வானில்
சிறகடித்த கனாக் காலம்....
அவன் மார்புக்குள் - அவள்
வெட்கி வதனம் புதைத்த
அந்தி மாலைப் பொழுதுகள்...
கடந்திடும் நேரத்தில்
கரிசனையே இன்றி அவள்
மடிமீது தலைசாய்ந்து
முழு நிலா தான் பார்த்து
கவி சொன்ன காலங்கள்....
கன்னக்குழி தெரிய அவள்
கபடமாய் சிரித்த படி
கன்னத்தில் முத்தமிட்ட
நாட்கள்தான்
அவன் நினைவில்யூ
கண்கள் சொரிந்துவிட்ட
கண்ணீரில் இருதுளிகள் -
அவள்
புகைப்படத்தை முத்தமிட
அந்தோ பரிதாபம் ......
அவனுக்கு எஞ்சியதோ
புகைப்படம் மட்டுமில்லை
அப்பப்போ அவன் உதிரும்
கண்ணீத் துளிகளுமே...யூயூயூ

விம்முகின்ற குரலில், "அப்படியே செய்கிறேன் மகாராஜா!" என்றாள். பார்த்திபன் அப்போது "இறைவன் அதற்கு வேண்டிய தைரியத்தை உனக்கு அளிக்கட்டும்!" என்று சொல்லி அருள்மொழியைத் தழுவிக் கொண்டு அவளுடைய கண்களில் பெருகிய கண்ணீரைத் தம்முடைய மேலாடையின் நுனியால் துடைத்தார்.

-கனவு வளரும்


சண்டைக்கோழி

சின்ன வயசிலேயே அனாதையாகும்
அடைக்கலமாகிறார். ஆசிஷ் போட்ட
அவர் கைகாட்டும் அத்தனை வேலைகள
அலாதி ப்ரியம் சூர்யாவுக்கு.

சூர்யாவை சுயநலத்திற்காக போட்டுத்த
விஷயம் சூர்யாவுக்கு தெரியவர ஆசி
பழிவாங்குவதே ஆறு!

இரண்டாம் பாதி படத்தின் திரைக்
பழிவாங்கும் ஐடியாக்களும் பாராட்டலை

வரவர அக்ஷன் படங்களுக்கு ஜனங்களின் ரீயாக்ஷன் வேறு மாதிரி இருக்கிறது. இந்த நேரத்தில் அக்ஷன் படங்களுக்கே ஒரு அட்ராக்ஷன் கொடுத்திருக்கிறார் லிங்குசாமி.

மாணவரான விஷால் சிதம்பரத்தில் வசிக்கும் தன் கல்லூரி நண்பன் வீட்டிற்கு போகிறார். அங்கே வில்லனின் கோபத்திற்கு அநியாயமாக செத்துப்போகிறார்கள் பலர். அப்படி ஒரு கொலைக்கார தருணத்தில், விஷாலின் கால்களுக்கு ஃபுட்போல் ஆகிறார் வில்லன்! 1000 மைல் வேகத்தில் கதை சொல்லி அசத்தியிருக்கிறார் இயக்குனர் லிங்குசாமி.

கருப்பு ஹீரோக்களுக்கு சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கிற ரசிகர்கள், விஷாலையும் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். சண்டைக்காட்சிகளில் ராக்கெட் வேகம். அதே நேரத்தில் காதல், சென்ட்டிமென்ட், ஏரியாக்களையும் விட்டு வைக்கவில்லை விஷால்.


நம்ம பார்வை


ABCD

வெவ்வேறு பிரச்சனைகளில் சிக்க
பெண்கள் ஷாமை சந்திக்கிறார்கள். காதல்
றார் ஷாம் என்று போகிறது கதை.

சினேகாவின் கேரக்டர் நெற்றியடி.
கணவனிடம் இருந்து விலகி, வெ
நடமாடுகிறவர், அவன் இறந்ததும்
பட்டுப்புடவையோடு வளைய வருவது ர
அதிர்ச்சி. சினேகாவை காட்டுகிற பகுதிக
போட்ட பாரதியாராக அவதாரம் எடுத்தி
சரவண சுப்பையா.

னாதையாகும் சூர்யா, ஆசிஷ்வித்யார்த்தியிடம்
லிஷ் போட்ட சோற்றுக்கு நன்றி கடனாக
ன வேலைகளையும் கச்சிதமாக முடிப்பதில்
கு.
ளாக போட்டுத்தள்ளதிட்டம் தீட்டுகிறார் ஆசிஷ்.
தெரியவர ஆசிஷ்க்கு எதிராக பாயத்தொடங்கி

த்தின் திரைக்கதை வேகமும், சூர்யாவின்
ம் பாராட்டவைக்கிறது.






ம பார்வை..

கண்ட நாள் முதல் சண்டை போட்டுக் கொள்ளும் ஒரு ஜோடி காதலில் விழுந்து வைக்கிற கதை. அமெரிக்க நண்பன் கார்த்திக் குமார் உதவியுடன் கோல் சென்டர் நடத்துகிறார் பிரசன்னா. இவருக்கும், லைலாவும் சந்திக்கிற நேரமெல்லாம் சண்டை போடுகிறார்கள். இந்த லட்சணத்தில் நண்பனுக்கு பார்க்கிற வருங்கால மனைவி... லைலாவேதான். அந்த பிசாசு வேண்டாம் என்று நண்பனிடம் அட்வைஸ் பண்ணுகிறார் பிரசன்னா. இந்த கல்யாணம் நடக்க வேண்டும் என்பதற்காகவே கார்த்திக்முன், சாந்தமாக நடிக்கிறார் லைலா. எனக்கு கொஞ்சம் டைம் வேணும் என்று அமெரிக்கா கிளம்பும் கார்த்திக், திரும்பி வரும்போது லைலா யாருக்கு என்பதே கதை..!

தமிழில் பெண் இயக்குனர்கள் வருகிறார்கள்...போகிறார்கள்... நிலைத்தவர்கள் யாருமில்லை. இப்போ ப்ரியா வந்திருக்கிறார்!

னைகளில் சிக்கித்தவிக்கும் மூன்று
கிறார்கள். காதல்! யாரை கைப்பிடிக்கி
றது கதை.
ர் நெற்றியடி. கொடுமைப்படுத்துகிற
விலகி, வெள்ளை புடவையில்
ர் இறந்ததும் தழைய தழைய
ாய வருவது ரசனையை தூண்டுகிற
ட்டுகிற பகுதிகளில் எல்லாம், ஜீன்ஸ்
வதாரம் எடுத்திருக்கிறார் இயக்குனர்



● *சிறுவர் தொடர்*

# பனிமலர் 3

—சியாம் சுந்தர்

கபால கண்டனோ மாயக்கண்ணாடி செயலிழந்த நிலையில் மந்திர சக்தியெல்லாம் இழந்த நிலையில் காளிபூஜையில் ஈடுபட்டிருக்கின்றான். அவன்முன் ஒரு பிரம்மா... ண்டமான காளி சிலையொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் கண்கள் இரத்தச் சிவப்பை விஞ்சும் நிறத்திலிருந்தது. நா வெளியே நீண்டிருந்தது. கைகளிலே வாளும் திரிசூலமும் காட்சி தருகின்றன. கபால மாலை கழுத்தை அலங்கரிக்கின்றது. கபால கண்டன் மந்திர உச்சாடனத்தின் மத்தியில் ஒரு பொடியைத் தூவினான். அதிலிருந்து வெண்ணிறப் புகை எழுந்து அந்த அறையைச் சூழ்ந்தது! தீயின் மத்தியில் காளிதேவி பிரசன்னமானாள்.

"ஓம் காளி! திரிசூலி! ஜகன் மாதா! தாயே உன் மைந்தனுக்கு யாராலும் வெல்ல முடியாத மந்திர வலிமையைத் தந்திடம்மா" என்று கபாலகண்டன் வேண்டினான். காளியும் "மகனே! உனக்கு மந்திர வலிமையைத் தருகிறேன். ஆனால் வீரம், விவேகம், மந்திரசக்தி, மூன்றும்" ஒருங்கு சேரும்போது உனக்கு அழிவு ஏற்படும்" என்றுகூறி மறைந்தாள். வெண்ணிறப் புகையும் மறைந்தது.

அங்கே பனிக்கண்டத்தில் தரையிறங்கிய மகாசேனனையும் வியாக்கிரகண்டரையும் அவதானிக்க கபாலகண்டனால் முடியாவிட்டால் நம்மாலும் முடியாதா? என்ன, வியாக்கிரகண்டர் மந்திரக் கோலால் தரையில் தட்டி அழைக்க இரண்டு குதிரைகள் வந்தன. அவற்றில் வெண்ணிற இறக்கைகள் இரண்டு காணப்பட்டன. மகாசேனனும் வியாக்கிரகண்டனும் ஏறியபின் அவை கபாலகண்டனின் கபாலமாளிகையை நோக்கி சடுதியில் விரைந்தன. அவை மாளிகை மாடத்தை அடையவும் கபாலகண்டன் வெளியே வரவும் சரியாக இருந்தது. இரு மந்திரவாதிகளும் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கினர். கடுமையான மந்திரங்களைப் பிரயோகித்தனர். ஈற்றில் கபாலகண்டன் கைதளர்ந்து

வியாக்கிரகண்டரின் கை ஓங்கியது. கபாலகண்டன் ஒரு

புறாவாக மாறிப் பறக்கத் தொடங்கினான். "நீ எங்கு சென்றாலும் உன்னைத் தப்ப விடமாட்டேன்" என்றுகூறி வியாக்கிர கண்டர் ஓர் அம்பாக மாறி அதனைத் துரத்திக் கொண்டு சென்றார்.

இவ்வாறிருக்க அங்கே வந்த பனியரசனை மகாசேனன் தாக்கினான். அந்தத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பனியரசன் பின்னடைந்து சரணடைந்தான். பனியரசனைக் கட்டிப்போட்ட மகாசேனன் குதிரைமேலேறி "வியாக்கிர கண்டர் இருக்குமிடம் போ" என்றான். குதிரை ஆகாய வழியாகச் சென்றது. அவர்கள் இருந்த இடத்தை அடைந்த போது புறாவாக இருந்த கபாலகண்டன் திடீரென எறும்பாக மாறினான். விக்கிர கண்டர் எறும்பு உண்ணியாக மாறி விழுங்கப் போனார். உடனே அவன் சிங்கமாக மாறி அவரைத்தாக்க அவரோ சர்பம் - ஒரே நேரத்தில் பத்துச் சிங்கங்களை விழுங்கக்கூடியது. சர்பமாகமாறி அவனைத் தாக்கினார். அவன் குயிலாக மாறிப் பறந்தான். அவரும் சளைக்காது காகமாக மாறி அவனைத்தாக்கினார். அவன் பாம்பாக மாறி காகத்தைத் தாக்கினான். உடனே அவர் மயிலாக மாறினார். அவன் வேடனாக மாறி அவரைக் கொல்ல முயன்றான். இவ்வளவு நேரமாக இவற்றைப்பார்த்து சீற்றமடைந்த மகாசேனன் தன் குருவை வணங்கிக் கொண்டு தேள் வடிவில் அமைந்த பேராயுதத்தினை கபாலகண்டனான வேடன் மீது பிரயோகித்தான். அது அவனை ஊடுருவி உயிரைப் போக்கியது.

மீண்டும் உயிர் திரும்புவதைக் கண்ட வியாக்கிர கண்டர் "விவிரார்த" மந்திரத்தைப் பிரயோகிக்க மந்திர சக்தியும் வீரமும் ஒருங்கிணைய கபாலகண்டனுடைய உயிர் நிரந்தரமாக உடலை விட்டு பிரிந்தது உடனே இடியிடிப்பது போன்ற பேரோசை எழுந்தது. கபால மாளிகையில் அவன் தன் மந்திரவலிமையால் நிர்மாணித்திருந்த காளி தேவியின் சிலையும் மாளிகையும் மாயமாக மறைந்தன வானில் மங்கல நிறங்கள் தோன்றின மங்கல ஒலிகள் கேட்டன. ஒரு அசரீரி எழுந்தது.

"மக்களே! இந்த பூமியின் சாபத்தை நீக்கி விட்டீர்கள். உங்கள் முயற்சியில் சளைக்காது ஈடுபடுங்கள்" என எழுந்தது. அவர்கள் புத்துணர்ச்சியும் ஊக்கமும் அடைந்தார்கள். மந்திரக் கோலால் தரையில் தட்டி ஒரு ரதத்தை வரவளைத்தார். அதில் அவர்கள் ஏறியமர்ந்தவுடன் "வாயு வேகம் மனோ வேகமாக" கிளம்பியது ரதம். அவர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொண்டார்கள். ***-மலரும்***

மருத்துவம்

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்

க.சுரேன்மயன், மருத்துவபீடம்,
யாழ் பல்கலைக் கழகம்.

யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் வட பகுதியில் அண்மைக் காலமாக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதற்கு முக்கியமான இரண்டு காரணங்களை முன் வைக்கலாம்.

ஒன்று தற்போது யாழ் போதனா வைத்தியசாலயையில் ஆரம்பிக்கப்பட்ட புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவினால் இதுவரை அடையாளப்படுத்தப்படாத பல நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். முன்னைய காலம் போலன்றி தற்போது ஆரம்ப நிலைகளிலேயே புற்று நோய் இனங் காணப்படுகின்றது. அடுத்தது எமது மக்களின் உணவுப்பழக்கங்களும், எமது சூழலும் மிக விரைவாக மாறிக் கொண்டு வருவதாகும்.

யாழ்ப்பாணத்தில் அண்மைய புற்றுநோய்த்தரவுகளின்படி முதலிடத்தில் இருப்பது தொண்டை வாய்ப்புற்று நோய்தான். (Oro pharyngeal carcinoma). இதற்குக் காரணம் எமது வெற்றிலை, பாக்கு, போடும் பழக்கம். வெற்றிலை தனியே எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதாக அறியப்படவில்லை. ஆனால் அதனுடன் சேர்த்து உள்ளெடுக்கப்படும் சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை என்பன புற்றுநோய்க்கு காரணமாகின்றன. அத்துடன் அதிகமான உறைப்புப் பதார்த்தங்களும் காரணமாகின்றன.

எமது வாயும் தொண்டையும் படைகொண்ட செதில் மேலணியினால் ( Stratified Squamous epithelium) ஆனவை. சுண்ணாம்பினதும், உறைப்பு பதார்த்தங்களிலும் காணப்படும் எரிக்கும் தன்மை (irritant Effect) இம் மேலணியில் மாற்றங்களை ஏற்படுத்தி புற்றுநோயைத் தூண்டுகிறது. பாக்கில் காணப்படும் அரிக்கோலின் (Arecolin) எனும் பதார்த்தமும் புற்று நோயைத் தூண்டும் இயல்புடையது (Carcino genic effect). வெற்றிலை பாக்கை நீண்ட நேரம் வாயில் வைத்திருந்தாலும் புற்றுநோயினை தூண்டும். புகையிலைக்கும் வாய்ப்புற்று நோயில் ஒரு தனியிடம் உண்டு. புகையிலையிலுள்ள நிக்கொட்டின் (Nicotine) புற்றநோயை உருவாக்குவதில்லை.

ஆனால் புகையிலையிலுள்ள தார் (Tar) புற்று நோய்க்கான காரணமாகின்றது. தற்போது இளைஞர்களிடம் பரவலாகக் காணப்படும். பாபு'ல், பான்பராக் போடுதல் போன்ற பழக்கங்கள் மிகவும் கவலைக்குரியன. இவை நிச்சயமாக வாய்ப்புற்று நோயைத் தூண்டும்.


ஆண்களின் புற்றுநோய்த் தரவரிசையில் இரண்டாம் இடத்திலும் பெண்களின் மார்பகப் புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் (Cervical Cancer) ஆகியவற்றுக்கு அடுத்து மூன்றாவது இடத்திலும் இருப்பது களப்புற்று நோயாகும் (Oesophageal Cancer). இப்புற்றுநோய்க்குப் பல காரணங்கள் உள்ள போதும் யாழ்ப்பாணத்தில் இது அதிகரிப்பதற்கு காரணம் அதிகளவிலான செயற்கை உரப் பாவனையாகும் (Fertilizer).

அசேதன உரத்திலுள்ள நைத்திரேற்றுக்கள் (Nitrates), நைத்திரோசமைனாக (Nitrosamines) மாற்றப்பட்டு புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. அத்துடன் எமது மக்களிடையே காணப்படும் பழஞ்சோறு உண்ணும் பழக்கமும் களப் புற்றுநோயை அதிகரிக்கச் செய்யும் எனக் கூறப்படுகின்றது. பழைய சோற்றில் வளரும் ஒரு வகை பங்கசுக்கள் (Fungus) புற்றுநோய்ப் பதார்த்தத்தை சுரக்கின்றன. இது எமது பெண்களின் களப் புற்றுநோய் அதிகரிப்பதுக்கான காரணமாகக் கூறப்படுகின்றது.

ஆண்களின் மூன்றாமிடத்தில் இருப்பது நுரையீரற் புற்றுநோய். இதற்குப் புகைப்பிடித்தல் முக்கிய காரணமாகிறது. இது தவிர அதிகரித்து வரும் சூழல் மாசடைதலும் வாகனங்களின் புகையும் காரணங்களாகின்றன. இப்போது அதிகரித்து வரும் ஹர்த்தால்களும் ரயர் எரிப்பு நாகரீகமும் நிச்சயம் எதிர்காலத்தில் யாழ்பாணத்தில் நுரையீரல் புற்று நோய் அதிகரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

பெண்களில் காணப்படும் மார்பகப் புற்று நோயும் கருப்பைக் கழுத்துப் புற்று நோயும் உலக ரீதியான தரவுகளினோடு ஒப்பீடுகையில் பாரிய அதிகரிப்பைக் காட்டவில்லை. ஆயினும் இவை பற்றிய அறிவு இன்னும்






எமது பெண்களிடம் போதுமானதாக இல்லை என்பது கவலைக்குரிய விடயமே. மார்பகப் புற்று நோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் என்பன மிக எளிய பரிசோதனைகள் மூலம் மிக ஆரம்பத்திலேயே கண்டறியக் கூடியன. அவற்றில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டால் 100% குணப்படுத்தப்படக் கூடியது.

புற்றுநோய்களைப் பொறுத்தவரையில் குணப்படுத்துதல் என்பது கடினம் ஆயினும் ஆரம்பநிலையில் கண்டறிந்தால் நோயாளியின் வாழ்க்கைக் காலத்தையும் (Life Expectancy) வாழ்க்கைத் தரத்தையும் (Quality of Life) அதிகரிக்க இயலும். இந்த வகையில் யாழ் போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு அளப்பெரும் சேவையாற்றி வருகின்றது. இப்பிரிவினர் யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்கெங்கும் சென்று பரிசோதனைகளை (Screening) நடாத்தி நோயாளர்களை ஆரம்ப நிலைகளிலேயே இனங்காண்கின்றனர். அவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன், கதிர் வீச்சுச் சிகிச்சையும் (Radio Therapy) தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் வழங்கப்படுகின்றன. இது எதிர்காலத்தில் எமது மண்ணில் புற்றுநோயால் ஏற்படும் மரணவீதத்தை நிச்சயம் குறைக்கும் எனலாம்.

## போராட்டம்

மனிதன் ஒரு போராளி.

பிறப்பிலிருந்து இறக்கும் வரை போராடவேண்டிய நிர்ப்பந்தம்.

கருவறை முதல் ஆரம்பிக்கும் அவன் போராட்டம் கல்லறையிலும் முடியாமல் தொடர்கிறது.

உலகத்தோடு, உறவுகளோடு, பொருளாதாரத்தோடு, தொழில்நுட்பத்தோடு, இறைவனோடு, அரசியலோடு, காதலோடு, இறந்தும் எழும்புக்கூடுகளோடு, என ஒவ்வொரு நாள் போராட்டத்திலும் வெற்றி தோல்விகளைத் தழுவுகின்றான். தன் இலட்சியத்தை எட்டிப்பிடிக்கும் வரை அவன் பேராடுகிறான். இழப்புக்களை ,சவால்களை எதிர்க்கொள் கிறான். அவற்றை வென்றெடுக்கையிலேயே அவன் போராட்டம் முடிவுறும்.

● குட்டிக் கதை

# மனமாற்றம்

யாழ்ப்பாணம் அரசினர் பொது வைத்தியசாலையின் 12ம் வாட்டில் வைத்த கண் மூடாமல் ஜெறாட் தமது மகள் நிறோவை பார்த்த வண்ணம் இருந்தார். அவரது கண்களில் இருந்து துளித் துளியாக கண்ணீர் உருவாகி உருண்ட வண்ணம் இருந்தது. இது எதுவுமே அறியாத நிறோ ஆழ்ந்த நித்திரையில்.

ஜெறாட்டிற்கு தமது மகளை பார்க்க பார்க்க அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. சந்தோசமாக ஓடி ஆடி வாழவேண்டிய பிள்ளை இப்படி படுக்கையில் இருந்தால் யார்தான் கலங்க மாட்டார்கள். இப்போ, நிறோவிற்கு தம்மால்தான் இந்நிலை என நினைக்கையில் அவரால் வேதைனையைத் தாங்க முடியவில்லை.

நிறோவை வந்து பார்ப்பவர்கள் ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என வினவிய பல்வேறான வினாக்களிற்கு அவரால் விடைகூற முடியவில்லை. அவளது இந்நிலைக்கு என்ன காரணத்தைக் கூறமுடியும். அழகிய துடிப்பான, ஒரு குறையும் இல்லாத 25 வயதே நிரம்பிய இலங்கை வங்கியில் பணி புரியும் இளம் பெண் இவளிற்கு ஏன் இந்த தற்கொலை முயற்சி.

யாருக்கும் விளங்காத காரணம் அப்பா ஜெறாட்டிற்கு மட்டுமே விளங்கியது அவர் தமது செயலிற்காக மிகவும் வருந்தினார். இறைவனையே வணங்காத அவர் தமது மகளிற்காக ஜெபித்த வண்ணம் மௌனமாயினார்.

அவரது சிந்தையில் பழைய நிகழ்வுகள் வேகமாக ஓடியது. நிறோவும் அவளது இரு தம்பிகளும் சிறுவயதாயிருக்கும் போதே தாம் அவர்களை பிரிந்து வெளிநாடு சென்றதும் ஆறு வருடங்களின் பின் தம் குடும்பத்துடன் இணைந்ததும் இப்போ என்றிருந்தது. அம்மா மரீனாவின் கவனிப்பில் மூவருமே நல்லொழுக்கமும் நற்பண்பும் நிரம்பியவர்களாகவும் மிகவும்

**-நிரிதா**

கெட்டிக்காரர்களாகவும் வளர்ந்து வந்தார்கள்.

"குடும்பம் ஒரு கோயில்" என்பதற்கு இவர்களே உதாரணம். அவர்களது ஊரிலே உள்ளவர்கள் நல்ல பிள்ளைகள் என்பதற்கு வரைவிலக்கணமாக நிறோவையும் அவளது தம்பிமாரையுமே கூறுவார்கள்.

இவ்வாறாக காலம் மெல்ல நகர்கையில் இவர்களது குடும்பமும் காலஓட்டத்தின் வலையில் சிக்குண்டது. ஜேறாட் குடிப்பழக்கத்திற்கு சிறிது சிறிதாக அடிமை ஆகினார். இவர் வீட்டிலும் போதை பாவிப்பதால் குடும்பதில் சந்தோசம்

மறையத் தொடங்கியது. அதுமட்டு மின்றி தமது பிள்ளைகளிற்கும் இப்பழக்கத்திற்கு பழக அவரே அனுமதி அளித்தார். இது நாளை டைவில் வீடு, சொந்தக்காரர்கள், நண்பர்கள், என விரிவடைந்து இப்போ தைப் பழக்கத்திற்கு அப்பா மகன்கள் உள்ளானார்கள்.

"இனிமேல் இந்த நஞ்சை நீங் கள் குடிக்கக் கூடாது. எங்களுக்கு பழைய சந்தோசமான குடும்பம் வேண்டும். இனியும் குடித்தால் நானும் நஞ்சைக் குடிப்பேன்"

சில வேளைகளில் இவர்கள் அதிகமாக குடித்து சத்தி, நிலை தடுமாறல் என பல பிரச்சினைகள் உருவாகின. இது பற்றி வேலைக்கு செல்லும் நிறோ அதிகளவு அறிந்தி ருக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை என்றும் போல அந்த லீவு நாளும் விடிந்து சந்தோச மாக ஜெறாட் குடும்பம் மகிழ்ந்திருந் தது. அன்றைய தினம் நண்பர் ஒருவ ரின் வீட்டின் விழாவிற்காக ஜெறாட்டும் மகன்களும் சென்று வந்தனர்.

ஜெறாட்டினால் நிற்க முடியாமல் தள்ளாடிதள்ளாடி ஏதேதோ வாயில் முணுமுணுத்தபடி வந்து உணவைக் கூட சரியாக உண்ணாமல் படுத்துவிட டார். நிறோவின் தம்பிகள் சுயநினை வுடன் வந்திருந்தாலும் அவர்களும் சிறிதளவு உட்கொண்டது தெளிவாகத் தென்பட்டது. அப்பா சத்தமிட்டு உருண்டு உருண்டு உறங்கியது நிறோவின் மனதை நிரம்பவும் பாதித் தது. தன் குடும்பம் இருந்த நிலையை யும் தற்போதுள்ள நிலையையும் எண்ணிப்பார்த்தாள். அன்று எடுத்துக் காட்டாக விளங்கிய எமது கோயில் இன்று பிறர் அவமானமாக கதைக்கும் நிலையில் உள்ளதை நினைத்து மனம் மிகவும் நொந்து போயினாள்.

அடுத்த நாள் காலை அவள் கனக்க எதுவுமே கதைக்கவில்லை. அப்பாவிடம் சென்று "இனிமேல் இந்த நஞ்சை நீங்கள் குடிக்கக் கூடாது. எங்களுக்கு நீங்கள் சுகதேகியாக இருக்க வேண்டும். பழைய சந்தோச மான குடும்பம் வேண்டும். இனியும் குடித்தால் நானும் நஞ்சைக் குடிப்பேன்" என்று கூறிவிட்டு சென்றாள். ஜேறாட் இதனை பெரிது படுத்தவில்லை. இருநாட்களின் பின் திரும்பவும் ஜெறாட் குடித்துவிட்டு வீடு திரும்பினார். அன்று வீட்டில் நிறோ வைத் தவிர வேறு யாருமே இருக்கவில்லை. நிறோ தைத்துக் கொண்டிந்தாள்.அப்பாவை இந்நிலை யில் காணவும் அவளால் ஜீரணிக்க முடிவில்லை. உடனேயே தான் வாங்கி வைத்திருந்த நச்சு மருந்தை அருந்தி விட்டாள்.

செய்வதறியாது பதறிய ஜெறாட் தள்ளாடி தள்ளாடி விரைந்து செயற் பட்டார். உடனடியாகஅவளை வைத் திய சாலையில் அனுமதித்தார். நிறோ வாழவேண்டிய பெண் என்பதாலோ என்னவோ உயிராபத்தின்றி பிழைத்துக் கொண்டாள். மகளின் மரண முயற் சியை மறக்கமுடியாத ஜெறாட் மனதை மாற்றிக் கொண்டார்.

● *சிறுகதை*

# அப்பா...



**தூரத்தில் அப்பாவைப் பார்த்த போதே மனது பிசைய ஆரம்பித்துவிட்டது. அப்பா எப்போ தெல்லாம் வீட்டிற்கு வருவாரோ அப்போ தெல்லாம் பிரச்சினையை ஆரம்பித்துவிடுவாள் வானதி...**

அவளை நான் கைப்பிடித்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் மூன்று வருடங்கள் நல்லபடி யாகத்தான் போய்க்கொண்டிருந்தது. பிறகுதான் பிரச்சினைகள் தொடங் கியது. பெண்கள் எதையும் எளி தாக எடுத்துக் கொள்வதில்லை.

சிறிய பிரச்சினைகளைக்கூட தனக்கு இழுக்கு என மனதில் நினைத்துவிட்டால் அவ்வளவு தான்.., பழிவாங்கும் எண்ணம் மன திற்குள் வந்துவிட்டால் அதை கண் மூடித்தனமாக நிறைவேற்றுவார்கள் என சொல்லக்கேட்டிருக்கிறேன். ஆனால் வானதியிடம்தான் பார்க்கி றேன். என் வீட்டுப்பேச்சை எடுத் தாலே எரிந்துவிழ ஆரம்பித்து விடுவாள்.

சில நாட்களில் வேலைவிட்டுவர தாமதமாகிவிட்டால், 'உங்க வீட் டுக்கு போயிருப்பீங்க...', கொஞ்சம் பணம் கணக்கில்லாமல் செலவாகி விட்டால் 'உங்க வீட்டுக்கு கொடுத் தீங்களா..', நான் ஏதேனும் கோப மாக கேட்டால் 'இப்படி கேக்க ணும்னு பாடமா...', பாசமாக பேசி னால் 'இப்படித்தான் வேஷமா..' என தொட்டதிற்கெல்லாம் குற்றம்தான்.

என் வானுவா இப்படியென நான் வேதனைப்படாத நாளேயில்லை. இன்று அப்பாவைப் பார்த்ததும் எப்படி நடந்துகொள்வாள்...? அப்பா வீட்டை நெருங்க நெருங்க.., அப்பா..

**-மானவர்மன்**

நான்.. வானு.. வானதியென சிந்த னைகள் சுழன்றடிக்க ஆரம்பித்தன..

'வேற ஜாதிப்பொண்ணாப்பா..?' அப்பா கேட்டபோது நிமிர்ந்து முகத்தைப் பார்த்தேன்.. அதில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

ஆனாலும் நான் உண்மையை சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில் இருந்ததால், 'ஓமப்பா..' என்றேன். 'முன்னமே பதிவுத்திருமணம்கூட செய்துவிட்டாயாமே..?', இம்முறை என்னால் அவரது முகத்தை நிமிர்ந்து பார்க்கமுடியவில்லை. குனிந்திருந்த என் தாடையைப் பிடித்து நிமிர்த்தி, 'தப்பு பண்ணிட்டோம்னு நினைக்கிறாயாப்பா...?' இப்படி அப்பா கேட்டதும் என்னையுமறியாமல் கண்கள் கலங்க ஆரம்பித்துவிட்டது.

'என்ன இது சின்னப்பையன் மாதிரி...' கண்களை நான்கு விரல்களால் ஒத்தடம் கொடுப்பதைப்போல துடைத்துவிட்டவர்., மனித ஜாதியிலதானே கல்யாணம் பண்ணியிருக்கிறாய்.. அதுக்கேன் இப்படி கலங்கிறாய்...' தோள்பட்டையை தட்டிக் கொடுத்து, 'சீக்கிரமே நல்ல வேலையில சேர்ந்திடு, அப்பதான் வாழ்க்கை நிலையா இருக்கும்..' அதற்குமேல் அப்பா எதுவும் பேசவில்லை.

'ஜாதிவிட்டு ஜாதி காதலிக்கிறானாமே உன் மகன்..?' இந்த வார்த்தைகளை அப்பாவிற்கு தெரிந்தவர்கள் கிட்டத்தட்ட ஆயிரம் முறை கேட்டிருப்பார்கள். பதில் வருமென எதிர்ப்பார்த்து எய்தவர்களெல்லாம் அப்பாவின் ஆழ்ந்த மௌனத்தைக் கண்டு ஊமையாய் திரும்பியதை என்னிடம் சொல்வார்கள். அந்த மௌனத்தின் அர்த்தமென்னவென அப்போதெல்லாம் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை... வானுவிடம் மட்டும் இதுபற்றி பயந்தபடி பேசுவேன். அவள் என்னைவிட சுத்தம்... வீடு, அப்பா எனப் பேசினாலே எரிந்து விழுவாள்.. இப்போதும் அப்படித்தான் இருக்கிறாள் வானதி.

வானுவை சந்தித்தபின்னர்தான் வேலை பார்க்கவேண்டும் என்ற எண்ணமே எனக்குள் எழுந்தது. ஆரம்பத்தில் ஒரு மதுபானத் தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. அப்பாவிடம் சொல்லவேண்டுமென்றுகூட தோன்றவில்லை. வானுவிடம் சொன்னபோது அவள் ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியில் அப்பாவின் நண்பர் ஒருவர் மூலமாக ஒரு பெரிய கொம்பனியில் வேலை கிடைத்தது. அப்போது வானுவிற்கு அப்பா தெய்வமாக தெரிந்தார்.

'அப்பா அவங்க வீட்ல ரொம்ப தொல்லை பண்றாங்கப்பா..' தயக்கத்துடன் ஆரம்பித்தபோது, 'அவங்களுக்கும் தெரியுமா..?' எப்போதும்போல அமைதியாகவே இருந்தார் அப்பா. 'ம்ம். தெரியும்.. ஆனா ரொம்ப முன்னாடியெல்லாம் இல்ல.. போனமாசம்தான்...', 'என்ன சொன்னாங்க?' என்பதைப்போல முகத்தைப் பார்த்தார். 'முதல்ல கத்தினாங்க...' நான் வார்த்தைகளை

விழுங்க, 'இப்போ என்னவாம்...?' புருவத்தை ஏற்றினார்.

'கல்யாணம் முடிச்சிட்டு ஏன் தனியா இருக்கணும்? கூட்டிக்கிட்டு போன்னு சொல்றாங்கப்பா..'

குழந்தைகள் உரிமையாக அதுவேணும் இதுவேணுமென கேட்குமே அப்படிப்பட்ட மிடுக்கு.

'சரிதான்... கூட்டிக்கிட்டு போய்டு...' முடித்துக்கொண்டார். அப்பாவிடம் பேசுபவர்களுக்கு ஏன் இவர் இப்படி எடுத்தேன் கவிழ்த் தேனென பேசுகிறார் என நினைக் கத் தோன்றும். ஆனால் அந்த முடிவுக்கு முன்னால் நிலவும் அமை தியும் அவர் உள்ளுக்குள் இடும் கணக்கீடுகளும் எல்லோருக்கும் புரியுமாவென்பது சந்தேகம்தான்.

காதலிக்கும்போதே நண்பனிடம் சொல்லி வைத்தாற்போல அவனது வீட்டின் மேல் மாடியில் வானுவோடு குடியேறியாகிவிட்டது. வானுவின் வீட்டில் அவளது திருமணத்தையோ, புதுக்குடித்தனத்தையோ கொண்டா டவில்லை. அதற்கு காரணம் அவளின் நான்கு அக்காக்கள் மண மாகாமல் இருந்ததாகத்தான் இருக் குமென நினைத்துக் கொண்டாலும் வானுவை இந்த விடயத்தில் மனம் நோகாமல் பார்த்துக் கொள்ள வே ண்டுமென சபதமிட்டுக் கொண்டேன். 'உங்க அப்பா தனி ஆள்தானே.. அவருக்கு ஒரு முழு வீடு எதுக்கு? ஒரு அறை போதாதாமா...?', திரும ணமான இரண்டாம் வருடம் விளை யாட்டாய் கேட்டாள் வானு. அவள் எதைக் கேட்டாலும் விளையாட்டாக கேட்கிறாள் என்றுதான் என் மனம் நினைத்தது.

'சரி அப்படியே அவர் ஒரு அறையில தங்கிக்கொண்டு வீட்டை கொடுத்தாலும் நம்மால அங்க போகவா முடியும். அந்த கிராமத் துல ஒரு வசதியும் இல்லைன்னு நீதானே அடிக்கடி கிண்டலடிப் பாய்...?' என்றேன்., 'ஓமோம், இப்ப யார் அங்கபோகணும்னு சொன் னது..? அப்புறம் என் பிள்ளையை கிராமத்து ஸ்கூல்லதான் படிக்க வைக்கவேணும், அந்த வீட்டை இடிச்சி அதுல வாற பொருட்களை யெல்லாம் கொண்டுவந்தா நல்ல விலைக்கு விக்கலாம்....' - சொன்ன வானுவை நான் கண்டிக்காமல் விட்டு விட்டேன். என் பலமென நான் நினைத்ததையெல்லாம் வானு என் பலவீனங்களென புரிந்து கொண்டது தான் துரதிஷ்டம்.

கையால் தறி அடிக்கும் வேலைக்கு சென்று மெல்ல பவர் லூமுக்கு மாறி பத்து வருடங்கள் கழித்து ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு அமர்ந்த அப்பாவிற்கு எழுபதுகளில் மாதச்சம்பளம் சொற்பமாம். தாத்தா வீட்டையொட்டி ஒற்றைப் பக்கமாக

கூரை இறக்கி அங்கேதான் நான் பிறக்கும் வரை வாசம். கார் ஷெட்டாகவும், வார நாட்களில் ஆட்டம்போடவும் இரண்டு அடுக்காய் சபாபதி கட்டியிருந்த மாடிவீடு விலைக்கு வந்தபோது, நண்பர்கள் கொடுத்த தைரியத்தாலும் பண உதவியாலும் நான் வந்தவேளை நல்ல வேளையென துணிந்து வீட்டை வாங்கிய அப்பா பின்னர் தொண்ணூறுகளில் திருத்த வேலைகளை முடித்தபோது ஓய்வுபெற்றிருந்தார் அப்பா. கிட்டத்தட்ட 25 வருட போராட்டம். வீட்டிற்கு வாங்கிய கடன்கள், என் படிப்புக்கான கடன்கள் எல்லாம் அடைத்ததுபோக அவரது கையில் எதுவும் மிஞ்சியதாக எனக்கு தெரியவில்லை. நல்லவேளையாக என் திருமணத்திற்கு அவருக்கு செலவு வைக்கவில்லையென என் விளையாட்டுப்புத்தி நினைத்தது.

திருமணமானவுடனே தனிக் குடித்தனம். ஆனால் குடும்பத்தை எப்படி நடத்துவதென்று புரிய வில்லை. வானுவும் வேலைக்கு போக ஆரம்பித்திருந்தாள். காலையில் ரீ, காலையுணவு, மதியம் சாப்பாடு, இரவு டின்னர் என ஒரு குடும்பத்திற்கான முறைகள் எதுவுமே முறையாக நடக்காது. பல நேரங்களில் வானு காலையில் சோறு மட்டும் சமைத்து வைத்துவிட்டு மதியம் கடையில் ஏதாவது கறி வாங்கிக் கொள்ளச் சொல்வாள். அவளுக்கு முன்னதாக நான் வேலைவிட்டு வந்துவிடுவேன். வானுவுக்காக பஸ் நிறுத்தத்தில் காத்திருப்பேன். இருவரும் வீட்டிற்கு நடந்துவரும் போதே வழியில் உள்ள கடையில் பாணும் கறிக்கு ஏதாவது பொருட்க ளும் வாங்கிவந்துவிடுவோம். அதை சமைத்து சாப்பிட்டுப் படுக்கவே மணி பதினொன்றைத் தாண்டிவிடும்.

அம்மா போனபின்பு பாட்டிதான் வீட்டு சமையல். பாட்டிக்கு மூன்று வேளையும் சோறுதான் சமைக்கத்



தெரியும். எனக்கு ஒருவேளையே னும் புட்டு அல்லது இடியப்பம் இருக்கவேண்டும். இதனாலயே பாட்டிக்கும் எனக்கும் அடிக்கடி போராட்டம் நடக்கும். அப்பாதான் அடிக்கடி பிரச்சினையை தீர்த்து வைப்பார். சில நேரங்களில்

> என் பலமென நான் நினைத்ததையெல்லாம் வானு என் பலவீனங்களென புரிந்து கொண்டது தான் துரதிஷ்டம்.

காலையில் இட்லி சாப்பிட இருபது ரூபாய் கொடுத்துவிடுவார். ஆனாலும் எல்லா நேரத்திலும் அவரால் கொடுக்கமுடியாது. அதனால் கடையில் மா வாங்கி பாட்டியைவிட்டு அரைத்து வரச்சொல்லி, மாவு கரைப்பதில் தொடங்கி உப்பு சேர்த்து தோசை ஊற்றுவதுவரை சொல்லிக் கொடுத்து, அதற்கு தொட்டுக்கொள்ள மிளகாய்த் தூளில் வெங்காயத்தை நறுக்கி, தூள் உப்பு தேங்காய் துருவல் எல்லாம் போட்டு கலக்கி நளபாகத்தையெல்லாம் தூக்கிச்சாப்பிடும்படி செய்து கொடுத்து 'சாப்பிட்டுப் பாருடா' என்பார். அன்றிலிருந்து நான் பாட்டியிடம் சண்டை போட்டதேயில்லை. வானதிக்கு அந்த ஒரு ஐட்டம் மட்டும் பிடிக்காது. 'இதென்ன மாட்டுக்கு போடற தவிட்டுக் கலர்ல வறட்டிமாதிரி ச்சசே.. மனுஷங்க சாப்பிடறதா இது'வென உதாசீனப்படுத்தி விடுவாள்.

நானும் அவளும் சம்பாதித்துக் கொண்டிருந்ததால் பணத்திற்கு பிரச்சினையில்லை. அப்பா அவருக்கு மாதந்தோறும் வரும் பென்ஷன் பணத்திலேயே சீவியத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் வானுவுக்கு தெரிந்தே ஐம்பது , நூறு என செலவுக்கு தந்திருக்கிறேன். 'அவர் தனியே தானே இருக்கிறார்.. நம்கூட வைச்சிருக்கலாமே' என நிறையமுறை வானுவிடம் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் 'நோ'வென மறுத்துவிட்ட வானதி, பையன் வளர்ந்துவிட்டபின் ஸ்கூலுக்கு கொண்டுபோய் விட்டு திருப்பிக் கூட்டிக்கொண்டு வர 'உங்கப்பாவை இங்கயே தங்கிக்கச் சொல்லுங்கன்னு' சொன்னாள். அப்பாவை ஊரிலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்துவந்து தங்கவைத்தேன்.

அப்பா ஆரம்பகாலத்தில் எவ்வளவு இறுக்கமானவராக அமைதியானவராக இருந்தாரோ அதற்கு நேர் எதிராய் மாறிவிட்டிருந்தார்.. வயது ஏறினால் குழந்தை குணம் என்பார்கள். அவருக்கு அது முழுக்கப் பொருந்தியிருந்தது. செலவுக்கு பத்து ரூபாய் வேண்டுமென்றால்கூட என்னிடம் பத்து ருபா கொடுடான்னு சாதாரணமாய் கேட்க

மாட்டார்..எனக்கு பத்து ரூபாய் வேணும்.. என சற்றே உரத்த குரலில் மிடுக்காய் கேட்பார்.. அந்த மிடுக்கு குழந்தைகள் சிலசமயம் உரிமையாக கொஞ்சமும் இறங்காமல் எனக்கு அது வேணும்.. இது வேணுமென கேட்குமே அப்படிப்பட்ட மிடுக்கு. இதை நான் நன்கு புரிந்திருந்தேன்.. ஆனால் வானதிக்கு புரியவில்லை.

கேட்கறது பிச்சை அதுல என்ன எகத்தாளமென நக்கலடிப்பாள். அப்பாவிற்கு விஷயம் தெரிந்துவிடப் போகிறதென நானும் அதை பெரிதாக்குவதில்லை.

அப்பா கையால் தினமும் ஐந்து ரூபாயாவது வாங்கிவிடவேண்டும் இல்லையென்றால் ஸ்கூலுக்கு போகவே பிடிக்காது. அவர் இரவு வேலை முடிந்து மறுநாள் காலை எட்டே முக்கால் மணிக்கு பஸ்ஸில்தான் வருவார். அந்த பஸ் வரும்வரை வீட்டில் இருந்தால் ஸ்கூலுக்கு நேரமாகிவிடும். அதனால் கிளம்பிவிடுவேன்,.. குளக்கரை ஓரமான ரோட்டில் நடந்துபோகும்போது வழியில் பஸ் கடந்துபோகும். அந்த நேரம் பஸ்ஸின் ஏதேனும் ஒரு ஜன்னல் ஓர சீட்டில் இருந்து ஒரு முடிந்த பை விழும். அதை ஓடிச்சென்று எடுத்து பிரித்தால் உள்ளே ஒரு ரூபாய் ரொபி இரண்டும், ஐம்பது சத இனிப்பு நான்கும் இருக்கும். வானுவிடம் இந்தக்கதையை சொல்லிச் சொல்லி ஆனந்தப்படுவேன். ஆனால் வானதியிடம் இந்தக்கதை எடுபடுவதேயில்லை.

அடிக்கடி உங்க அப்பாவுக்கு விவஸ்தை இல்லை.. இப்படி நடந்துக்கிறார்.,. அப்படி நடந்துக்கிறார்.. என வானு இரவு படுக்கையில் தினமும் புகார் வாசிப்பாள். நான் இதெல்லாம் குடும்ப வாழ்வில் சகஜம்தானென நினைத்துக் கொள்வேன். ஒருநாள் அப்பா என் பையன் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிஸ்கட்டில் ஒன்றை உரிமையாய் எடுத்து கடித்துவிட பையன் கத்தி கூப்பாடு போட்டு வீட்டையே இரண்டாக்கிவிட்டான். கடைவீதியில் சந்தித்த தோழியோடு வீடு திரும்பிய வானு அழுதுகொண்டிருந்த பையனிடம் என்னடாவென கேட்டு..அப்பாவைப் பார்த்து,

> **துக்கத்தில், இழப்பில் ஆண்களுக்கு ஆறுதல் அமைதி, பெண்களுக்கு அழுகை...**

அறிவில்லை உங்களுக்கு.., இதென்ன அல்பத்தனமா..,அது இதுவென பொரிந்து தள்ளினாள். எனக்கு கோபம் அதிகமாகி வானுவை ஒரு அறைவிட்டு விட்டேன். அவ்வளவுதான். அன்றிலிருந்து அப்பா வானதிக்கு

பரம விரோதியாகிவிட்டார். நான் அறைந்தது, அதுவும் அவளது தோழியின் முன் அடித்தது அவளது நெஞ்சில் பசுமரத்தாணிபோல பதிந்துவிட்டது போலும். இந்த நிகழ்ச்சிக்குப்பின் வானதி நேரிடையாகவே அப்பாவை முகத்திலடிக்க ஆரம்பித்துவிட்டாள். திடீரென ஒரு வேலைக்காரியை கொண்டுவந்து வீட்டில் தங்கவைத்தாள் வானதி.

'அப்பா, நாளைக்கு தாத்தா எங்கட ஸ்கூல் விளையாட்டு போட்டிக்கு வரமாட்டாராமே.. ஏனப்பா...?' பையன் கேட்டபோது என்னால் பதில் சொல்லமுடியவில்லை.

கடந்த காலங்களை மறந்து அடுத்தடுத்து வீட்டிற்கு வந்து வந்துதான் போய்க் கொண்டிருந்தார் அப்பா. ஆனால் ஒவ்வொருமுறையும் வானதியால் ஏதேனும் குற்றம் சுமத்தப்பட்டு.. வார்த்தைகளால் குத்தப்பட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வராதீங்கப்பான்னு சொல்லிவிட பலமுறை யோசிப்பேன்.. அது வேறுமாதிரியான தாக்கத்தை அவர் மனதில் உண்டாக்கிவிடப் போகிறதென்றும், அவரது சந்தோஷத்தை கெடுத்து விடக் கூடாதென்றும் சொல்லவேயில்லை... கடைசிவரை.........

தூரத்தில் இருந்த அப்பாவின் அருகே வந்து விட்டோம். வீட்டின் முன் பந்தல் போடப்பட்டு அப்பா படுக்க வைக்கப்பட்டிருந்தார். "நல்லாத்தான்யா இருந்தார்.. 'காலையில மகன் வீட்டுக்கு போறேன் அம்பது ருபாய்க்கு வடை சுட்டுவை அப்பதான்னு' சொல்லிட்டு படுக்கப் போனவன்.. ஒரேடியா படுத்திட்டானே ராசா..," பக்கத்துவீட்டு வடை சுட்டு விக்கும் பாட்டி தலையில் அடித்து அழுதாள். என்னால் நிற்கமுடியவில்லை.. அப்படியே அப்பாவின் மடிமேல் தலையை சாய்த்துக் கொண்டேன். அருகில் நின்ற வானதி என் தோளைப்பற்றி மண்டியிட்டு உட்கார்ந்தாள்.. என் முதுகைக்கட்டிய மகன் எட்டிப்பார்த்து 'தாத்தா எழுந்திருங்க தாத்தா... அம்மா இனிமே உங்களைத் திட்டமாட்டாங்க தாத்தா... எழுந்துவாங்க வீட்டுக்கு போலாம்..' என அப்பாவை உலுக்க... அந்த பிஞ்சு செய்கையில் உடைந்துபோன வானதி, என்னைவிட்டு விலகி அப்பாவின் பாதங்களை இருகைகளாலும் இறுகப்பற்றி அவரது கால்களில் முகம் புதைத்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.. துக்கத்தில், இழப்பில் ஆண்களுக்கு ஆறுதல் அமைதி, பெண்களுக்கு அழுகை... அரைமணி நேரமாகியும் அவள் எழவில்லை. நானும் எழுப்பவில்லை..

வானதி அழவேண்டும்....., வானதி அழட்டும்.. அழுதுமுடித்து திரும்பட்டும் வானு...!

# குறுக்கெழுத்துப் போட்டி - 7

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | | 2) | | 3) | | ■ |
| | ■ | | ■ | | ■ | 4) |
| | 5) | ■ | 6) | | 7) | |
| 8) | | | | | | ■ |
| 9) | | ■ | | ■ | 10) | 11) |
| 12) | | 13) | | ■ | 14) | |
| 15) | | | ■ | 16) | ■ | |

**எழுதுங்கள்...**
**வெல்லுங்கள்...**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
வேடிக்கை
120, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

விடைகளிற்கான இறுதித திகதி 15.01.2006

## இடமிருந்து வலம்

1) கண்ணாடி உற்பத்தி செய்யும் ஒரு இடம்
6) எச்சரிக்கை செய்யப் பயன்படும் நிறம்
8) ஒரு வகை பாரம்பரிய ஆட்டம்
9) குழம்பு ---மாக இருந்தால் நன்றாயிருக்கும், ஆனால் மாறியுள்ளது.
10) நட்பின் எதிர்ச்சொல்
12) தமிழ் வளர்த்ததும் இது தான் .....இன்று (நிவாரணம் கொடுத்து) தமிழரை வளர்ப்பதும் இது தான்.
14) தொலைத் தொடர்பு துறையில் இதன் தேவை இன்றியமையாதது.
15) தேவதாசிகளின் நாட்டியம், குழம்பியுள்ளது.
16) முன் வினைச் சொல்

## மேலிருந்து கீழ்

1) இந்து சமய நாற்குரவர்களுள் ஒருவர்
2) கணிகையர் குல பெண்ணை இப்படி அழைக்கலாம்.
3) கடல் வளி பயணத்தை தொழிலாக கொண்டவரை இப்படி சொல்வர், குழம்பியுள்ளது.
4) வனவாழ் ஜீவராசிகளில் தனித்துவமானது, குழம்பியுள்ளது.

5) சூரனை முருகன் செய்தது, அநியாயத்தை நியாயம் கொல்வது, தலைகீழாயுள்ளது.

6) 840 கஜநீள நூலை 1 1/2 கஜ சுற்றளவில் சுற்றிய தொகுப்பை இவ்வாறு அழைப்பர்.

7) பனை ஓலையில் பின்னிய சிறு கூடைகளில் பொருட்களை வைத்து கட்டி செய்த சிறு மூட்டை

(புகையிலையை பொதிசெய்வதும் இதில்தான்) குழம்பியுள்ளது

11) கணவனையிழந்து தனித்து வாழும் நிலமை

13) தூரமும் நேரமும் சம்பந்தப்பட்ட தொடர்பு

## குறுக்கெழுத்துப் போட்டி 6 இன் வெற்றியாளர்கள்

➢ **தி.ஞானலோஜினி**
**புகையிரத நிலைய வீதி, குருமன்காடு, வவுனியா.**

➢ **S.சிறீஸ்கந்தவேள்**
**சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.**

➢ **சு.துவாரகன்**
**ஐயனார் கோயிலடி, துன்னாலை வடக்கு, துன்னாலை.**

**இவர்களுக்கான பரிசுகள் உரிய முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

**குறிப்பு :- போட்டியில் கலந்து கொள்பவர்கள் உங்கள் முகவரியை தெளிவாக பு'ரணமாக குறிப்பிடுங்கள். பலருடைய முகவரிகள் தெளிவில்லாத நிலையிலிருப்பதால் அவர்களுக்கான பரிசுகளை சேர்ப்பிப்பதில் எமக்கு சிரமமேற்படுகிறது.**

## குறுக்கெழுத்துப் போட்டி 6 ற்கான விடைகள்

இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1) பருத்திவீரன் | 5) கண்ணி | 6) தருமதி | 9) வேல் |
| 11) யதூர் | 13) மரகதம் | 16) சம்பவம் | 17) விடை |
| 18) மல்லன் | | | |

மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1) பந்தயம் | 2) திகதி | 3) வீண் | 4) ரணில் |
| 7) ருது | 8) மர்மம் | 10) வேதம் | 12) தகவல் |
| 14) பரம | 15) தலம் | 16) சடை | |

-அபிமானியின் பார்வையில்-


# விளையாட்டுக்களில் வினோத வீரர்கள்

## போட்டிகளின் உச்சக் காட்சிகளும் உணர்ச்சி நிமிடங்களும்

கிரிக்கட் என்பது கனவான்களின் விளையாட்டு. அப்படிப்பட்ட கிரிக்கட்டில் சில சமயங்களில், வீரர்கள் மிக நேர்மையாக நடப்பதுண்டு. அதே நேரம் மிக மட்டமாகவும் நடப்பதுண்டு. நேர்மையாக நடப்பதற்கொரு எடுத்துக் காட்டாக ஒரு சம்பவம்,

1987 இல் நடைபெற்ற ஒரு உலகக்கிண்ண போட்டி. பாகிஸ்தானுக்கும் மேற்கிந்தியத் தீவுக்குமிடையில் நடைபெற்றது. பாகிஸ்தான் லாகூரில் நடந்த இப்போட்டியில் முதலில் மேற்கிந்தியத்தீவு துடுப்பெடுத்தாடி 216 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் வில்லியம் றிச்சாட்ஸ் 51 ஓட்டங்களைப் பெற்றார். பாகிஸ்தானுக்கு வெற்றி இலக்கு 217. துடுப்பெடுத்தாடும் போது பாகிஸ்தான் தடுமாறியது. 110 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களை இழந்தது. ஒருவாறு மீண்டும் எழுந்து நின்ற போது 203 ஓட்டங்களுக்கு 9 இலக்கினை இழந்தது. வெற்றிக்குத் தேவை இன்னும் 14 ஓட்டங்கள். இருப்பதோ கைவசம் ஒரு ஓவரும், ஒரு விக்கட்டும். மிகத் த்ரில்லான ஒரு கட்டம்.

மேற்கிந்திய அணித் தலைவர் ரிச்சாட்ஸ் பந்தினை மிக நம்பிக்கையோடு ஜமைக்கா வேகப்பந்து வீச்சாளர் கொட்னிவோல்ஷ் இடம் கொடுத்தார்.தேர்வு மிகச் சரியாகவே இருந்தது. ஏனெனில் வோல்ஷ் முதல் ஒன்பது ஓவரில் வெறும் 26 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கட்டுக்



களை சாய்த்திருந்தார். களத்தில் துடுப்புடன் அப்துல் காதிர், மற்றும் சலிம் ஜாபர்.

முதற்பந்தில் காதிர் ஒரு ஓட்டம் பெற்றார். அடுத்த பந்தில் ஜாபர் 2 ஓட்டங்கள் பெற்றார். அடுத்த பந்தி லும் ஜாபர் 1 ஓட்டத்தை பெற்றார். இப்போது 3 பந்தில் 10 ஓட்டங்கள் தேவை. அப்போதுதான் அது நிகழ்ந் தது. வோல்ஷ் பந்துடன் காதிரை நோக்கி ஓடி வருகிறார். Non-smiker முனையில் இருந்த ஜாபர் ஓட்டம் வேண்டும் என்ற ஆவலில் தனது எல்லையைத் தாண்டி (Crease) பந்து வீச முன்னரே மெது வாக ஓட ஆரம்பித்து விட்டார்.

இப் போது வோல்ஷ் பந்தினை வீசாது புன்முறுவலுடன் மிக நேர்மையாக ஒரு எச்சரிக்கையினை ஜாபரை நோக்கி விடுகிறார். இனி இப்படி நடந்தால் அவர் 'அவுட்'. அந்த எச்சரிக்கையை விடுக்காமல் வோல்ஷ் அவரை ஆட்டமிழக்கச் செய்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்வது ஒரு விளையாட்டு வீரனுக்கான மகோன்னத பண்பாக இருக்க முடியாது என நினைத்து விட்டுவிட்டார்.

ஆனால் அடுத்து நடந்தது ஒரு பேரிடி. வோல்ஷ் வீசிய அடுத்த பந்தை காதிர் எல்லைக்கோட்டிற்கு மேலாக அடித்து 6 ஓட்டம் பெற்றார். இரண்டு பந்தில் 4 ஓட்டங்கள் தேவை. காதிர் அந்த இரண்டு பந்து



களிலும் தலா 2 ஓட்டங்கள் பெற பாகிஸ்தான் வசமானது வெற்றி. வில்லியம் ரிச்சாட் மைதானத்தை விட்டுவெளியேற மனமில்லாமல் படுத்துவிட்டார். தாம் எங்கே தவறு விட்டோம் என்று யோசித்தார். அவரு க்கு வோல்ஷ் மீது கோபப்படுவதா? அல்லது பாராட்டுவதா? என்ற சிந்தனை நிலை.

ஆயினும் வோல்ஷ் நடந்து கொண்டவிதம் அவருக்கு நன்ம திப்பை ஏற்படுத்தியது. இப்படித்தான் எந்த வீரரும் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. வீரர்களுடன் முறைப்பது, தகாத வார்த்தைகளால் திட்டுவது, எதிரணி வீர்கள் ஆத்திர முற நடப்பது. போன்ற மட்டமான நடவடிக்கைகளை வீரர்கள் கைவிடும்வரை கனவான்கள் விளையாட்டு - கிரிக்கட் என்பது கேள்விக் குறிதான்.

# வம்பன் பதில்கள்..

◆ சமாதானம் நீடிக்குமா? சண்டை வருமா?

*செ. அருண்மொழி, மானிப்பாய்*

உங்கள் ஒரு கேள்விக்குத்தான் எனக்கு பதில் தெரியும். ஆனால் அதற்கான பதிலை பெற உங்கள் மற்றக் கேள்விக்கான பதிலை யாராவது எனக்கு சொல்லித்தரவேண்டும்!

◆ தவமாய் தவமிருந்து பார்த்தீர்களா?

*சி. தவச்செல்வம், கொக்குவில்*

உங்களைக்கூட அப்படித்தான் பெற்றிருப்பார்கள் போல... அதுதான் பெயரிலேயே தவத்தை வைத்துவிட்டார்கள். ஆமாம் பார்த்தேன். தமிழ்த் திரைக்கும் உயிர் இருக்கிறதென மீண்டும் நிருபித்திருக்கிறது. ஆனாலும் 3 1/2 மணிநேரத் தவம்தான் சற்று நெருடுகிறது.

◆ வம்பா திருத்தவே முடியாதது எது?

*தே. தவராகினி, கிளிநொச்சி.*

நம் மக்களைத்தான்! பழகிய பழக்கத்திலிருந்து மாறவே மாட்டார்கள். அண்மையில் உதயன் பத்திரிக்கையில் ஒரு விளம்பரம் '... போன்றவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஓரே இடம்' என குறிப்பிட்டு கீழே இரு கடைகளையும் முகவரிகளையும் போட்டிருந்தார்கள். விளம்பரதாரர்கள்தான் அப்படியென்றால் பத்திரிகையும்கூடவா கவனிப்பதில்லை?

◆ உங்களுக்கு போட்டியா இன்னொரு மாதஇதழ் வருகுதுபோல?

*ம.தேவசுதன், யாழ்ப்பாணம்*

நானும் பார்த்தேன். அறுவடை நல்ல முயற்சி. போட்டி இருக்கவேண்டும். அப்போதுதான் தரம் கூடும். தரமான போசகர்களை கொண்டுள்ள அவர்கள் அச்சிற்கு முன் அவர்கள் மேற்பார்வைக்கு அனுப்பி அச்சிட்டால் நன்று. முதல் பக்கத்திலேயே திருக்குறளை விரும்பிய இடத்தில் முறித்தும் சிலவற்றை ஒருவரியிலும் அச்சிட்டு வெண்பா மரபையே மாற்றி விட்டார்கள். இது போன்ற இலக்கிய இலக்கண தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதுதான் அதன் போசகர்களுக்கு பெருமை.

◆ இலங்கை - இந்தியா ரெஸ்ட் தொடர் எப்படி?

*கு. விசாகன் ,யாழ்ப்பாணம்*

ஒரு நாள் தொடரில் வாங்கியது போதாதென்று ரெஸ்டிலும் வாங்கிக்கட்டிகொண்டது இலங்கையணி. ஜெயசூரியாவை நிப்பாட்டி என்னத்தை இலங்கைஅனி சாதித்ததென புரியவில்லை.

◆ நக்சலைட்டுக்கள் என்றால் தீவிரவாதிகளா? இது எந்த மொழிச்சொல்? அகராதிகளை புரட்டிப்பார்த்து பயனின்றி கேட்கின்றேன்! நீயும் கைவிட்டுவிடாதே வம்பா..........?

*சு.சங்கீதா வவுனியா*

ஐயோ ஐயோ.... சின்னப்பிள்ளைதனமால்லே இருக்கு.. நக்சலைட் என்பது ஆங்கிலச் சொல்லோ தமிழ் சொல்லோ அல்ல. இந்தியாவில் மேற்கு வங்கமானிலத்தில் டார்ஜில் என்ற மாவட்டத்தில் உள்ள ஒரு இடத்தின் பெயர் நக்சல்பாரி. இப்பகுதியிலிருந்த விவசாயிகளுக்கும் நிலப்பிரபுகளிற்கும் இடையில் ஆயுதப்போராட்டம் ஏற்பட்டது. விவசாயிகளுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் இயங்கினர். அவர்களை நக்சலைட்டுக்கள் என்று அழைத்தனர். பின் அதுவே அப் பகுதியில் தீவரவாதிகளுக்கு பொதுவான பெயராகிவிட்டது.. போதுமா?

◆ ஒரு கடி கடியுங்கள் வம்பா?

*வி. ரமணி, சுழிபுரம்*

உங்களுக்கில்லாத கடியா...? வின்சன்ட்சேர்ச்சிலை உங்களுக்கு தெரியுமா? 2 ம் உலகபோரின் போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர். யுத்தக்கலையில் பெரிய விற்பன்னர். இலக்கியத்திலும் கூட நோபல் பரிசு பெற்றவர். ஓவியம் கவிதை என எல்லாதுறையிலும் முத்திரை பதித்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக இவரை அடையாளப்படுத்துவது இவரின் கடிப்பேச்சுத்தான்.

ஒரு முறை சேர்சிலை வெறுக்கும் பெண் MP ஒருவர் 'நீங்கள் மட்டும் எனக்கு கணவராக வாய்த்திருந்தால் உங்களுக்கு நான் தேனீரில் விஷத்தை கலத்திருப்பேன்' என்று சொல்ல சேர்சில் சொன்ன பதில், 'நீங்கள் மட்டும் எனக்கு மனைவியாக வாய்த்திருந்தால் நான் அதை சந்தோசமாக பருகியிருப்பேன்..."

◆ டிசெம்பர்-26 ?

*சே. ஆரபி உடுப்பிட்டி*

பட்டவற்றை மறப்போம். படிப்பினைகளை மறவோம்!


# இளையவர் பக்கம்

மன்னித்துக் கொள்ளுங்கள் இளையவர்களே....... மீண்டும் நமது பகுதியில் கைவைத்து விட்டார் நமது பக்க வடிவமைப்பாளர்....யூ ஆம் கடந்த இதழிலிலும் புதிர்ப் போட்டியில் 1வது புதிர் பு'ரணமாக இடம் பெறவில்லை. உங்கள் சார்பாக ஆசிரியருடன் போராடி நஷ்டஈடாக உங்கள் ஆக்கங்களும் இடம் பெற வாய்ப்பளிக்கும் விதமாக நமக்கான பக்கங்களை அதிகரித்திருக்கிறேன்...யூ சந்தோசம் தானே....?

சரி சென்ற இதழில் தவறாக இடம் பெற்ற புதிரையே மீண்டும் இம்முறையும் (திருத்தமாக) தருகின்றேன். எங்கே முயற்சியுங்கள் பார்க்கலாம்.

## புதிர்ப்போட்டி 4

**01**



கூட்டல் தவறு தான்......! ஒரேயொரு குச்சியை மட்டும் இடம் மாற்றிச் சரி செய்யுங்கள் பார்க்கலாம்.

**02**

ஊஞ்சல் ஒன்றில் உட்கார்ந்தவாறு ஒரு சிறுமி ஆடிக் கொண்டிருக்கிறாள். திடீரென அவள் ஊஞ்சலில் எழுந்து நின்று ஆட முற்பட்டால் ஊஞ்சலின் ஒரு அசைவிற்கு அதாவது ஒரு புறம் சென்று மறுபுறம் திரும்ப ஆகும் நேரம் கூடுமா? குறையுமா? மாறாதா? அல்லது சிறுமியின் எடையைப் பொறுத்துக் கூடும் அல்லது குறையுமா?

உங்கள் முயற்சிக்கான முடிவுத் தேதி 15-01-2006
முயற்சி வந்தடைய வேண்டிய முகவரி 120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

**A to Z**

A- Affirm உங்களுக்கு நீங்களே உறுதி சொல்லிக் கொள்ளுங்கள். அடித்துச் சொல்லுங்கள் என்னால் முடியுமென்று.

B- Blelieve உங்கள் இருதயத்தில் உங்கள் இலட்சியம் நிச்சயம் நிறைவேறப் போகிறது.

C- Commit காரியத்தில் இறங்குங்கள். தோல்வி ஏற்படுமோ என்று பயந்து பின்வாங்காதீர்கள். (வரும்..)

## அறிவோம்...! வளர்வோம்...!

### உளவியலின் தந்தை

ஓஸ்ரியாவை சேர்ந்த சிக்மன்ட் ;ப்ராய்ட் என்ற உளவியல் நிபுணரின் கண்டுபிடிப்பு, தூக்கத்தில் தோன்றும் கனவுகள் பற்றி மனிதனுக்கு இருந்த பல சந்தேகங்களுக்கு விடை சொன்னது. மூடநம்பிக்கைகளுக்கும் காரணமற்ற பயத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது. 'மனிதனின் ஆசை அல்லது பயம் - இவைதான் அவன் தூங்கும் போது கனவாக வெளிப்படுகிறது" என்பது இவரது கண்டுபிடிப்பு. இந்த கண்டுபிடிப்பே உளவியல் பற்றி பின்னர் எழுதப்பட்ட எழுதப்பட்டுக் கொண்டுள்ள அத்தனை உண்மைகளுக்கும் முன்னுரை....அடிப்படை...........ஆணிவேர்.... எல்லாம்.

### மக்கள் விஞ்ஞானி

தோமஸ் அல்வா எடிசன் விஞ்ஞான சூத்திரங்களை கண்டுபிடிக்கும் ரகம் இல்லை. அன்றாட வாழ்வில் மனிதனுக்குத் தேவைப்படும் சாதனங் களை கண்டுபிடிக்கும் ரகம். இதனால் இவருக்கு மக்கள் விஞ்ஞானி எனும் சிறப்புபெயரும் உண்டு. கிராமபோனாக மாற்றம் கண்ட போனோகிராப், குறைபாடுகளுடன் காணப்பட்ட கிரஹம்பெல்லின் தொலைபேசியில் அவற்றை சரி செய்தமை, வேகமான இயக்கத்துடன் கூடிய ரைப்ரட்டர் இரவைப் பகலாக்கும் மின்குமிழ்கள், சுவாரஸ்யமான பொழுது போக்கிற்கு பேசும் சினிமா என ஆயிரக்கணக்கான நம் வாழ்வில் பின்னிபிணைந்துள்ள கண்டு பிடிப்புக்களின் கர்த்தா எடிசன்தான்.

### பிரிட்டனின் பிளாட்டோ

சேக்ஸ்பியருக்கு பிறகு ஆங்கில இலக்கியத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வரமாக கருதப்படுபவர் அறிஞர் பெர்னாட்ஷா. ஆரம்பத்தில் பத்திரிகையில் இசை விமர்சனம் எழுதி வந்தவர் பின் நாடக விமர்சனங்கள் எழுத ஆரம்பித்து தொடர்ந்து தானே நாடகங்களை எழுத ஆரம்பித்தார். இவரின் சிறந்த கருத்துக்களை பார்த்த இங்கிலாந்து மக்கள் ஷாவை தமது நாட்டின் தத்துவமேதை என போற்றி பிரிட்டனின் பிளாட்டோ என அழைத்தார்கள்.

இவ்வளவிற்கும் 1856ம் ஆண்டில் பிறந்த ஷா பள்ளிப்படிப்பைக் கூட நிறைவு செய்யாதவர். விளையாட்டுக்களிலும் நாட்டமற்றவர். ஆயினும் சிறுவயதிற்குள்ளாகவே பைபிள் முதல் சேக்ஸ்பியர் வரை அனைத்தையும் வாசித்து முடித்திருந்தார். அந்த வாசிப்பு பழக்கம் அவரை பிற்காலத்தில் சிறந்த அறிஞராக்கியது.

## நவீன ஓவியங்களின் பிரம்மா

'ஒரு காட்சியை கண்கள் எப்படி பார்க்கின்றதோ, அதை அதே மாதிரி வரைவதில் என்ன புதுமை இருக்கிறது? அந்தக் காட்சி மனதில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளைத்தான் ஓவியம் பிரதிபலிக்க வேண்டும்". என்ற கருத்தினடிப்படையில் நவீன ஓவியங்களை படைத்தவர் தான் பிக்காசோ. 1307ல் இவர் வரைந்த ஐந்து பெண்களின் ஓவியம், ஓவியக் கலைக்கு மிகப்பெரிய திருப்பத்தை கொடுத்தது. இவரின் இத்தகைய நவீன ஓவியங்கள் பிரபலமாக தொடங்கியதையடுத்து உலகம் இந்த புது வகையான ஓவியமுறைக்கு Cultism என பெயரிட்டு அழைக்க தொடங்கியது.

## ஐரோப்பாவின் பாட்டி

இங்கிலாந்து தேசத்தின் மகாராணியாக 64 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த விக்டோரியா மகாராணிக்கு 9 பிள்ளைகள். இவர்கள் ஐரோப்பாவில் உள்ள பல ராஜகுடும்பங்களின் வாரிசுகளுடன் மணஉறவு கொண்டதால் விக்டோரியா மகாராணியை மக்கள் 'ஐரோப்பாவின் பாட்டி" என அழைத்தனர்.

**தயாரிப்பு -ரூபி**


## செய்து பார்க்கலாம்

### மீன்கள் பறக்குமா..?


நண்பர்களே மீன்கள் நீந்துவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவை பறந்து வருவதை கண்டுள்ளீர்களா?

இப்போ உங்களிற்கு பார்க்க அவலாக உள்ளது அல்லவா? கவலை வேண்டாம் நாமே மீன்களை பறக்க வைத்துப் பார்ப்போம்.

1. 2cm அகலமும் 200cm நீளம் உடைய கடதாசியை வெட்டி எடுங்கள்.



2. இரு பக்கங்களிலும் இருந்து 4cm தூரத்தில் 1 cm பிளவு ஏற்படுத்துங்க. (ஒன்றுக்கு ஒன்று எதிராக)
3. பின்னர் அப்பிளவுகள் ஒன்றுடன் ஒன்று இனணக்குக.
4. இப்போ உங்கள் பறக்கும் மீன் உருவாக்கிவிட்டதல்லவா?
5. பல வர்ணங்களில் பலவற்றை உருவாக்கி மேலிருந்து விடுக.



6. அவை காற்றின் சுழன்றும் வட்டமடித்தும் தரையிறங்குகின்றனவா?

# சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம்

உலக அறிவியல் வரலாற்றில் நடைபெறும் மிகப்பெரிய கூட்டு முயற்சி தான் சர்வதேச விண்வெளி நிலையம். (International Space Station -ISS) இந்த சர்வ தேச விண்வெளி நிலையத்தை அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா, ரஷ்யா, கனடா, பெல்ஜியம், ஜப்பான் மற்றும் பிரேஸில் உட்பட 16 நாடுகள் ஈடுபட்டுள்ளன.

பூமிக்கு வெளியே அண்ட வெளியில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்தி ரங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு


தி.கௌதமன்,
வசாவிளான் ம.ம.வி
ஆண்டு - 08


புவிக்கு வெளியே நிர்மாணிக்கப்படும் ஒரு தரிப்பிடமே சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம். பலமாதங்கள் புவிக்கு வெளியே தரித்து நின்று ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆராய்ச்சியாளருக்காக இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வரப்பிரசாதமாக அமையும்.

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் மொத்த எடை 4 இலட்சத்து 71 ஆயிரத்து 700 கிலோகிராம். இதன் சூரிய ஒளி தகடுகள் ஒரு ஏக்கர் விரிந்து பரந்திருக்கும். உட்பகுதி ஒரு பெரிய ஜம்போ ஜெட்டின் உட்பகுதியைவிட அளவிற் பெரியது.

இந்த சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. இதில் 6 ஆய்வுகூடங்கள் மற்றும் ஒரே நேரத்தில் 7 விண்வெளி வீரர்கள் தங்கும் வசதிகள் என்பன இருக்கும். அத்தோடு விண்கலங்கள் இதில் இணைய இணைப்பு வசதிகளும் தனியாக பொருத்தப்பட் டிருக்கும். பரந்து விரிந்து இருக்கும் சூரிய ஒளித் தகடுகள் அருகே தண்டவாளம் பொருத்தப்பட்ட பாதை யும் உண்டு. இது தவிர ராட்சத இயந்திரக்கை (ரோபோ) ஒன்றும் இதன் வயிற்றுப் பகுதியில் உண்டு.

இதன் கட்டுமானப் பணிகள் 1998 ஆண்டு நவம்பர் 10ம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய தினம் கஜகஸ்தானின் விண்தளம் ஒன்றில் இருந்து ஆராய்ச்சி நிலையத்தின் முதல் பகுதி விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்டது. ஆய்வு நிலையத்தின் மையப் பகுதியான அதற்கு ஜார்யா என்று பெயரிடப்பட்டிருந்தது. ஜர்யா என் றால் சூரிய உதயம் என்று பொருள்

● *சினிமா விமர்சனம்*

# தவமாய் தவமிருந்து...

**தவமாய் தவமிருந்து** - பெற்றவர்களுக்கு குறைவைத்தவர்களின் மனசை குற்றவாளி கூண்டாக மாற்றும் படம்.

இயக்கமென்னும் ஏர்க்கலப்பையால் படம் பார்ப்பவர்களின் நெஞ்சங்களை ஆழமாக உழுகிறார் சேரன்.

காதல், தீவிரவாதம், நகைச்சுவை, அரசியல், ஆன்மீகம் என குறிப்பிட்ட முகங்கள் மட்டும் காட்டிவரும் தமிழ்சினிமாவில் வாழ்க்கையின் வழிகளையும், வலிகளையும் நடவு செய்திருக்கும் ஒரு கதை.

பிரிண்டிங் பிரஸ் வைத்திருக்கும் ராஜ்கிரணுக்கு இரண்டு மகன்கள். தனது தூக்கத்தையெல்லாம் உழைப்பிற்கு தின்னக்கொடுத்து மகன்களின் கனவை நனவாக்கி மகிழும் தந்தை.

இப்படிப்பட்ட மனுஷனுக்கு மிதமிஞ்சிய ஆசை என்னவாகயிருக்கும்? பருவத்திற்கு வரும் மகன்கள் தனது சுமைகளை இறக்கிவைப்பார்கள் என்ற எதிர்பார்ப்புதான். ராஜ்கிரணின் ஆசையும் இதுதான். ஆனால் புதிது புதிதாய் புறப்படும் பிரச்சனை புயல் குடும்ப சந்தோஷத்தில் மண்ணை அள்ளிப்போடுகிறது. இவர் வாழ்க்கையின் இறுதி வடிவம் எப்படியிருக்கும் என்பதற்குவிடை தேடுகிறது இப்படம்.

மருத்துவமனையில் இருக்கும் அப்பாவை பார்க்க காரில் வரும் சேரன், தனது நடை வண்டி பருவத்தையும் கடந்து வந்த பாதையையும் ஞாபகப்படுத்துவதுபோல் படம் செல்கிறது.... செல்கிறது... மூன்றுமணி இருபது நிமிடம் செல்கிறது.

சேரன் படம் என்றால் உருக்கமான காட்சிகள் இருக்கும். எனவே, எந்த இடத்திலும் அழுவதற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது என்று அழுத்தமாக உட்கார்ந்தால் அவ்வப்போது நம்மையும் அறியாமலேயே பொசுக்கென்று பொங்குகிறது கண்ணீர்.



இப்படி மனசை கனப்படுத்தும் திடமான காட்சிகள் இருப்பினும் தேவையில்லாத காட்சிகள், கொளுத்திவைத்த கொசுவர்த்தி சுருள் போல திரைக்கதையை மெல்ல நகரவைக்கிறது. கல்லூரியில்

இடம்பெறும் காட்சி கள், சேரன் - பத்மப்ரியா பாடல் காட்சி, வேலை தேடும் படலம் போன் றவற்றின் அளவை குறைத்திருந்தால் படத்தின் வேகம் கூடியிருக்கும்.



சைக்கிளின் முன் புறம் இளையவ னையும், பின்புறம் மூத்தவனையும் உட்காரவைத்து சின்னச்சின்ன பாடங் களை சொல்லித்தரும் காட்சியில் ஆரம்பித்து சாகக்கிடக்கும் நேரத்தி லும் 'ஏம்பா உனக்கும் ஏதாவது குறை வச்சுட்டேனா' என்று சேரனிடம் கேட்டுவிட்டு கண் மூடும் காட்சிவரை ராஜ்கிரணின் நடிப்பில் இரும்பு மன சையே உருக்கிப்போடும் கெமிஸ்ட்ரி.

ராஜ்கிரணுக்கு அடுத்தபடி நடிப்பில் இரண்டாவது ராங்க் எடுப்பவர் சேரனின் அண்ணியாக வரும் மீனாள். முகத் தில் எள்ளும் கொள்ளும் வெடித்தபடி மாமனார் மாமியாரிடம் அலும்பு செய் யும் காட்சிகள் அடடே அமர்க்களம்.

அப்பாவும் அம்மாவும் பட்டபாடு களை நினைத்து அவர்களை சந்தோஷப்படுத்த முயலும் மகனாக சேரன் உருகவைக்கிறார். நாயகி பத்மப்ரியாவின் நடிப்பு தகுதிக்கு தலை வணங்கலாம். என்றாலும் கல்லூரி மாணவிக்கான முகமும் உடல்வாகும் பொருத்தமானதாக இல்லை.

சேரனின் அம்மாவாக வரும் சரண்யா அத்தனை கச்சிதம். மருமக ளுக்கு மகன் அல்வா வாங்கி தரும் போது, 'ஏன் நானெல்லாம் அல்வா திங்க கூடாதாக்கும்' என்று சரண்யா நக்கலடிக்கும் காட்சிகளில் அல்வா வின் தித்திப்பு.

சபேஷ்-முரளியின் பின்னணி இசை க்கு முதல்முறையாக முதல் ராங்க் கொடுக்கலாம். சினேகன் வரிகளில் 'ஒரே ஒரு ஊருக்குள்ள...' பாடலில் கமகமக்கிறது கிராமிய மணம்.

புதுமை என்னும் பெயரில் எதையெ தையோ புகுத்தி தமிழ்சினிமாவை குப்பை மேடாக்கிக்கொண்டிருக்கும் சிலருக்கு மத்தியில் வாழ்வின் அடையாளங்களை படச்சுருளில் பத்திரப்படுத்தியிருக்கும் இயக்குனர் சேரனுக்கு இன்னொரு முறை தேசிய விருது கொடுக்கலாம்.

'தவமாய் தவமிருந்து....'

- கண்ணீர் கவிதை.

# முராரி ... தொடர் நவீனம்

-பிரசாத்

7

TASA வின் தலைமையகம். தன் மடிக் கணினியில் மாலை பத்திரி கையாளர் மாநாட்டில் காண்பிப்ப தற்கான விடயங்களை உட்புகுத்திக் கொண்டிருந்தான். வெளியு'ருவில் நிகழ்ந்த இடத்தில் பெறப்பட்ட ஒளிப் படப் புகைப்படப் பதிவுகளில் தேவை யான விடயங்களைத் தொகுத்தான்.

பத்திரிகையாளர்களைத் தான் தவறான முறையில் வழிப்படுத்தி விட்டால் அது பெரிய பாரதூரமான விளைவுக ளைத் ஏற்படுத்தி விடும் என்பதை அவன் உள்மனம் எச்ச ரித்துக் கொண்டிருந்தது. அவன் மிக விழிப்பாகத் தகவல்களைத் தொகுத் துக் கொண்டிருந்தான்.

தான் கூற வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஒன்றுக்கு இரண்டு தடவையாகச் சிந்தித்தான். இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் அந்நியப் பிரவேசங்கள் நிகழ்ந்தபோது மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவு கள் தொடர்பான குறிப்புககளை புரட்டிக் கொண்டான்.

காவல்துறையுடன் தொடர்பு கொண்டு இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினர் ஆய்வு மேற்கொண் டார்களா? என்பதை உறுதி செய்து கொண்டான்.

வேலையில் கருத்தூன்றியிருந் தவனை அவனது ஞாபகமூட்டியின் எலாரம் கலைத்தது. 'உங்கள் கவனத்துக்கு, தங்களுக்கான தேநீர் வேளை'', என்றவுடன் தன் சுழல் கதிரையைச் சுற்றிக் கொண்டு பின்னே நகர்ந்து பின்னேயிருந்த காலவிடை இயக்கியில் தயாராகியி ருந்த தேநீரை எடுத்தவன், அப்படியே நகர்ந்தான். அருகேயி ருந்த யன்னலிற்குப் போடப்பட்டிருந்த அசைதிரையினின்று தொங்கிக் கொண்டிருந்த நகர்த்துவானை இழுத்தான்.

யன்னல் வழியே அற்புதமான காட்சி விரிந்தது. அவனது அறைக் குப் பின்புறமாக அமைந்திருந்த மலைத் தொடர்களினூடு இதோ இறங்கி விடப் போகிறேன், என்று சொல்லிக் கொண்டிருந்த சூரியன் காட்டிய வர்ணஜாலங்கள், தரை யெங்கும் படர்ந்திருக்க இயற்கை விரிப்பின் மீது பாய்ந்து ஒரு மாயாலோ கத்தைச் சிருஷ்டித்துக் கொண்டி ருந்தன. அவற்றினிடையே வெளிகளில் வானூந்துகளில் திரிந்தவாறு பறக்கும் பந்தடித்துக் கொண்டிருந்த சிறுவர்

கள் அடிக்கடி வந்து மறைவது அதியற்புதமாக இருந்தது.

இந்த இதமான காட்சியின் இனிமையோடு கணினிக் கணிப்பின் அளவில் கலந்து விடப்பட்டிருந்த தேநீர் உடலினுள் இறங்குவது பேரின்பம் கூட்டியது. இனிய இசைத் தட்டை இரசிக்கையில் ஏற்படும் கீறல் பிசிறு போல் தற்போது அடிக்கடி ஏற்படும் அந்நியத் தரையிறக்கங்கள் மனதை நெருடியது.

நீண்டகாலமாகப் போராடித் தன்னாட்சி உரிமையைப் பெற்றுத் தலை நிமிர்ந்த எம் நாடு, பின் தொடர்ந்த எல்லைப்பு'சங்கள், உடன் பிறந்தே கொல்லும் நோய் போன்ற உட்பு'சல் கள் யாவற்றையும் அயராது போராடி அழித்து அமைதியை எட்டியுள்ள இந்நி லையில் இப்படி அடிக்கடி ஏற்படும் இந்தத் தரையிறக் கங்கள் இன்னும் ஏதோ விபரீதத் துக்கான வித்தா கவே இருக்கப்போ கிறது, என்று ஆழ்ம னம் எச்சரித்துக் கொண்டிருக்கவே செய்தது.

தேநீர் அருந்தி முடித்தவன் அறைதி ரையை மூடிவிட்டுத் தன் மேசைக்கு நகர்ந்தான். தயாராக்கியிருந்த Slide Show வை ஒரு முறை Display பண்ணிப் பார்த்துக் கொண்டான். மனது ஓரளவு திருப்தியை அடைந்ததும் மேசையிலி ருந்த உள்ளழை கருவியை அழுத்தினான்.

301 ஐ அழுத்திய கையுடன் தமிழன் 301, 'வாழ்க தமிழ், வணக்கம், தங்கள் சேவைக்கு" என்று கதவு திறந்தான். 'வாழ்க தமிழ், என்றவன்" தமிழன் 301 விஞ்ஞானி வி .பிளாக் எழுதிய 'பு'மிப்பயிர்" புனைகதை வாசித்தாயா?" என வினாவினான். 'இது வரை இல்லை"



என்றான். 'சரி, நீ சென்று பனுவற் காப்பகத்தில் இருக்கும் அதன் ஒரு பிரதியைப் பெற்றுவா, அவர் எழுத்துக் கள் தீர்க்கதரிசனமானவை. அந்தக் கதைகூட இப்படியான அந்நிய ஊடுருவல் சம்பந்தமான ஒரு கதைதான். அதில் ஏதேனும் விடயங்கள் புலனாகலாம். எனவே இது பற்றி யாருடனும் கலக்க வேண்டாம். உன்னளவில் இருக்கட் டும்" என்றான். 'அப்படியேயாகட்டும். வாழ்க தமிழ்"

நேரம் மாலை 5 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. 'TASA" வின் வெளித்தொடர்புக் கேட்போர் கூடத்தில் பத்திரிகையா ளர்கள் நிரம்பத் தொடங்கியிருந்த னர். செல்லிடத் தொலைபேசிகள் ரிங்கிக் கொண்டிருந்தன. ஊடகத்து றையினர் அதனை நேரடியாகவே தங்கள் அலுவலகங்களுக்கு அஞ்சல் செய்வதற்கான முன்னேற் பாடுகளில் தீவிரமாயிருந்தனர்.

தன் அலுவலகத்திலிருந்தவாறே இவற்றைக் கவனித்தவாறிருந்தான். நேரத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டவன், தன் அலுவலகத்தை அடுத்திருந்த பிரத்தியேக அறையை நாடிச் சென்றான். சிந்தனைகளின் சூழலில் சிக்கியதால் தன் புறத்தோற் றம் பற்றி எதையும் கருதாதிருந்தவன் கண்ணாடியைப் பார்த்துக் கொண் டான். தான் உத்தியோக பு'ர்வ உடையின்றியிருப்பதைப் பார்த்தவன், தன் நிலையை எண்ணி வியந்து கொண்டான். உடைமாற்றி விட்டு, ஒரு முறை 'ஷவரில்" நின்று தன்னைப் புத்துணர்ச்சியாக்கி உத்தியோக பு'ர்வ உடையை அணிந்தான். தலையை கீறிம் தடவி வாரிக் கொண்டவன் தொப்பியைத் தரித்தவன் இடுப்புப்பட்டியை அப்ப டியும் இப்படியுமாக அசைத்துச் சீர் செய்து கொண்டான். வெளியே வந்த வனை, 'வாழ்க தமிழ், வணக்கம்" என்றவாறு எதிர்கொண்டான் தமி ழன். அவன் முகத்தில் பதட்டம் அப்பட்டமாகத் தெரிந்தது.

* * * * * * * * * * *

முராரி பதறிக் கூவியதும் அவ னைப் பின் தொடர்ந்து குருவுக்கு வழங்கக் கூடிய பணிவிடைகளைச் செய்த அணுக்கத் தொண்டர்கள் பதறிப் போய் ஸ்தம்பித்து நின்றனர். அவர்களில் முதியவரான ஒருவர் சட்டெனச் சுதாகரித்துக் கொண்டு, 'ஐயனே என்னவாயிற்று அடியோர் ஏதேனும் அபவாதம் இழைத்திருந் தால் தயவு செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

கண்களில் நீர் பனிக்க, 'கூடாது தாங்கள் இவ்விதம் நடந்து கொள் ளக் கூடாது. குருதேவரின் அன்பிற் குப் பாத்திரமாகி அவருக்கு அணுக் கத் தொண்டர்களான தாங்கள், எளியேனுக்குப் பணிவிடை செய்வதா? ஒருபோதும் கூடாது." என்று பகர்




ந்த முராரிக்கு 'ஐயனே, எப்போது குருதேவர் அடுத்து சந்நிதானம் தாங்கள் என்று திருவாய் மலர்ந்தாரோ அக்கணம் முதலே தங்களை நாங்கள் குருவாகவே பாவிக்கின்றோம். தயைகூர்ந்து இந்தப் பாக்கியத்தை எமக்கு அருள வேண்டும்.'' என்று பதிலுரைத்தனர் அணுக்கத் தொண்டர்கள்.

'இல்லவே இல்லை. பரதன் எவ்வாறு இராமபிரான் பாதுகையை அரச கட்டிலில் வைத்துத் தாம் நாட்டைப் பரிபாரித்தாரோ, அவ்வாறே யாமும் செய்யக் குருவருள் முன்னிறுத்துகிறது. அதே போலக் குருவருளே சந்நிதானம்யூ யாம் வெறும் கருவி வெறும் பிரதிநிதி. அவ்வளவு தான். அதன் காரணமாக குருவுக்கான இந்த உபசார, உபகாரங்கள் எதனையும் ஏற்பதற்கில்லை இது எளியேனது ஆசை. தயவு கூர்ந்தருள்க'' என்றவன் விடுவிடுவென விரைந்தான்.

தன்னுடன் வர முற்பட்ட அன்பர்களையெல்லாம் சமாதானப்படுத்தித் தடுத்தவன், தாயாரைக் காண்பதற்காகக் கடுகி விரையத் தொடங்கினான்.

யோகப்பயிற்சியால் உறுதியான உடல் கைவரப்பெற்றிருந்தாலும் வயதின் இளமை காரணமாக உடல் சற்றுத் தளரும் வேளைகளில்

"குருவே சரணம்" என்று உச்சரித்தவாறு அருள் பொழியும் பெரியவர் திருமுகத்தை மனதில் நினைத்தவாறு தன்னைப் புத்துணர்ச்சி கொள்ள வைப்பான். தொடர்ந்தும் நடப்பான்.

அப்படியும், தொடர்ந்த பயணத்தால் அவன் தேகம் மிகவும் களைத்துப் போயிற்று. எங்காவது ஓய்வெடுக்கலாம் என்று பார்த்தவனுக்குச் சற்றுத் தொலைவிற் தென்பட்ட கோயில் தெம்பு'ட்டியது. ஒருவாறு கோயிலை அடைந்தவன். சிரம பரிகாரங்களை மேற்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையாய் அமைந்த அந்த தேவஸ்தானத்தின் மூலவரை மனமுருகிப் பிரார்த்தித்தவன் அங்கிருந்த மண்டபத்தில் படுத்து ஓய்வெடுக்கவும் தலைப்பட்டான்.

நெடுந்தூரம் ஓய்வின்றி நடந்தே வந்தவுடல் மிகக் களைத்திருந்ததால் உறங்கியும் போனான். இதமான குளுகுளு காற்று அவனை அரவணைத்து வீசியது. நீண்ட நேரம் தூங்கியவனை 'குழந்தாய், எழுந்திரு "என்றகுரல்தூக்கம் கலைத்தது.

கண்விழித்தவன் முன்னே கருணையே உருவானாற்போல ஒரு வயோதிபத் தவசி பழுப்பேறிப் போன வெள்ளை வஸ்திரம் அணிந்து அமர்ந்திருந்தார். எழுந்தவன், அவரைப் பணி வுடன் வணங்கிக் கொண்டான். 'ஐயனே தாங்கள்......" என்றவனைப் புன்சிரிப்புடன் நோக்கியவர் 'நான் ஒரு பரதேசி அப்பனே, இவ்விடத்தில் சிலகாலமாக தரித்திருக்கிறேன். நீ நீண்டதூரப்பயணத்தால் களைத்து இருக்கிறாய், பசித்திருக்கிறாய், உனக்காகப் பெருமானுடைய பிரசாதம் எடுத்து வைத்திருக்கிறேன். வா, உண்டு பசியாறு, பின் பேசலாம்" என்றார்.

அவர் எதிரில் சப்பணமிட்டு அமர்ந்தான். பெரியவர் தேக்கிலையைப் போட்டுப் பிரசாதத்தைப் பரிமாற உண்ணத் தொடங்கினான். இவன் உண்டு முடிக்கும் வரை முன்னேயிருந்த பெரியவர், உண்டு நிறைந்தவுடன் கண்ணிமைப் பொழுதில் காற்றோடு கலந்து விட்டார். கண்ணிமைக்கும் வேளையில் நிகழ்ந்த இந்த அற்புதத்தால் முராரி ஸ்தம்பித்துப் போய் நின்றான். - வளர்வான் -

## நட்பின் பண்புகள் சில.

ஆயிரம் பேர் உனக்கு நண்பனாக இருக்கலாம். ஒருவன் மட்டுமே உன் ஆலோசனையாளனாக இருக்கட்டும்.

பழைய நண்பனைக் கைவிடாதே. புதியவன் அவனைப்போல் ஆகமாட்டான்.

நல்ல நண்பனைப் பெற்றுக்கொண்டவன், வாழ்வில் சரிபாதியைப் பெற்றுக்கொள்கிறான்.

நட்பில் உடனடி இன்பத்தைத் தேடுவது தவறு.

தத்துவம்

# அதுவா...? இதுவா...?

–ஆரபி

ஒரு நாள் அதிகாலையில் துறவி ஒருவர் தனது சீடர்களை அழைத்தார்.

குருவின்குரல் கேட்டதும் எல்லாச்சீடர்களும் தமது வேலைகளை விட்டுவிட்டு ஓடிவந்து அவரைச் சுற்றி நின்றார்கள்.

"எனக்கு ஒரு சிக்கல்" என்றார் குரு.

சீடர்களுக்கு வியப்பு. எந்த விதமான பற்றும் இல்லாத, சிக்கல்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட குருவுக்கே சிக்கலா?

"என் மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டு விட்டது.அதற்கு விடை காணவே உங்கள் எல்லோரையும் அழைத்தேன்".

சீடர்களுக்கு இன்னும் ஆச்சர்யம். அவரை நாடி எத்தனையோ பேர் வருகிறார்கள். அவர்களின் சந்தேகங்களையெல்லாம் தீர்த்து வைப்பவர் இவர். இவருக்கே சந்தேகமா? அதிலும் நாம் பதில் சொல்லக்கூடிய அளவிலா?

இருந்தாலும் என்ன சந்தேகம் என்று அறியும் ஆவலுடன், "என்ன சந்தேகம் குருவே?" என்று அனைவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

குரு சொன்னார்.

"நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அந்தக்கனவில் நான் திடீரென பல வித நிறங்களுடன் கூடிய அழகிய வண்ணத்துப்பூச்சியாக மாறிவிட்டேன். பின் பறந்து சென்று தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு மலரிலும் அமர்ந்து தேன் குடித்துக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான் திடீரென்று கனவு கலைந்து விழிப்பு ஏற்பட்டுவிட்டது."

"இது ஒன்றும் துர்சொப்பனம் இல்லையே! நல்ல கனவுதானே?" என்றான் ஒரு சீடன்.

"இப்போது என் கேள்வி இந்தக் கனவின் பலன் என்ன என்பதல்ல. இப்போது நான் யார்? அதுதான் என் கேள்வி," என்றார் குரு.

சீடர்கள் விழித்தார்கள்.

"நான் கண்ட கனவில் நான்பட்டாம் பூச்சி. விழித்த பிறகு துறவி. இப்போது எது தூக்கம்? அது விழிப்பு? துறவியாகிய நான் தூங்கி கனவில் பட்டாம் பூச்சியாக இருந்தேனா? அல்லது அந்த பட்டாம் பூச்சி தான் தூக்கத்தில் துறவியாக கனவு காணுகிறதா? விழித்த பின்புதானே அது கனவு என்பதே தெரிகிறது! அதுவரை அது மிகத்தத்ருபமாக அல்லவா இருக்கி

றது.? அப்படி இருக்க இதில் நான் யார்? இந்த 'நான்' என்பதன் பங்கு இதில் என்ன?"

சீடர்கள் விழித்தார்கள். இதைக்கண்ட குரு இன்னும் விளக்கமாக பேசினார்.

"எல்லா ஜீவன்களுக்கும் நினைவு உண்டு. என் பெயர் பரசுராம். நான் கனவில் ஒரு பட்டாம் பூச்சியாக மாறினேன் என்றால் ஏன் அந்த பட்டாம் பூச்சி தன் கனவில் பரசுராம் ஆக மாறியிருக்கக் கூடாத."

சீடர்கள் திகைத்து நின்றனர். ஒருவன் சொன்னான்

"குருவே! நாங்கள் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டோம். இதுவரை நாங்கள் நம்பி வந்த அடிப்படைக் கோட்பாடுகளையே இது அடியோடு தகர்க்கிறது. இந்தக் கணம் வரை நாங்கள் உறங்கும் போது காணும் காட்சிகளை கனவு என்றும், உறக்கம் கலைந்த பிறகு நடப்பவை நனவு என்றும் கருதி வந்தோம். இப்போது உங்கள் கேள்வி எங்களை பெரிய பிரச்சினையின் எதிரில் நிறுத்தி விட்டது. இதற்கு விடைகாண எங்களுக்கு திறன் போதாது."

இப்போது குரு சொன்னார்.

"கனவு காணும் போது பகலில் நடந்த எந்த நிகழ்ச்சியும் நினைவுக்கு வருவதில்லை. விழிப்பு நிலையில் கனவுகள் மறந்து விடுகின்றன. நினைவுகள் தான் முக்கியம் என்றால் பகலில் கனவுகள் ஓரளவுக்காவது ஞாபகம்வரும். ஆனால் கனவிலோ பகலில் ஓர் இம்மிகூட நினைவிருப்பதில்லை. பகலின் காட்சிகளை விட கனவில் நடப்பவை முழுமையாக உண்மையாக இருக்கின்றன. தூங்கச் செல்பவன் விழிக்காமல் தூங்கிக் கொண்டிருந்தால் அவன் காணும் கனவு உண்மை அல்ல என்ற உணர்வே அவனுக்கு வராது."

வாழ்க்கையும் கூட ஒரு பெரிய தூக்கத்தில் காணும் தொடர் கனவாக ஏன்இருக்க முடியாது?

மரணம்தான் விழிப்பாகவும் இருக்கக்கூடுமே! காணும் கனவை எப்படி நாம் நம் விருப்பப்படி இயக்குவதில்லையோ அது போல் வாழும் வாழ்வையும் முழுமையாக அதன்போக்கில் வாழ வேண்டும்.

'நோதம் தணிதலு மற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே'

**கடி**

ஆங்கில எழுத்துக்களுள் குளிருட்டபட்ட எழுத்து எது?
B
(A, C க்கு நடுவில் இருப்பதால்)

**நொடி**

ஓடையில் ஓடாத நீர்
ஒருவரும் குடிக்காத நீர்
கண்ணீர்.

# கணினி உலா
# e ~ commerce

வணக்கம் வாசகர்களே,

சென்ற முறை தொழில்நுட்ப துறையில் இன்றைய நாட்களில் பிரபல்யமாகி கொண்டு வரும் 'Blue tooth" தொழில் நுட்பம் பற்றி சில விடயங்களை உங்களுக்கு சொல்லியிருந்தேன். இந்தமுறை அதைவிட முக்கியமான ஒரு விடயத்தை பற்றி கதைக்க போகிறேன்.

இப்போதேல்லாம் **Business** கள் **Internet** இல் நடக்க தொடங்கிற்று. அதைபற்றியும் நாங்க கொஞ்சமாவது அறிந்து வைத்தால் தான் உலகத்தினோடு ஈடுகொடுத்து வாழலாம். சரி.. சரி.. விடயத்திற்கு வாறன்.

**Internet**ல் செய்கிற **Business**க்கு பேர் தான் **E-Commerce** என்கிற மின் வணிக முறை.

பொருட்களை சந்தைப்படுத்தும் முறைகள் காலத்துக்கு காலம் மாறுதல் அடைந்து வருவதை நாம் கண்டிருக்கிறோம்.

பல வருடங்களுக்கு முன்னர் சோப்பு, சீப்பு, கண்ணாடி, பவுடர் என வீடு வீடாக கூவி விற்றவர்களை நாம் அறிவோம். மீன், மரக்கறி, பழ வகைகள் போன்றவைகூட நம் வாசலைத் தேடிவந்த காலமுண்டு. இன்றும் இது தொடர்கிறது.

பின்னர், சந்தைக்குப் போய் தேவையான பொருட்களை வாங்குவதை பலர் விரும்பினார்கள்.

பலவிதப் பொருட்களை ஒரே இடத்தில் பார்த்து வாங்கக் கூடியதாகயிருக்கிற, விற்பனையாளர்களை சந்தித்து பேசி பொருளின் தரத்தினை சரியாக மதிப்பீடு செய்து வாங்கக் கூடிய நிலையை சந்தைகள் தோற்றுவித்தன. இதனால் வாடிக்கையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையே ஒரு நல்ல உறவு உருவாகியது.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக சுப்பர் மார்க்கெட் எனப்படும் நவீன பல்பொருள் அங்காடிகள் நகரங்களையும் தாண்டி கிராமங்களிலும் தமது காலடியைப் பதித்தன.

நேரமின்மை எனும் ஒரு காரணி இத்தகைய பல்பொருள் அங்காடிகளின் வளர்ச்சியிலும் பெருக்கத்திலும் செல்வாக்குச் செலுத்துகிறது.

எனினும், இந்த நேரமின்மையானது மேலும் விஸ்பரூபமெடுக்க - பல்பொருள் அங்காடிகளுக்கு சென்று, நேரடி தொடர்பு கொண்டு பொருட்களை வாங்கவோ, விற்கவோ இயலாது போக இணையத் தளம், மின்அஞ்சல், தொலைபேசி, தொலைநகல் முறைகள் மூலம் வணிகம் செய்யும் முறை பரவலாக ஆரம்பித்திருக்கிறது.

தூரம், பருவகாலம், போக்குவரத்து வசதி குறைவு, வேலைகாரணத்தால் நேரம் போதாமை, தேவையான பொருட்களை திருப்தியடையக் கூடிய

அளவுக்குத் தேடிக் கண்டுபிடிப்பதில் சிரமம், உடனடித் தேவை, விலையை ஒப்பிட்டுப்பார்த்து வாங்குதல் போன்ற காரணிகளுக்கு மதிப்புக் கொடுத்து வாங்குவோரினதும் விற்பனை செய் வோர்களினதும் நோக்கத்தை பு'ர்த்தி செய்ய மின் வணிகம் பெரிதும் உதவு கின்றது.

வீட்டில் இருந்த வாறே வசதிப்பட்ட நேரத்தில் கணினியு'டாக இணையத் தளத்தை பாவித்துப் பொருட்களை வாங்கவோ விற்கவோ முடியும்.

உதாரணத்திற்கு, amesan.com ஊடாக புத்தகங்களை வாங்கலாம் விற்கலாம். இது போன்று **eBay** யும் ஒரு முக்கிய மின் வணிகம் செய்யும் வெப் தளமாகும்.

மின் வணிக முறை, தொழில் நுட்பம் வளர்ந்து வரும் கால கட்டத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்லலாம்.

இம்முறைக்கு தேசங்களின் எல்லை கள் கிடையாது. இலங்கையில் வெளி யான புத்தகத்தையோ அல்லது உற்பத் தியான பொருளையோ சுங்கவரி போன்ற பிரச்சனைகளின்றி கனடாவில் வாழ்பவர் ஒருவர் வாங்கலாம்.

ஆனால், அந்நாட்டில் இருந்து பார்சலில் வாங் கிய பொருள் நம்மை வந்த டைய சில தினங்கள் செல்லும். பொருளை விற்ப வரின் முகத்தைப் பார்த்து உரையாடத் தேவையி ல்லை. பொறுமைதான் அவசியம்.


பொருளை விற்பவர் விற்பனை நிலையத்திற்கு வாடகை செலுத்தத் தேவையில்லை. மனித வளத்தின் பயன்பாடு குறைவு. வாங்குபவர்கள் தம் வாகனத்தைத் தரிக்க இடம் தேடத் தேவையில்லை. போக்குவரத்து நெருக் கடி பிரச்சனைகளைத் தாண்டிச் செல் லத் தேவையில்லை.

இன்றைய நாட்களில் உலகில் மின் வணிகத்துறையில் முதல் இடத்தைப் பெறுவது டென்மார்க் தேசமாகும்.

ஆசிய நாடான சிங்கப்பு'ர்கூட 7ம் இடத்திற்கு உயர்ந்து விட்டது. இதற்கு காரணம், **Broad Band Internet Connection** என்ற தொழில்நுட்பத் துறையில் உலகில் அந்நாடு முன்ன ணியில் இருப்பதே.

ஆசிய நாடுகளில் ஹொங்கொங், தென் கொரியா போன்றநாடுகளும் முன்னேறி வருகின்றன. இந்தியாவில் கணினி தொழில்நுட்பம் முன்னேறினாலும் அடிப்படை இணையத்தள வசதிகள் **(Inter net Infra Structure)** இன்னும் அவ்வளவிற்கு முன்னேற





வில்லை.

இலங்கையைப் பொறுத்தளவில் ஒரு சில வங்கிச் செயற்பாடுகள் தவிர்த்து வேறெந்த மின் வணிக முறையும் சரியாக முறைமைப்படுத்தப்படவில்லை.

மின் வணிகத்தைச் செயல்படுத்தும் இணையத்தளப்பக்கம் ஒன்றை சிருஷ்டிக்க முன்னர் பல விடயங்களை கவனத்தில் எடுக்கவேண்டும். பக்கம், பார்ப்பவர்கள் மனதைக் கவரக்கூடியதாகவும், எளிமையாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

திட்டமிடும் போது எத்தனை வாடிக்கையாளர்களை எதிர்பார்க்கிறீர்கள், பக்கத்தை உருவாக்க செலவு எவ்வளவாகும், நோக்கம் என்ன, எந்த மொழியில் வியாபாரம் செய்யப்போகிறீர்கள், எவ்வாறு விற்ற பொருளுக்குப் பணத்தைப் பெறப் போகிறீர்கள் போன்ற கேள்விகளுக்கு பதில் காண்பது அவசியமாகிறது.

இணையத்தளத்தின் மூலம் வணிகம் செய்வதினால் வாடிக்கையாளர்களைப் பற்றி முழு விபரங்களும் பெற ஏதுவாகிறது. இவ்விபரங்களை சேமித்து அலசி ஆராய்ந்து சந்தை பற்றிய ஆராய்ச்சியினை செய்யவும் வசதி ஏற்படுகிறது.

ஒருவர் எத்தனை தடவை வெப் பக்கத்தைப் பார்த்திருக்கிறார். எத்தகைய பொருட்களை வாங்கியுள்ளார், மின் அஞ்சல் பற்றிய விபரம், எந்த நாட்டவர் போன்ற விடயங்களைப் பெறலாம்.

இதனால் புதுப்பொருட்கள் வியாபாரத்துக்கு வரும் போது வாடிக்கையாளருக்கு மின் அஞ்சல் மூலம் அறிவிக்கக் கூடியதாக இருக்கும்.

இந்த வசதியை சாதாரண வணிக முறை மூலம் நடைமுறைப்படுத்துவது கடினம். செலவும் அதிகமாகும். அது மட்டுமன்றி வாங்கும் பொருட்களை எந்த தேசத்து மக்கள் விரும்பி வாங்குகிறார்கள் என்பதையும் அறியலாம்.

சாதாரண வணிக முறையில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டுமே பொருட்களை வாங்கலாம். அதுவும் காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை மட்டுமே வாங்கலாம்.

ஆனால் மின் வணிகத்தில் எத்தினமும் 24 மணி நேரமும் வாங்கலாம். நாடுகளுக்கிடையிலான நேர வித்தியாசம் மின் வணிகத்தை பாதிக்காது. இணையத்தளத்தில் மின் வணிகக் கடைவாசல் எந்நேரமும் திறந்த படி இருக்கும். எவரும் வரலாம் போகலாம்.

வங்கிக் கணக்கு வைத்திருப்பவருக்கு மின் வணிக முறை ஒரு வரப்பிரசாதம். ஒவ்வொரு நாளும் வங்கிக் கணக்கை கண்காணித்து பணத்தை ஒரு கணக்கில் இருந்து இன்னொரு

கணக்கிற்கு மாற்றவோ, சம்பளம் கணக்குக்கு போயாகிவிட்டதா? என அறியவோ- தொலைபேசி, கிரடிட் கார்ட், காஸ், மின்சாரம், வங்கியில் பெற்ற கடன் ஆகிய பில்களை வங்கிக்கு போகாமலே வீட்டிலிருந்து செலுத்தவோ வசதியுண்டு.

பங்கு வியாபாரத்தை கூட வீட்டில் இருந்து செய்து ஆதாயம் பெறலாம். அது மட்டுமன்றி விடுமுறையில் பிறநாடு சென்றிருந்தால் கூட அந்நாட்டில் இருந்து கொண்டே வங்கிக் கணக்கை பரிபாலனம் செய்யலாம்.

மின் வணிகம் ஹோட்டல்களில் போய் தங்குவோருக்கும், விமானத்தில் பயணம் செய்வோருக்கும், சுற்றுலா செல்பவருக்கும் மிக வசதியான ஒன்றாகும்.

ஹோட்டல்களில் தங்க எவ்வளவு செலவாகும், எந்த விமானத்தில் குறைந்த பணம் கொடுத்து பயணம் செய்யலாம், சுற்றுலா போவதானால் போகும் இடங்களைப் பற்றிய விபரம் போன்றவற்றை அறியலாம்.

இணையத்தளத்தின் ஊடாக கிரெடிட்கார்ட் பாவித்து வாங்குபவர் பணம் கொடுக்கும் போது அதற்கான பாதுகாப்பை எதிர்பார்ப்பார்கள். ஒருவரது கிரடிட் கார்ட் தகவல்களை எவராவது திருடி கார்ட்டில் உள்ள எண்ணைப் பாவித்து பணத்தைச் செலவு செய்ய முடியும். இதற்கான பாதுகாப்பு முறைகளை மின் வணிகம் உருவாக்கியுள்ளது.

சிறுகடை பிரபலமாகி, எதிர்பார்க்காத அளவுக்கு வாடிக்கையாளர்கள் வரத் தொடங்கினால் இடம் போதாமையால் நெருக்கடியும், சேவையில் தாமதமும் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

அதே போன்று இணையத்தளத்தின் ஊடாக வணிகம் செய்யும் போது பல பிரச்சனைகள் தோன்றவும் ஏதுவாகிறது.

வெப்பத்தை நாடும் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையைக் கண்காணித்து அதற்கேற்ப இணையத்தள இணைப்பின் கொள் திறனை அதிகரிக்க வேண்டும்.

நம் தமிழ் வணிகர்களிடையே மின் வணிகக் கலாச்சாரம் இன்னும் பெரியளவில் முன்னேறவில்லை.

விளம்பரப் பத்திரிகைகளைத்தான் தமிழ் வணிகர்கள் நம்பி வாழ்கின்றார்கள். காலத்திற்கு ஏற்றாற்போல தொழில்நுட்பத்தை பாவித்து புதிய முறைகளைக் கடைப்பிடித்து வியாபாரத்தை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சிந்தனை இவர்களிடம் கிடையாது.

இதற்கு முக்கிய காரணம் தொழில் நுட்பத்துறைமேல் உள்ள பயமாக இருக்கலாம். அல்லது, தொழில் நுட்பத்துறை சார்ந்த ஆலோசகர்களது ஆலோசனை அவர்களை நெருங்காமல் இருக்கலாம்.

ஆனால், எதிர்காலத்தில் எம் நாட்டிலும் முற்றிலும் மாறுபட்ட - நவீன மின் வணிக முறைகளைப் பாவித்தால் தான் வியாபாரம் செய்ய முடியும் என்ற நிலை தோன்றுவது திண்ணம்.

அதற்கு இப்பொழுதே நாம் தயாராவோம்...யூ

கவிதைத் தொடர் 1

கு.பா.தீபச் செல்வன்
யாழ் பல்கலைக் கழகம்.

# தென்றல் வரும் தெரு

பள்ளிக்கூடப் பாடமணிகள்
ஒலிக்கும்போது
வகுப்பறைவிட்டு
வெளியே போவோம்.
அது- நாம்
நித்தமும் போய்வரும்
பாதை.....
கூடவே என்
நண்பர்கள்
வழமையான
கூத்துக்களுடன்...
நித்தமும்
என் பார்வையில்
ஒரு வதனம்
தட்டுப்பட்டது,
அதன் அழகை
இதயம்
திட்டிக் கொண்டது...!

* * *

அது ஒரு
பொன் மாலைப்பொழுது,
முற்றத்தில்
பூவரசக்குத்தியிலிருந்தபடி,
என் உதடுகளை
புல்லாங்குழல் சுவைக்க
அதன் உதடுகளை
என் உதடுகள் சுவைக்க
பிறந்தது
ஒரு கானம் காற்றில்...
அப்போது,
இதய அரங்கில்
அவளது அழகு
மதிப்பிடப்படுகிறது-
ஒரு அசரீரியால்,....
சிவந்து விரிந்திருக்கும்
கொவ்வைப்பழ உதடுகள்...
கருமை குடி கொண்டு
நீண்ட மயிர்களையுடைய
கண்கள்...
அழகாக வளைந்த மூக்கு...
பளிச்சிட்ட கன்னம்...
நீண்ட கழுத்து...
மெல்லிடை
நிறைந்த மார்பு...
நியமாகவே
ஒரு அழகு தேவதை....!
அவள் வர்ணிப்புகள்
தேன் வடிக்க
என் இதய அரங்கில்
ஒரு இடை வேளை!!
நிஜ உலகத்தில்
நானிருக்க
நிலவு வந்துவிட்டது...!
இப்போது
இருளாத இரவு..!?

(இன்னும் போகலாம்....)

வலைவீச்...



இதிலென்ன விசேடம்
என்கிறீர்களா?
உற்றுப் பாருங்கள்...
உலகம் புரியும்.....!!!

## மாதிரி சந்தாப் படிவம்

வேடிக்கை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

ஆறு மாதம் ☐ ரூ. 200　　　ஒரு வருடம் ☐ ரூ. 400

இனை செலுத்துகிறேன்.

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தொலைபேசி : ..............................................................

நான் இத்துடன் .............................................. இலக்க காசுக்கட்டளையை வேடிக்கை என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திகதி:............................　　　கையொப்பம்:...............................

குறிப்பு: பணத்தினை நேரில், அல்லது காசுக்கட்டளையாக வேடிக்கை என்ற பெயரிற்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வேடிக்கை,**
**120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**

இச் சஞ்சிகை யாழ்ப்பாணம் அரசடி வீதி, 120ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வேடிக்கை பத்திரிகை நிறுவனத்தினரால் 26-12-2005 அன்று Smart Printersல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஓவியமும் காவியமும் - 06



உங்கள் கவிதையை அனுப்ப வேண்டிய முகவரி

வேடிக்கை
120, அரசடி வீதி
யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி
15.01.2006

உலகையும் உறவையும்
உள்ளங்கையில் அடக்கி
உன்னையும் என்னையும்
அடிமையாக்கி கொண்ட
உயிரற்ற சடப்பொருள் E- mail

*சுது , யாழ்ப்பாணம்*

'காதலித்துப் பார்
தாபாற்காரர் தெய்வமாவான்''
வைரமுத்து
திருத்திகொள்ளட்டும்...
இன்று
தெய்வம் மாறிவிட்டது..
மின்னஞ்சல் வடிவில்..

*-சஜீபன்*



ஓவியமும் காவியமும் - 05

புறாவின் தூதினால்
புனிதம் கண்டது காதல்
கடிதத் தொடர்பில்
கலக்கமற்றிருந்தது காதல்
கையடக்கத் தொலைபேசியால்
தொல்லைதந்த காதல் - இன்று
மின்னஞ்சல் பாவனையில்
மின்னலாய் வருகிறது...யூ

*சுவாதி, மல்லாவி.*

கற்காலம் விற்காலம் தாண்டி
கணினிக் காலம் வந்துவிட்டோம்யூ
தொழிநுட்ப வலையில் உலகை
தொங்கவிட்டோம்...
உலகில் நாமிருந்த காலம் மாற்றி
நம் கரத்தில் உலகை வென்றோம்.
வென்றது நாமா......?
வெல்லப்பட்டது நாமா?
மயக்கத்தில் மனிதன்.....யூயூ

*வாசுகி, யாழ்ப்பாணம்*

# புதிய ஆண்டில் புதிய சலுகைகள்!!

**அதிரடி விலைக்குறைப்பு! அதிசயிக்கத்தக்க சேவைகள்!**

உலகளாவிய ரீதியில் Web Development மற்றும் Software Development துறைகளில் துரித சேவைகள்.



கடைகள், புள்ளிவிபரம் சேர்ப்பவர்கள்
தனியார் வைத்தியசாலைகள்,
அரச நிறுவனங்கள், கல்வி நிலையங்கள்
போன்ற அனைத்து தரப்பினருக்குமான
தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான
புறோகிராம்கள் வடிவமைத்து தரப்படும்



Domain Registration 1000/- Per Year
(.com/ .net /.org/.biz/.info)
WebHosting 2000/- for 100 MB / Year
3000/- for 250 MB /Year
5000/- for 500 MB /Year
9000/- for 1 GB /Year
எமது அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும் Space
5 மடங்காக அதிகரிக்கப்படுகிறது

## உங்கள் இணையத்தளத்தை பார்ப்பவர் கண்கவரும் வகையில் வடிவமைக்க

கிராம சேவகர்களுக்கான
தமிழ் சொப்ட்வெயார் புறோகிறாம்
ஒன்றை வடிவமைத்திருக்கின்றோம்.
நீங்கள் சிரமப்படாமல்
றிப்போட்டுக்களை தயாரிக்க
விரும்பிய தகவல்களை விரும்பியவாறு பெற
ரூபா 8000 மட்டும்

நீங்கள் ஒரு வெப்டிசைனராக
அல்லது கம்ப்யூட்டர் புறோக்கிராமராக
ஆசையா? உங்கள் கனவு நனவாக...
பிரத்தியேகமான முறையில்
சிறப்பான வகையில்
அமைதியான சூழலில்
ரூ 5000 மட்டும் (40hrs No ad. fee )

**புதிய சேவையாக** உலகத்தமிழ் திருமணசேவை:மாலை.கொம்(maalai.com)

எமது ஏனைய சேவைகள்:

#Networking #Digital Designing #Computer Training
# Web Hosting #Domain Registration
# Software Development



இன்றே உங்கள் இடத்தினை இன்ரநெட் இல் உறுதிப்படுத்துங்கள்.
குறைந்த செலவுடன் நிறைந்த பாதுகாப்பு கொண்ட இடத்தில்
உங்களை நிலைநிறுத்தும் சந்தர்ப்பம்
உங்கள் வாசலில் வந்து வரவேற்கிறது.



**www.நீங்கள்விரும்பியது.com/org/net**

# SPEED IT NET

## Quick IT Service Providers

72/28 Panikkar Lane, Off Palaly Road,
(Near Higher Tech) Thirunelvely Jaffna

Web: http://www.speeditnet.com e-mail: biz@speeditnet.com Hotline: 0777 563 213